உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

புகழேந்திப்புலவர்

அருளிச்செய்த

நளவெண்பா

இது

சென்னைக் கிறித்தவ கலாசாலைத்

தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.

பல பிரதிகளுபங்களைக்கொண்டு

பரிசோதித்தது

சென்னை

ஆர். வெங்கடேஷ்வர் கம்பெனியாரால்

வெளியிடப்பட்டது

1923

விலை: அணா 6

[*All Rights Reserved*]

PRINTED BY THOMPSON & CO.,
AT THE "MINERVA PRESS," 33, POPHAM'S BROADWAY,
MADRAS.

பொருளடக்கம்

		பேஜ்.
i. முகவுரை	...	5 to 39
ii. நளவெண்பா	... ...	க
க. பாயிரம்	... ...	க
உ. சுயம்வர காண்டம்	... ...	ங
ங. கலிதொடர் காண்டம்	... ...	ஙஉ
ச. கலிநீங்கு காண்டம்	... ...	ஙஅ
iii. செய்யுண் முதற்குறிப்பகராதி	... ...	எச

முகவுரை

செந்தமிழ் மொழிக்கலைச் செல்வர்கூட் டுண்ணை
நளண்மடை போல வுளண்மகிழ் வுறுக்குஞ்
செம்பாக மாகவச் சீர்நளன் காதையை
வெண்பாவின் யாத்த வியத்தகு கவிஞர்

புகழேந்திப் புலவரென்பார். இவர் தொண்டை நாட்டிற் செங்கற்பட்டிற் கருகிலுள்ள பொன்விளைந்த களத்தூரில் துளுவவேளாளர் குலப்பாலாழியிற் கௌத்துவ மணியெனத் தோன்றி இளம்பருவத்திலேயே கல்வி கற்பான் புகுந்து செந்தமிழிலக்கிய விலக்கணக் கடலினுட்டிளைத்து வினையாடிக் கவிமதஞ் சொரியுங் களிறென வுலவா நின்றார். இத்தகைப் புலவர் பெருமான் செந்தமிழ் நாட்டிற் கேகி யுண்டுள்ள பாவலர் தம்மொடும் பயிறல் கருதிச் சோணாடு கடந்து,

"சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனுஞ்
செளந்தர பாண்டிய னெனுந்திரு நாடனுஞ்
சங்கப் புலவருந் தழைத்தினி திருக்கு
மங்கலப் பாண்டி வளநாடு"

சென்று, அவ்வயிற் கூடலம் பதிக்கட் பாண்டிய ராசனுலாதரிக்கப் பெற்று அவன்றன் வாயில் வித்துவாணு யமர்ந்தனர். இவரை யாதரித்த பாண்டியனே வரகுண பாண்டியனிரண்டாவ னென்பர்.

இவ்வாறு நந்தங் கவிஞர் கோமான் பாண்டியனைவக் களத்து வித்துவாணுயிருப்புழிச் சோணாட்டி லரசுரிமை

யெய்தி யாண்டுகொண்டிருந்த குலோத்துங்க சோழன் முத லாவனுக்குப் போதகாசிரியரும், அவன்றன் சமத்தான வித் துவானுமாகிய ஒட்டக்கூத்தப் புலவர் தமது மாணாக்கனை சோழராசற்குப் பாண்டியன் மகளை வதுவை பேசி முடிப் பான் மதுரைமா நகர்க்குப் போந்தனர். போந்து மாறனி டம் மன்றல் குறித்துப் பேசிக்கொண்டிருப்புழிப் பாண்டி யன் புன்முறுவல் கோட்டிடப் "பைந்தமிழ் வல்லீர்! நுந்தம் மன்னவன் எந்தங்குலத் திருமகளைக் கொளத்தகுங் குண வான் கொல்லோ? எம்மினு மவற்குள வேற்ற மென் கொலோ?" என்று வினையினன். என்னக் கேட்ட ஒட்டக் கூத்தர், சோழன் பெருமை தோன்றக்,

"கோரத்துக் கொப்போ கனவட்டா மம்மானை
கூறுவதுங் காவிரிக்கு வையையோ வம்மானை
யாருக்கு வேம்புனிக ராகுமோ வம்மானை
யாதித் தனக்குனிக ரம்புலியோ வம்மானை
வீரர்க்குள் வீரனெரு மீனவனே வம்மானை
வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ வம்மானை
பூருக் குறந்தைனிகர் கொற்கையோ வம்மானை
யொக்குமோசோ ணைட்டுக்குப் பாண்டிநா டம்மானை"

என்றதோர் பாடலைச் சொற்றனர். அங்ஙனம் அது கேட் டருகிருந்த நந்தம் புகழ்ந்திப் புலவர் மனம் பொறுது எழுந்து, அதற்கு மாறுகப்பாண்டியன் பெருமை தோன்ற,

"ஒருமுனுவ னேரியிலோ வுரைதளித்த தம்மானை
யொப்பரிய திருவிளையாட் டுறந்தையிலோ வம்மானை
திருவெடுமொ லவதாரஞ் சிறுபுலியோ வம்மானை
சிவன்முடியி லேறுவதுஞ் செங்கதிரோ வம்மானை
கரையெதிரில் காவிரியோ வையையோ வம்மானை
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ வம்மானை

பரவைபணிந் ததுஞ்சோழன் பதந்தனையோ வம்மானே
பாண்டியனுர் பராக்கிரமம் பகர்வரிதே யம்மானே''

என்றதோர் பாடலைப் பாடி அவர் கூற்றைக் கண்டித்தனர். அப்பொழுதே யொட்டக்கூத்தர்க்கு நம் புகழேந்திப் புலவர்மே லழுக்காறுண்டாயிற்று. பின்னர் ஒட்டக்கூத்தர், தக்கவாறு பலவற்றை யெடுத்துரைத்து, வழுதிமகளைச் சோழற்கு மணஞ்செய்தளிப்பான் நிச்சிதார்த்தஞ் செய்து போந்து, தம்மாணைக்கமைய சோழராசற்கு அச்செய்தியை யறிவுறுத்தார். உடனே சென்னியுந் தனக்குப் பிரதிநியாகச் சின்னாள் தான் மணவினை முடித்து வருங்காறும், அராசாளுமாறு ஒட்டக்கூத்தரைத் தன்னிட்டகத் திருத்திச் சேனைகளோடும் இட்டசனை பந்து வர்க்கங்களோடு மேனைய பரிவாரங்களோடும் மதுரை சென்று ஆலவாயிற் பெருமானடிகளை வணங்கி, மாறன் மகளை மணஞ்செய்து கொண்டனன். பின்னர்ப் பாண்டியன் தன்னருந்தவச் செல்வமகட்குத் தான் கொடுத்த பாரிபோக வரிசையுடன் நந்தம் பாவலர் தலைவர் புகழேந்திப் புலவரையும் அவளுக்கு ஏற்ற வமயங்களிற் றக்கவாறு புத்தி கூறும்பொருட்டு அனுப்பினன்.

அவ்வாறே யவர் சோணாடு போந்தமை யுணர்ந்தவொட்டக்கூத்தர் பழம்பகைமைபாராட்டி அவரை மாவித்துவானென மதித்தலின்றி யிரக்கந்துறந்து கறுக்கொண்டு ''இவன் முன்னர் நமக்குப் பெண்கொடுக்க வொட்டாது தகைத்து நுந்தங் குல முதலியவற்றைப் பாண்டியனெதிரிற் பழித்துரைத்தோன்'' என்று கோட்சொல்லி யரசனை நம்பு மாறு செய்து நந்தம் புகழேந்திப் புலவர் தம்பிரானைக் காவற்சிறையகஞ் செறித்தார். அவர் 'இது கர்மானுசாரம்' எனக் கருதி அச்சிறைக்கணிருந்து கொண்டு அனைருகே

தண்ணீர்க்குச் செல்லுறூஉம் மகளிர்தஞ் செவிக்கினிமை யாக, இக்காலத்தில் நங்கைப்பாட்டென வழங்குறூஉம் அல்லியரசி மாலை, பவளக்கொடி மாலை, புலந்தரன் களவு மாலை யென்னு நூல்களை யினிதிற் பொருள் விளங்குமாறு பாடி, அவர்கட்குக் கொடுத்த, அதுபற்றி யவர்கள் மனமகிழ்ந்து கொண்டுவந்து கொடுத்த கல்லாடி, பருப்பு முதலியனவற்றைச் சாளரவழியாய்ப் பெற்றுச் சமைத்துண்டு, மிகுந்ததைச் சிறைக் காவலர்க்கீந்து அவர்தமைத் தம்வயப் படுத்துக்கொண்டு காலங்கழித்து வருவாராயினர். இங்ஙனமிருந்து வருநாளில் ஒருநாட் சோழராசன் தனது பட்டத்தரசுவாவின்மீதிவர்ந்து வீதியிலுலா வரும்போது காவற்சிறைக் கோட்டத்தின் மேற்றளத்தில் நின்ற புகழேந்தியாரைத் தன்னுசிரியர் ஒட்டக்கூத்தருக்குக் காட்டி 'இவர் செந்தமிழ் மொழியிற் சிறந்த புலவரல்லரோ?' என்றுவினவலும் அவர் தம்மினு மிழிந்தார் புகழேந்தியாரென்பது பட அவரை யிகழ்ந்து புனைவிலிபுகழ்ச்சியணியாக,

"மானிற்கு மோவந்த வாளரி வேங்கைமுன் வற்றிச்செத்த
கானிற்கு மோவவ் வெரியுந் தழன்முன் கனைகடலின்
மீனிற்கு மோவந்த வெங்கட் சுறவமுன் வீசுபனி
தானிற்கு மோவக் கதிரோ னுதயத்திற் ரூர்மன்னனே"

என்றமைத்தார் பாடலைக் கூறினர். அது செவிக்கொண்ட புகழேந்தியார் 'அப்பாடலை வெட்டிப் பாடவோ ஒட்டிப் பாடவோ?' என்று சோழனைக் கேட்டிழி, அவன் 'ஒட்டியே பாடுதி' னெனலும் நந்தம் ஆசுகவிவல்ல அறிஞர்,

"மானவ ணைந்த வாளரி வேங்கையும் வற்றிச்செத்த
கானவ ணைவ் வெரியுந் தழலுங் கனைகடலின்
மீனவ ணைந்த வெங்கட் சுறவமும் வீசுபனி
தானவ ணைக் கதிரோ னுதயமுந் தார்மன்னனே"

யென்றுபாடி யொட்டக்கூத்தர்தம் மேக்கழுத்தம் போக்கினர். சோழன் அக்கணம் புகழ்ந்திப்புலவரிடம் மதிப்புங் கருணையுங் கொண்டனனேனும் தனக்கு ஒட்டக்கூத்தரிடத்திலுள்ள அபிமானத்திலு லவரைச் சிறைநீக்காதே போயினன்.

இனி யிதுநிற்க. பாடல் பாடிக்கொண்டுவரும் பாவலர்க்குச் சோழராசன் கண்டபடியெல்லாம்பரிசிலளிப்பதை யொட்டக்கூத்தர் தடுத்துவிட்டு இராச சமஸ்தானத்தில் வெகுமதி பெறக்கருதிப் போதரும் வித்வான்களைச் சிறைக் கோட்டத்திட்டு, தேவி கொலுவீற்றிருக்கும் நவராத்திரி யுற்சவகாலத்தில் அவர்தமை யழைப்பித்துத் தாம் பல்வகைப்பட்ட கடினக்கவிளழுப்பி, அவற்றைத் தக்கவாறிறுக்கத்தெரியாரை யவமதித்து வந்தனரேயன்றி, அந்தோ! அவர்தமை யிவ்விருவராகக் குடுமியோடு குடிமிமுடிந்து இறங்கி நிற்குமாறு தேவிமுன்னர் நிறுத்திப் பிடாரிக்கிரட்டைக்கடா வெட்டுமாறுபோலச் சிரிதேதனும் அருளின்றி அன்னார்தலைகளைப் பதைக்கப்பதைக்க வெட்டிப்பலிசெலுத்தும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். இத்தகைய கடு வழக்கத்தை யொட்டக்கூத்தர் மேற்கொண்டது இக்காலத்திற்போலவே யக்காலத்திலும் புல்லறிவாளர் பலர் பண்டிதர், மாபண்டிதர், கவி, கவிராயர், பாவலர், நாவலர், அட்டாவதானி, வித்துவான், வித்துவச்சிரோமணி யென்பன வாதிய பல்வகையவாய பட்டப்பெயர்களை யெவருங் கொடுக்கவேண்டிய அவசியமின்றித் தாமே சுயமாக வைத்துக்கொண்டு தாந்தான்றிகளாய்த் திரியவொட்டாத வண்ணம் கல்வியி னருமை பெருமைகளையு மேற்றத்தாழ்வுகளையுந் தெரிக்குறாவுடம் நல்லவழியென வுள்ளவாறே நம்பியே போலும்! இதுபற்றியன்றே,

"நன்றி மறப்பது நன்றன்று" என்ற மூதுரைப்படி நன்றியை என்றும் மறவாது வாழ்ந்தன ரென்பதை அவர் வரலாற்றில் ஆய்ந்து காணலாம். தம்மை ஆதரித்த சோழ மன்னர் மூவருடைய புகழ் விளங்க மூவருலாப் பாடியதும், தக்கயாகப்பரணியில் இராசராசனை வாழ்த்தியதும், காங்கேயன்மீது நாலாயிரக்கோவை பாடி அவன் சீர்த்தியென்றும் நின்று நிலைபெறச் செய்ததும், ஈட்டியெழுபது பாடிச் சென்குந்தர் வீரச்செயலைத் தெரிவித்தமையும், திருச்சிற்றம்பலமுடையான் பெருமாள்நம்பி, திரிபுவனச் சோழன், காவிரிப்பூம்பட்டினம் வாழ்ந்த செல்வர் சிலர் இவர்களைத் தாம் பாடிய நூல்களில் ஒவ்வொரு சமயத்தில் உயர்த்திப் பாடியதும் இவர் நன்றியறிவை நமக்குத் தெரிவிக்கின்றன.

"இடுக்கட் புண்படு நிரப்புக் கொண்டுழன்
றிரக்கச் சென்றவின் றெனைக்குச் சிங்களந்
திருக்குற் றஞ்சும்வெஞ் சினத்துச் செம்பியன்
றிருக்கைப் பங்கயஞ் சிறக்கத் தந்தன
படுக்கக் கம்பளம் பரக்கக் குங்குமம்
பதிக்கக் கங்கணம் பரிக்கக் குஞ்சரம்
கடுக்கக் குண்டலம் கலிக்கச் சங்கினம்
கவிக்கப் பஞ்சரங் கலிக்கத் தொங்கலே"

என்ற கவியாற் சோழமன்னன் பல பரிசில் வழங்கிப் பாராட்டினன் என அறிகின்றோம்.

"பத்துக்கொண் டனதிக்கும் பதறிப்போய் முடியப்
பைம்பொற்றூ ரகைசிந்தப் பகிரண்டத் திடையே
மத்துக்கொண் டமுதத்தைக் கடையாழித் திருமால்
வடிவாகிப் புவிகைக்கொண் டருள்மாலை பரணை
முத்துப்பந் தினிற்குங் குருவேலைக்குஞ் சினவேன்
முருகற்கும் பொதியக்கோ முனிவற்கும் பதுமக்
கொத்தற்குஞ் சடிலக்குந் தளருக்கு மல்லாற்
கூழைத்தண் டமிழுக்கேன் கொடியுங் காளமுமே"

என்ற இக்கவியாற் சோழமன்னன் பரிசில் வழங்கியபோது தன் பணியைத் தெரிவித்துத் தெய்வத்தன்மையுடைய கவிஞர்களைப் பாராட்டி தன் புலமையைத் தாழ்த்தியது கண்டோம். இதனாற் கல்விச் செருக்குடையரல்லர் இவரென வுங் கண்டோம்.

இராசராச சோழனுலாப் பாடி அரங்கேற்றியபோது அவ்வரசன் இவருக்குப் பரிசிலாக ஒவ்வொரு கண்ணிக்கும் ஆயிரம் பொன் வழங்கினன் என அறிகின்றோம் "தெள்ளித்தம், மூன்னுயகரிலவன் மூதுலாக் கண்ணி தொறும், பொன்னுயிரஞ் சொரிந்த பூபதியும்," (சங்கர சோழனுலா) எனவும் "கூடல் னராதிபன் கூத்தனெதிர் நண்ணினோர் கண்ணிக் கொராயிரம் பொனீந்த வுலாவும்" (தமிழ் விடுதூது) எனவும் வந்தன சான்றாகும்.

"டோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
யானை முன்வந் ததனிர்த்தவ ரைடா?"

எனலும், அச்சுறுக்குயவன் புலவரை நோக்கி,

"கூனை யுங்குட முங்குண்டி சட்டியும்
பானை யும்பண்ணு மங்குசப் பையல்யான்"

என மற்றை யீரடிகளையும்பாடி முடித்து விடைகொடுத்த லும் ஒட்டக்கூத்தர் வெட்கி, அவனைத்தனியே வேற்றிடம் நீடு மற்றொருவனை விளித்தலு மொருகண் பொட்டை யான வமபட்டன் போந்து நின்றான். அவனை நோக்கிய வொட்டக்கூத்தர்,

"விண்பட்ட கொக்குவல் லூறுகண் டென்ன விலவிலக்கப்
புண்பட்ட நெஞ்சொடு மிங்குனின் றுப்பொட்டை யாய்புகலாய்"

எனலும் சிறிதும் பின்வாங்காத மயிர்வினைஞன்,

"கண்பொட்டை யாயினு மம்பட்ட ணைக்கவி வாணர்முன்னே
பண்பட்ட செந்தமிழ் நீயுந் திடுகிடப் பாடுவனே"

யென்று எடுத்தபாட்டை முடித்துவிடுத்தான். அதுகேட்ட புலவர் வெகுண்டனரேனும் அவனை யொன்றுஞ் செய்யக் கூடாமையா லவனை யப்புறம் நிறுத்திவிட்டு இன்னொரு வனை விளித்து முன்போலக் கவிசொல்லி வினவாமல் வாசக நடையாய் அவனை 'நீ யார்? உன் பெயர் குல வரலாறுகள் யா? சொல்' என்றுகேட்டவளவில் எதிரேநின்ற கொல்லன்,

"செல்வன் புதல்வன் றிருவேங்கடவன் செகத்குருவாங்
கொல்லன் கவியைக் குறைசொல்லு வோரைக் குறடுகொண்டு
பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்ட மாட்டிப் பகைவர்முன்னே
யல்லும் பகலு மடிப்பேன் கவியிருப் பாணிகொண்டே"

என்றுபாடி விடைபகர்ந்தான். இவனையு மப்புறப்படுத்து வேறொருவனை விளித்தலும் போந்துநின்ற வேளாளனைப் பார்த்து 'மாவித்துவானுய நம்முன்னர் அற்பனை நீயுமொரு

இ

ஆக்குவித்தோன் ஆகிய

இரண்டாம் இராசராச சோழன் வரலாறு

இரண்டாம் இராசராசசோழன் தக்கயாகப் பரணி யென்ற இந் நூலைப் பாடுவித்தோன் ஆவன். விக்கிரம சோழனுடைய மைந்தன் குலோத்துங்கன். குலோத்துங்கன் மைந்தன்தான் இராசராசசோழன் II. இவன் கி. பி. 1146 ஆம் ஆண்டில் முடிசூடி 1173 வரை யரசு புரிந்தான் என்று கூறுவர். சிலர் 1162 வரைதான் அரசு புரிந்தான் என்பர் மறைந்தகால மட்டும் தெற்றெனத் தெரிந்திலது.

இராசகெம்பீரன், இராசபுரந்தரன், கண்டன், குலதீபன், சனநாதன், சொக்கப் பெருமாள், தெய்வப் பெருமாள், வரராசராசன் பரகேசரிவர்மன் திரிபுவன சக்கரவர்த்திகள், கோநேரின்மைகொண்டான் என்ற பட்டப் பெயர்களும் இவனுக்கு வழங்கின. காவிரிப்பூம்பட்டினம், பழையாறை, உறையூர், கங்கை கொண்ட சோழபுரம் இவை தலைநகரம் ஆகக்கொண்டு தனியரசு புரிந்தான். புவன முழுதுடையாள், தரணி முழுதுடையாள், உலகுடை முக்கோக்கிழானடிகள், அவனி முழுதுடையாள், தென்னவன் கிழானடிகள் என ஐவர் மனைவியர் இருந்தனர் என்பதும், அவர்களுட் பட்டத்துத்தேவி புவன முழுதுடையாள் என்பதும், நான்கு தலைநகரங்களிற் சிறந்தது காவிரிப்பூம்பட்டினம் என்பதும் மெய்க் கீர்த்தி இரண்டால் விளங்குகின்றன.

"பூ மருவிய புவிமாதும்" "பூ மருவிய பொழிலேழும்" எனத் தொடங்குவன இரண்டும் இவன் மெய்க் கீர்த்திகள். அவற்றுள் "ஆதி யுகங் கொழுந்துவிட்டுத் தழைத்தோங்கக் கோடாதறங் குளிர்தூங்க,

மாரி வாய்த்து வளஞ் சுரக்கத் தாரணியோர் பிணி நீங்க,
நல்லோர்தங் கற்புயர நான்மறையோர் தொழிலுயர
எல்லோருந் தனித்தனியே வாழ்ந்தனமென மனமகிழ்ந்து
ஒருவருடலெருவர்க்கு மொன்றிலுடலென்றுக்கும்
வெருவருபகை மனத்தின்றி விழைந்துகாத லுடன்சேர
இந்திரன்முதற் றிசாபால ரெண்மருமொரு வடிவாகி
வந்தபடி தரைநின்று மனுவாணை தனிநடாத்தித்
தந்தையிலோர்க்குத் தந்தையாகியுந் தாயிலோர்க்குத் தாயாகியும்
மைந்தரிலோர்க்கு மைந்தராகியும் மன்னுயிர்கட் குயிராகியும்
....அரசியற்கை முறைநிறுத்தி"

எனவரும் அடிகளால் இவன் இறைமாட்சியும் குடியாட்சியும் சிறப்பாகத் தோன்றுகின்றன இவன் காலத்தில் வாமமதத்தினர், சைவர், வைணவர், பாசுபதர் என்ற பல சமயத்தவருங் கவலையின்றி வாழ்ந்தனர் என்பதைக் கல்வெட்டுக்களாற் காண்கின்றோம்.

இவன் ஆளுமைக் காலத்தில் கூத்தர் மிகவும் முதுமைப் பருவமுடையவராக வாழ்ந்தனர் என்ற வரலாறு மெய்யாம். ஆசிரியர் ஓரமயம் இருக்கையினிலாறு எழும்பொழுதோ, எழுந்து நடக்கும் பொழுதோ தளர்ச்சியுற்று விழுவதுகண்டு இம்மன்னர் பெருமான் "நாதனே

இவ்வாறெல்லாம் ஒட்டக்கூத்தராற் புகழேழந்திப் புலவ ரெய்திய விடர்ப்பாடுக ளனேகத்தையு மொருநாட் சிலதிப் பெண்டிராற் றெரிந்துகொண்ட சோழராசன்மனேவி மிக்க மனவருத்தமுற்றுத் தன்னுயகன் ஒட்டக்கூத்தப் புலவர் கைச் சூத்திரபாவையாகி யியாயமுங் கருணையுமின்றித் தன் தந்தையின் சமத்தான வித்துவாகிய புகழேழந்திப் புலவ ரைச் சிறைக்கொட்டத்திரீஇயினனென்று கருதி யரசன் மீது கோபங்கொண்டு புகழேழந்தியாரைச் சிறைநீக்க வெண் ணித் தன்றலிவன் பள்ளியறைக்குப் போதரும்போது தா னுள்ளேயிருந்து கதவினைத் தாழிட்டாள். அஃதுணர்ந்த வண்ணல் அவளைப் பலவாறு வேண்டியுங் கதவு திறவாமை யால் அவளது ஊடலுணிப்பா ரெட்டக்கூத்தப் புலவரை யுய்த்தனன். அவர் சென்று,

"நானே யினியுன்னை வேண்டுவ தென்கொ னளினமலர்த்
தேனே கவாடந் திறந்திடு வாய்திற வாவிடிலோ
வானே றனைய விரவி குலாதிபன் வாயில்வந்தாற்
றூனே திறக்குநின் கைத்தல மாகிய தாமரையே"

என்று பாடிய வளவில் அது கடுமையா யிருந்தமை குறித்து அவள் 'ஒட்டக்கூத்தர் பாட்டுக் கோட்டைத் தாழ்ப் பாள்' என்று மொழிந்து முன்னினும் பலமாகத் தாழிட் டாள். இது செவி சாத்திய சோழர்பிரான் 'புகழேழந்திப் புலவரை யாம் நெடுநாளாகச் சிறையகத்திட்டு வருத்திய மையால் நம்தேவிக்கு ஊடலுண்டாயிற்று' என்று உய்த் துணர்ந்து அக்கணமே புகழேழந்திப் புலவரைச் சிறைநீக்கி யரசியினை பிணக்கந் தணிக்குமா றேவலும், அவர் அந்தப் புரஞ்சென்று பள்ளியறை யருகர் நின்று,

"ஓழையொன் றிரண்டு வகிர்செய்த நுண்ணிடையேந்தியபொற்
குழையொன் றிரண்டு விழியணங்கே கொண்ட கோபந்தணி

மழையொன் றிரண்டுகைம் மாறு பரணனின் வாயில்வந்தாற்
பிழையொன் றிரண்டு பொறுரோ குடியிற் பிறந்தவரே”

என்று பாடலுங், கேட்ட இராசமாதேவி யுடனே மகிழ்ச்சி யடைந்து ஊடலொழிந்து கதவுந்திறந்தனள். அன்று தொட்டுப் புகழ்ந்திப் புலவர்க்கு நற்காலம் பிறந்தது; சோழராசனு மவரை யன்புடன் பாராட்டிவந்தனன். ஆயினும் அவர் தம்மைமக்கண்டு ஒட்டக்கூத்தருக்கு அழுக்காறு முதிர்வதிணையும், அவ்வொட்டக்கூத்தர்தம் பேச்சைக் கேட்டு அவர் கூறியாங்கே யரசன் நடப்பதனையும், அங்ஙனமே நிலையாயிருக்க விரும்புதலின்றி யரசனுமதி பெற்று அச்சோணாட்டையே சேர்ந்த மள்ளுவ மென்னுஞ் சிற்றரசு நாட்டின்கண் முரணூரி லிருந்து அரசு செலுத்தி வந்த சந்திரன் சுவர்க்கி யென்னுங் குறுநில மன்னனிடத்துச் சென்று அவன்றன் வாயில் வித்துவானு யமர்ந்திருந்தார்.

இவ்வாறவர் அமர்ந்திருக்குங் காலத்தே சம்ஸ்கிருத மொழியினுள்ள நள சரித்திரத்தை வடமொழி வல்லுநர் பிரசங்கிப்பக் கேட்டுக்கொண்டு வீற்றிருந்த சந்திரன் சுவர்க்கி நந்தம புகழேந்தியாரை நோக்கி ‘நீவிரிதனைத் தெந் தமிழ்ப்பாவினிற் காப்பியமாகயாத்தல் வேண்டும்’ என்றான். வேந்தனேவலையைச் சிரமேற் கொண்ட கவிஞர் ‘புலவர்க்கு வெண்பா புலி’ யெனச் சிறப்பித் தோதப்பெறாவும் வெண் பாயாப்பினிற் செவ்வனே புனைந்து யாத்து யாவருங் களி கூர்ந்து சிரகர கம்பஞ் செய்யுமாறு அவனதவைக்களத்தே யரங்கேற்றினர்.

இது கேள்வியுற்ற குலோத்துங்க சோழன் மிக்க மரியாதையோடும் புகழேந்திப் புலவரை வரவழைத்து உப

சரித்துத் தனதவைக்களத்தே யவர்பாடிய நளவெண்பா வைப்பிரசங்கித்து மீட்டு மொருமுறை யரங்கேற்றுமாறு வேண்டினன். அன்னணமே புகழேந்தியாரும் நாடோறும் பிரசங்கஞ் செய்துகொண்டு வாரா நிற்புழி,

"மல்லிகையே வெண்சங்கா வண்டே வான்கருப்பு
வில்லி கணைதொடுத்து மெய்காப்ப—முல்லைமலர்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது"

என்னும் பாடலைச் சொல்லலும், அவை நடுவணிருந்த ஒட்டக்கூத்தப்புலவர் எழுந்து 'இதன்கண் மல்லிகை யரும்பினைச் சங்காகவும் வண்டினைச் சங்கூதுவோனாகவும் உருவகஞ் செய்துரைத்தது உசிதமே யெனினும் ஒக்குமாறன்றென்பது தேற்றம்! யாங்ஙனமெனிற் சங்க வாத்தியம் வாசிப்போர் அதனடியினை வாயில் வைத்தூதாநிற்பக் கண்டும் நீவிர் அதற்குமாறாக மேற்புறத்தூதும் வண்டினை யன்னணங் குறித்தது இயற்கைப் பொருளுணர்ச்சி யின்மைக் குற்றமாம்' என்றார். என்னக்கேட்ட வின்றமிழ்ப் புகழேந்திப் புலவர் 'கட்குடியனுக்கு வாயென்றும் மற்றோன்றென்றுந் தெரியுமோ?' எனச்சாதுரியமாக மறுமொழிதந்து நின்றார். இன்றுமிதுபோலவே யொட்டக்கூத்தர் இடையிடையே செய்துநின்ற ஆட்சேபங்களை யெல்லாம் புகழேந்தியார் அவ்வக்கணமே தக்கவாறு நிராகரித்துத் தம்பக்கங்களை நிறுவுவாராயினர். கம்பர் முதலிய வித்துவான்கள் நம் புகழேந்திப் புலவர்க்குச் சார்பாய் நின்று புகழ்ந்தார்கள். எனினும் ஒட்டக்கூத்தர் இவ்வாறு நாடோறும் தம் பாடலிற் குறைகூறலைப் புகழேந்திப் புலவர் பொறுக்கவில்லை. இவ்வொட்டக்கூத்தரை யெவ்வாறேனு மொழித்துவிடுதலே

தீயர்க்கேயாயினமையால் திங்கணைமந்து நின்றது. இங்ஙனம் நெஞ்சுபோனபடி நீள நிலைத்திருந்த இவன், ஒரு நாள் வேட்டை மேல் விரும்பி வனத்திடையடைந்தான். அங்கு ளை மன்னன் கலிவயத்தணைப் பிரிந்து போனமையால் அவனுடைய அருமைத் திரு மனைவியாகிய தமயந்தி பெரிய ஓர் அரவின் வாய்ப்பட்டு அழுது புலம்பினாள். அவ்வமயம் இவன் தணிந்து போய் அப் பாம்பினைத் துண்டஞ் செய்தான். அப்பதிவிரையை உயிர்பிழைத்து கன்றி பாராட்டி இவனைத் துதிசெய்து நின்றாள்.

ஆருயிரும் நாணும் அழியாமல் ஐயாஇப்
போரவின் வாயிற் பிழைப்பித்தாய்—தேரின்
இதற்குண்டோ கைம்மா றெனவுரைத்தாள் வென்றி
விதர்ப்பன்றான் பெற்ற விளக்கு.

அம்மாதர் திலகம் மனங்குளிர்ந்து இங்ஙனம் போற்றி நின்ற பொழுது இப்பேதைமகன் நிலையறியாமல் அவள்மேல் காதல் கொண்டான். இப்புலைமகன் நிலைமையை அத் தலைமகள் நோக் கினாள். தந்தையே! யான் உன் புதல்வி என்றாள். மகள் என்று சொல்லியும் இவ் அறிவிலி கேளாமல் அவ் அழகினை நெருங்கி என்னுடன் வருக என்று அழைத்தான். இவ்வெய்ய மொழி யைக் கேட்டவுடன் ஐயகோ! என்று அழுது கவிழ்ந்தாள். இவன் யாதும் இரங்காமல் அருகில் அணைந்தான. அவள்மறுகி ழுழுனை. விடுவதில்லை என்று இக்காழியவனுடை விளைந்து தொடர்ந்தான். அக் கற்புத் தெய்வம் கனன்று விழித்தாள். உடனே பக்கன் றெரிந்து இவன் பாழாய்விழுந்தான். இபபதிமகன் செய்கையைப் புலவர் திலகராகிய புகழேந்திப புலவர் அழுதுறக் கூறியுள்ளார். அவ் அருமைப் பாடலை இதனடியில் காண்க.

இந்து நுதலி எழில்நோக்கி எதிர்காதன்
சிந்தை கருதிச் சிலைவேடன்—பைங்காடி நீ
போதுவா யென்னுடனே என்றான்; புலநடுக்
கேதுவாய் நின்று னெடுத்து. (க)

வேடன் அழைப்ப விழிபதைத்து வெய்துயிரா
ஆடன் மயில்போல் அலமரா—ஓடினள்
அறிலாமாகச் சுரிகுழல்வேற் கண்ணினீ
ராறிலா மாக அழுது. (உ)

"விக்கா வுக்கா வித்தா விப்போய் விட்டார் நட்டார் சுட்டீர் புக்கா
ரிக்கா யத்தா ஸைப்பா டுற்றே யிற்றே டிப்போய் வைப்பீர் கிற்பீ
ரக்கா டப்பேய் தொக்கா டச்சூ ழப்பா டத்தீ வெப்பா டப்பூ
ணைக்கா டக்கா னத்தா டப்போ நெய்த்தா னத்தா னேச்சே வித்தே"
"தற்கோ லிப்பூ சற்பா சத்தே தட்டா மற்சா கைக்கே கிற்பீர்
மூற்கோ லிக்கோ லிப்பூ கித்தே முட்டா மற்சே வித்தே கிற்பீர்
வற்றூ நெட்டோ டைப்பா ரைச்சேன் மைப்பூ கத்தே றித்தா விப்போய்
நெற்றூ ளுற்றூ லப்பா கிற்சேர் நெய்த்தா னத்தா னேச்சே வித்தே"

என்ற பாடல்களைப் பாடினர்கள். இனி யிவற்றி னேற்றத் தாழ்வுகளாருபுற மிருப்ப, இச்செய்திக்கு மாறுக ஒட்டக் கூத்தரைப் புகழ்ந்திப் புலவர் வென்றன ரென்று,

"நூலார் கலைவல்ல செம்பியன் கேட்க நொடித்தமிக்க
கோலா கலவெஞ்சக் கூத்தினை யன்றுதற் கோவியென்று
மேலார் கவிசொல்லி நெய்த்தானத் தேசென்று வென்றுகொண்ட
மாலார் களந்தைப் புகழ்ந்தி யுந்தொண்டை மண்டலமே"

யென்ற தொண்டை மண்டல சதகச் செய்யுள் முழங்சா கிற் கும்.

இன்னுமொரு காலத்தில் திருக்குறுங்குடி யென்னுந் தலத்தினிடத் தெழுந்தருளி யிருக்குந் திருமாலின் மீது வல்லோனை மிக்க கட்டளைக்கலித்துறை யாப்பிற் பாடு மாறு கேட்டலும் ஒட்டக்கூத்தரும் புகழ்ந்தியும் கிரமே,

"தீக்குளைட் டுக்கயந் தூக்கழுற் றுத்திடுக் கிட்டலற
மைக்கடற் குட்சரந் தைக்கவிட் டோற்கிட மாமதுர
இக்குழுற் றிக்கணைச் சற்றுவிட் டத்தெறித் திட்டமுத்தைச்
சொக்குமொக் கிக்கக்கி விக்குமச் சோலைக் குறுங்குடியே"
"எட்டெழுத் தைக்கருத் திற்குறித் திட்டுளித் தம்பரவுஞ்
சிட்டர்கட் குத்திருப் பொற்பதத் தைச்சிறக் கத்தருமவ்
வட்டவெட் டைப்பணி மெத்தையத் தற்கிடம் வாரிசப்பொ
குட்டினத் தூக்குலங் தத்திழுத் தீனுங் குறுங்குடியே"

யென்ற பாடலகளைப் பாடினர். ஒன்றற்கொன்று உயர் விழிவுகளின்றிச் சிறந்து விளங்குறாஉம் அச்செய்யுட்களை மன்னவன் கேட்டு மகிழ்ந்து இருவர்க்கு மொப்பச்சன் மானஞ் செய்து பாராட்டிவந்தனன்.

இஃதிவ்வாறுக ஒருநாள் உறையூரின்கட் சோழரா சன் ஒட்டக்கூத்தரொடும் புகழ்ந்தியாரொடுமை அரசமறு கிற் கானடையாய் உலவிச் செல்லா நிற்புழி, ஒரு வீட்டுத் தெருத்தெற்றியில் இருதாள்களையும் நீட்டிக்கொண்டு வீற் றிருந்த ஒளவையார் சோழனைக் கண்டவுடனும் ஒரு காலை மடக்கிக் கொண்டனர். அவளருகிற் போதரும் புகழ்ந் திப் புலவரைப் பார்த்தவளவின் மற்றைத்தாளையும் மடக் கிக் கொண்டனர். அதன்பினர் அவர்களை யடுத்துப்போந்த ஒட்டக்கூத்தரைக் கண்டவுடனே அவரைக் கர்வபங்கஞ் செய்வான் கருதி யிருதாள்களையு மொருங்கே நீட்டினர். இதுகண்ட ஒட்டக்கூத்தர் வெட்கமும் வெகுளியு முடை யராய்த் தமிழ்முதாட்டியாரை நோக்கி 'எம்மை இன்னணம் அவமதித்தது என்கொலோ?' என்று வினவலும், அவர் 'மன்னன் நாட்டுத்தலைவனுகளின் அவற்கொருதாளையும், மன்னனிற் கற்றோன் சிறப்புடையனுகளிற் பாட்டுத்தலைவ ராய புகழ்ந்திப்புலவர்க்கு இருதாளையும் மடக்கினேம்; நீயோ புலமையோ னெனினும் புல்லியோனுய்ப் வீண்பெரு மை பாராட்டுவோனுயினை யாதலின் இருதாளையும் நீட்டி னேம்' என்றுகூறி 'மெய்யாகவே நீயும் புகழ்ந்திப்புல வர்க்கு இணையாவையேற் சோழனையும் அவனது நாட்டை யுஞ்சிறப்பித்து மதிப்பெயரா மொருசொல்லி யொருபாடலி னீற்றடிக்கண் மும்முறைபெய்து பாடுதி; நின்னுற்றல் காண் குதும்' என்றலும், ஒட்டக்கூத்தர்,

"வெள்ளத் தடங்காச் சினவாளை வேலிக் கழுகின் மீதேறித்
தூள்ளி முகிலைக் கிழித்துமழைத் துளியோ டிறங்குஞ் சோணாடா
கள்ளக் குறும்பர் குலமறுத்த கண்டா வண்டர் கோபாலா
பிள்ளை மதிகண் டிப்பேதை பெரிய மதியு மிழந்தாளே"

னன்று பிள்ளைதாமெனவும் பேதை ஔவையாரெனவுந் தம்மறிவுகண்டு ஔவையார் அறிவிழந்தாரெனவும் ஔவையாரைக் குறிப்பினிகழ்ந்து பாடினர். அஃதுணர்ந்த ஔவையார் ஒட்டக்கூத்தரை நோக்கி 'ஒட்டா! ஒரு மதிகெட்டாய்!' என்றுகூறி, கையாடி, உடனே புகழ்ந்தியாரை நோக்கி 'யாஞ்சொற்றுங்கு நீவிர்பாடுமின்' எனவும் புகழ்ந்திப் புலவர்,

"பங்கப் பழனத் தழுழுழவர் பலவின் கனியைப் பறித்தென்று
சங்கிட் டெறியக் குரங்கினீர் தினைக்கொண் டெறிபுந் தமிழ்நாடா
கொங்கர்க் * கமரா வதியளித்த கோவே ராச குலதிலகா [லே"
வெங்கட் பிறைக்குங் கரும்பிறைக்கு மெலிந்தப் பிறைக்கும விழிவே

என்று ஒருபாட்டு மும்முறை பிறையெனுஞ் சொல்லியிறுதியடியிற்பெய்து பாடினர்; இதுகேட்டு ஔவையார் புகழ்ந்திப்புலவரைப் பெரிதுங் கொண்டாடினர். அன்று முதல் ஒட்டக்கூத்தர் தருக்கடங்கி யுறுதிகூடி யிருந்தனர் என்றுரைக்குப.

இனிப் புகழ்ந்திப் புலவரிருந்த காலமின்னதென வரைந்து சுட்டுவாம். ஒருசாரார் இவர் கம்பர் காலத்தினாதலின் "எண்ணிய சகாத்த மெண்ணூற் றேழன்மேல்" என்ற கம்பராமாயணச் சிறப்புப்பாயிரச் செய்யுளிற் கூறியாங்கு இவரது காலம் இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரத்துப் பதினைன்கு வருடங்களின் முன்னரென்பதாமென்ப. மற்றுரு சாரார் கம்பர்தங்காலம் சாலிவாகன சாகத்தம்

* "கொங்கைக்" என்பதூஉம் பாடம்.

807-ஆம் யாண்டென்பது உண்மை வழியான் நோக்கு மிடத்து நிலைதில்லாது; யாங்ஙனமெனில் ஆங்கில மொழியின் கண் அச்சிட்டுப் போதரும் † இந்தியபுராதன கலைஞன் என் னும் மாதாந்தப் பத்திரிகையினிடத்துக் கி. பி. 1063-ஆம் யாண்டினிறுதியிற் பட்டத்திற்குப் போந்த இராசேந்திர சோழனிரண்டாவ னென்ற குலோத்துங்க சோழன் முத லாவனும், கி. பி. 1127-ஆம் யாண்டு அரசுரிமை யெய்திய குலோத்துங்கசோழ னிரண்டாவனு மென்ற ஈரரசர் கூறப்பட்டுளர்; அவர்தமுட் குலோத்துங்க சோழன் முத லாவனைதுகாலமே நமது கம்பர்தங்காலமுமே யாமென்பது பலர்க்கு மொப்ப முடிந்ததாம்; ஆகவே கம்பரது காலம் பதினேரா நூற்றாண்டின் பிற்பகுதி யென்பது தானேபோ தரும்; இதனைத் தென்னிந்திய சிலாசாதன வராராய்ச்சிப் பத்திரிகையின் நான்காவது சம்புடத்தில் 205-ஆம் பக்கத் திற் கண்ணுங் காண்கவென்பாராயினர். இனிக் ‡ கால்ட் வெல்துரை கூறுமாறு கம்பர்காலம் குலோத்துங்க சோழ னிரண்டாவன் காலமெனிற் படுமிழுக்கென்னை யென்று கூ றுவரின்னெருசாரார். இவையாவற்றினும் நடுவட் கூறியே கூற்றே வற்புடைத்தாம். என்னை? “எண்ணிய சகாத்த மெண்ணூற்றேழுன் மேல்” என்பது இடையிற் சேர்க்கப் பட்ட சொருகுகவியேயா மென்பது, கம்பர் காலத்திருந்த வரசன் விசயாலய னென்பவனன்றிக் குலோத்துங்கனென் பதனை, விளங்கும். இப்பாடலிற் குறித்த காலத்துப்பட்ட மெய்தியவன் விசயாலயனேயா மென்பது சிலாசாதனவரா ராய்ச்சியினுற் பெற்றும். இனிக் கம்பர்காலம் கால்ட்வெல் துரை வரையுமாறு கொள்ளத்தக்கதன் றென்பதுஞ் சிறிது

† The Indian Antiquary, Pages (296-299,) October 1894.

‡ Bishop Caldwell.

தெரிப்பாம். கம்பரொட்டக் கூத்தரது காலங்களிற் சோழ ராசனது தலைநகராக உறந்தை கருஞைசகளை கூறப்படுவன வாமன்றி அவற்றினின்றும் விலகி அரசனது வாசத்தா னங் காஞ்சியாயிற்றென்பது கூறப்பட்டாமையாலும் குலோத் துங்க சோழனிரண்டாவனிருந்தராசாண்டது காஞ்சியே யா தலாலும் பிறவாற்றாலும் அது புரையுடைத்தென்பது. கம் பர் ஒட்டக்கூத்தர் புகழேந்திப்புலவர் ஆகிய இம்மூவரு மொரே காலத்தினராகலீவ புகழேந்தியாரது காலம் கி. பி. பதினேராம் நூற்றாண்டின் பிற்பகுதியேயாமென்பது தேற்றம். இனியாம் மேற்கூறிப்போந்த புகழேந்தியாரது வரலாற்றுள் இவருக்கும் ஔவையாருக்குஞ் சில சம்பாஷணை நிகழ்ந் தனவாக வருதலின் ஔவையாரு மிவர் காலத்தினரேயோ வெனின்: அற்றன்று, ஔவையார் திருவள்ளுவரது உடன் பிறந்தாராதலாலும், ஔவையாருந் திருவள்ளுவருங் கடைச் சங்கமிருந்த காலத்திருந்தவராதலாலும், கடைச்சங்கத் தார்காலப் புகழேந்திப்புலவர் காலத்திற்குப் பன்னூற் றாண்டுகட்கு முற்பட்டதாதலாலும், இவர் காலத்தினிருந்த ஔவை பிரசித்திபெற்ற அந்த ஔவையாரல்லள்; ஔவை யென்பது முதியதவப் பெண்ணிற்கும் பேராமாதலின் அத் தகைய தவமுதியாள் யாரோடாயினும் புகழேந்திப் புல வர் சம்பாஷித்திருக்கலாமென்க. அற்றேல், ஔவை யார் அதிகமா னெடுமானஞ்சி யென்னும் அரசனிட மிருந்து அமிழ்தமயமானதொரு நெல்லியங்கனியைப் பெற் றுண்டமை பற்றி நெடுங்காலந் சீவித்திருந்தன ரெனப் புறநானூறு, சிறுபாணாற்றுப்படை, திருக்குறள் பரிமே லழகருரை முதலியன வெல்லாம் முழங்கா நிற்றலிற் கடைச்சங்கத்தார் காலத்து ஔவையாரும் புகழேந்தியார் காலத்து ஔவையாரும் ஒருவரே யெனக் கோடலியலா தோ வெனின்: நன்று கூறினாய்! மக்கட்கு விதித்த நூறு

வயதினும் நெல்லிக்கனி யுண்டமையாற் சிறிது அதிகமாக வாழ்ந்திருந்தனை ரென்று கொள்ளல் கூடுமேயன்றிக் கி. பி. முதனூற்றாண்டினிருந்த ஔவையார் கி. பி. பதினோராநூற்றாண்டினிறுதிகாறு மிருந்தன ரென்று கூறப்புகுதல் பண்டிதர் குழுவினிற் பழியுண்டழியுமென்க. இன்னுமிதன் விவரம் விரிப்பிற் பெருகும்.

இவரது சமயம் சைவ மென்றுரு சாரார் கூறுகிற்ப, மற்றுரு சாரார் வைணவ மென்பர். இன்னுரு சாரார் இவர் அரனையும் மரியையுமொப்ப நினைக்கும் அத்துவைத சமயத்தினரெனக் கூறுவர். இவர் தமது நளவெண்பாவிற் கூறும் பாயிரத்துக் கடவுள் வாழ்த்துச் செய்யுட்களையும், காண்டற்றோறும் முதற்கட்கூறும் காப்புச் செய்யுட்களையும், அவை தம்முள் திருமால் துதிகளை யெல்லாம் முன்னர்ப் பெய்திருத்தலையும், சுயம்வர காண்டத்து 47-ஆஞ்செய்யுளையும், கலிதொடர் காண்டத்து 33-ஆஞ்செய்யுளையும், கலிநீங்கு காண்டத்து 71-ஆஞ்செய்யுளையும், திருநெய்த்தானத்துச் சிவபெருமானைப் பாடியபோது சிவபெருமானெனச்சுட்டாது நெய்த்தானத்தானெனப் பொதுப்படக்கூறியும், குறுங்குடித் திருமாலைப் பாடியபோது விசேடப்பற்றுக் காட்டுமாற்றலுள்ள சொற்களை யுபயோகித்தும். பாடியிருத்தலையும், தொண்டைமண்டல சதகமுடையார் இவரைக் கூறுமிடத்து "மாலார்களந்தைப் புகழ்ந்தியும்" எனக்கூறியிருத்தலையு முற்று நோக்குமிடத்து இவர் சிவநிந்தைசெய்யாத வைணவரெனவேலற்புடைத்தா மென்பது. சிவநிந்தை செய்யாத வைணவரிலராலோ வெனின்: அற்றன்று, சிவநிந்தை செய்யாத வைணவர் சிலரை யிக்காலத்தும் யாம் கண்கூடாகக் காண்கின்றுமாக மதவாத மிகுந்திலா வக்காலத்திற் காண்டற்கென்னை யெனவிடுக்க.

அன்றியுமவர் அத்தகையராயிருப்பிற் சிவத்துதி செய்யமே மாட்டாரென்க.

இஃதிவ்வணமிருப்பச் சிலர் நம் புகழ்ந்திப் புலவர் வைணவருள் வைணவராயிருந்தமை பற்றிச் சைவனைய பாண்டியன் அவரைத் தன்மகட்குத் தானளித்த சீதனவரி சைகளுடன் அனுப்பி விட்டனன்; அல்லாக்கால் அத்தகைய சிறந்த பாவலரை விட்டுப்பிரிதலே விரும்ப மாட்டா னென்றும், ஒட்டக்கூத்தப் புலவருஞ் சோழராசனுஞ் சைவர்களாயினமையாலும், அவ்விவாட்டக கூத்தரோடிவர் மூரணினமையாலும், இவர் காவற் சிறையகத்திருந்தன ரென்றும், இவரது வைணவவியல்பே யிவரைச் சோழ ராசனிடத்தி னின்றும் பிரித்துச் சந்திரன் சுவர்க்கியி னிடத்துய்த்த தென்றும், அன்றே வீவரைச் சோழனுங் கைவிட்டிருக்கமாட்டா னென்றும், கம்மைச் சிலகாலம் ஆதரித்த பாண்டிய சோழராசர்களே மகிழ்விக்குமாறுந் தம் மோடதுகாறும் பகைத்திறம் பூண்டிருந்த ஒட்டக்கூத்தர் சமய வேறுபட்டா லேதனுங் குறை கூறுதிருக்குமாறும் உன்னியே தமது நளவெண்பாவிற் சிவத்துதிகளே யிடை யே செறித்தன ரென்றுங் கூறுகிற்பர். இதனினை நம் புக ழேந்தியார் பட்டபாட்டிற்கெல்லாங் காரணம் அவரது சமய வேறுபாடே யென்பது போதருமாதலின் அது பொருந்து மாறன்றென்பதுணர்க.

இனி யிவர்பட்ட பாட்டிற்குக் காரணமிவரது குணனே யென்க. இவர் சிறிது முனைவெகுளியுடையரே யன்றிப் பிறரியல்பறிந்து அவ்வவற்றிற்குத்தக வொழுகுந் திற மில்லாதவருமாயிருந்தார். இவ்விரண்டுமே யிவர்க்கு ஒட் டக்கூத்தரது பகைமையினையும், அதன் மூலமாகச் சிறைச் சாலை வாழ்க்கையினையும், விளைத்தன. இவை பற்றி யன்றே

அவர் மூதூனூர்காவலன்பாற் சென்றதூஉ மென்க. தமி ழிலக்கண விலக்கியக் கடற்கரை கண்ட புலவொருவர் தாம் ஒரு நாட்டுச் சமத்தான வித்துவானைப் பகைத்துக் கோடலாகாதென்ற சிறு விஷயத்தை யறிந்து கொள்ளா மற்போனது மிகவும் பரிதபிக்கத்தக்கதே.

இதுகிடக்க. இந்நூல் அரிச்சந்திரன், கார்த்தவீரி யார்ச்சுனன், புருகுற்சன், புரூரவன், முசுகுந்தன் என் னுஞ் சக்ரவர்த்திகளோடு உடனெண்ணப் பெற்றவனும் * முதலெழுவள்ளல்களு ளொருவனுமாகிய நளமகாராச னது கதையைப்பற்றிச் சொல்லுவதாம். நளவெண்பா வென்னுந் தொடர் நளனைப்பற்றிய வெண்பாவினலாகிய நூலெனப் பொருள்படுதலின் அடையடுத்த கருவியாகு பெயர்க் காரணக்குறியாமென்க. இந்நளசரித்திரம் வட மொழி மாபாரதத்து ஆரணிய பருவத்தின்கண் 52-ஆம் அத்தியாயம்முதல் 80-ஆம் அத்தியாயங்காறும் விரிவா கக் கூறப்பட்டுளது. அதனை, 'நிஷாதபாக்கியாத பருவம்' என்ப வடநூலார். அஃதேயித்தமிழ் நளவெண்பாவினுக்கு மூதனூலாம். பிருஹதச்வரென்னும் முனிவர் யுதிட்டிர னுக்கு இந்நளன் வரலாற்றைக்கூறின ரென்று வியாதபார தத்தின்கட்கூறியிருப்பவும், அதற்குமாறாக இந்நூலின்கண் வியாத முனிவரே கூறினரெனச் சொல்லப்பட்டிருத்தல் காண்க. இவ்வாறே வில்லிபுத்தூராருந் தமது பாரதத் தின்கண் நளன் கதையை வியாதர் பாண்டவர்க் கெடுத் துரைத்தனரென்று கூறுகிற்பர். இந்நள சரிதத்தையே அதிவீரராம பாண்டியன் நைடதமெனப் பெயரிட்டு விருத்த யாப்பினாற் செய்துளன். அஃதிந் நளவெண்பாவிற்குப் பிற் பட்ட நூலென்பது மலையிலக்கே. இனி நைடதக் கவித்

---

* குமுணன், சகரன், சகாரன். செம்பியன், துந்துமாரி, சிருதி, நளன்

துறை யெனவு மொருநூலுளது. அஃதத்துணைச் சிறப்பினதன்று.

இந்நூல் பாயிரம், சுயம்வரகாண்டம், கலிதொடர்காண்டம், கலிநீங்கு காண்டம் என்னும் நான்கு பகுதியினதாம். இப்பகுதிகளு ளொவ்வொன்றனையும் பற்றிச் சிறிது எடுத்து விரித்துரைப்பான் புக்கனம் :—

பாயிரம் : இதன்கண் முதலிரண்டு வெண்பாக்களும் பின் மடக்கினவாமாறுகாண்க. (†) என்னுங் குறியிடப் பெற்றுச் சுப்பிரமணியர்வாழ்த்தாகக் கூறப்பட்டுள பாடல் இரும்பல் காஞ்சி யென்னுஞ் சங்கச் செய்யுளின்கட் காணப் படுகின்றது. அந்நூலினின்று மிது மேற்கோளாக எடுத்துக்கொள்ளப்பட்டதுபோலும். எமக்குக் கிடைத்த கையெழுத்துப் பிரதிதோறு மிப்பாவினைக் கண்டமைபினிடையிற் பிறராற் சொருகப்பட்ட கவியாமோ வென்றையுறற்கிடனின்று.

சுயம்வரகாண்டம் : பஞ்சபாண்டவர் வனவாசஞ் செய்யத் தொடங்குழி, விசயன் சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்வான் கைலையங்கிரி செல்லாநிற்ப, ஏனைய நால்வரும் திரௌபதியொடும் மிகவும் மனவருத்த முற்றிருந்தனர் ; அப்போழ்தத்து வேதவியாதர் ஆண்டெழுந்தருளலும் அவரைத் தருமர் முறைப்படி வணங்கி, 'இவ்வுலகின்கட் சூதாடி யரசிழந்து வனத்துப் போந்துழலுற்றார் எம்மைமத் தவிர்த்து வேறெவரு முளரோ? சொன்மின்' என வருந்திக்கேட்ப, அவர்தமைச் சமாதானப்படுத்துவான் கருதி யிந்நளன் கதையை வியாதர் கூறினரென்பதே நூல் வரலாறுமாறுகாண்க. இப்பரதகண்டத்தில் * கிடதேதயத்

---

* Khandesh.

தில் மாவிந்த நகரின்க ணரசாண்டுவந்த நளமகாராசனும், † விதர்ப்பதேயத்திற் குண்டினபுரத்தின்கணிருந்து அரசாண்ட வீமராசன்றன் மகள் தமயந்தியும், ஒரு தெய்வலோகத்து அன்னப் புள்ளிரண்டும் வேனேயாராலு மொருவர் மற்றொருவருடைய கட்டழகு நற்குண நற்செய்கைகளைக் கேள்வியுற்று ஒருவர்மேலொருவர் காதல்கொண்டிருந்தனர். உடனே வீமராசன் றன்மகட்குச் சுயம்வரமான் றேற்படுத்தலும், அதன்பொருட்டுப்போந்த இந்திரன், அக்கினி, இயமன், வருணனென்னுந் தேவர்கள் நால்வரும் நளனேயே தமயந்தியினிடந் தூதனுப்பி வேண்டியும், அவள் நளனையன்றிப் பின்னெவனையும் மணஞ்செய்து கோடற்குடன்படாடலள்; பின்னர்த்தங்கள் வேண்டுகோளின்படி தூதுசென்ற நளனுக்குப் பல்வகைய வரங்களையும் அந்நால்வரும் மகிழ்ச்சியோடுங் கொடுத்து அந்நளனது வடிவினேயே தாங்களும் பூண்டு சுயம்வர மண்டபத்திற்கு வந்தனர்; அங்ஙன் தமயந்தி தனக்குத் தேர்ழியாய்ப் போந்துநின்ற நாமகளது வார்த்தையானும் வேறுசில குறிப்புக்களானும் மெய்ந்நளன் இன்ன னென்றுணர்ந்து அவனுக்கே மன்றலந்தார் சூட்டினள்; அதன்பின்னர்ச் சுயம்வரங் கருதிப்போந்துகொண்டிருந்த கலிபுருடன் முன்னரே சுயம்வரம் நடந்துவிட்ட செய்தியையும், அதன்கண் தமயந்தி, இந்திரன் முதலிய தேவர்களையும் மதியாது ஒரு மானுடனெனிய நளனைத் தன்றலைவனைக்கொண்ட செய்தியையும், நடுவழியில் இந்திரனதியானறிந்து வருத்தமும் வெகுளியும் மேவித் தனதியற்கைத் தீக்குணத்தினாலும், நளதமயந்தியரது விதிவயத்தினாலும், தான் அவர்களை மிகுதியும் வருத்திப்பிரித்து ஆட்டிவிலக்கழிப்பதாகச் சபதஞ் செய்தனன்; கலியாணம் நிறைவேறியபின்றைத் தன்னகர்க்குத் திரும்பிப்போந்த நளன்

† Berar.

பகைத்தன் றம்ம பெருந்தகை யூரே,
மனையுறை குரீஇக் கறையணற் சேவல்
பாணர் நரம்பின் சுகிரொடு வயமான்
குரற்செய் பீலியின் இழைத்த குடம்பைப்
பெருஞ்செய் நெல்லின் அரிசி யார்ந்துதன்
புன்புறப் பெடையொடு வதியும்
யாணர்த் தாகும் வேந்துவிழு மூரினே.

—புறநானூறு, நகஅ.

அரசனுக்கு ஒரு துன்பம் வந்தால்; ஊர் முழுதும் உண்ணுமல் பகியோடு இருக்குமாம். அரசனுக்கும் குடி மக்களுக்கும் இவ்வாறன்றோ ஒற்றுமை இருக்கவேண்டும்! கறி சமைப்பதற்குப் பறித்த கீரை அப்படியே கிடந்து வாடும்; வெளியிலிருந்து கொண்டுவந்த விறகு அடுக்களைக் குச் செல்லாமல் அப்படியே முற்றத்திற் கிடந்து உலர்ந்து முறியும். மயில்போன்ற மென்மையும் அழகு நிறமு முடைய இல்லக் கிழத்தியரும் வேந்தனுக்கு வந்த இன்னலை நினைந்து, உண்ணா மனங்கொள்ளார். இப்படி ஊரே பகைத்துக் கிடக்குமாம். என்ன வியப்பு!

ஆனால், ஊரில் வளத்துக்கு ஒன்றுங் குறைவில்லை. அவ்வப்போதும் புது வருவாய் உடையதுதான். வேந்தன் துயரை உணரும் குடிமக்கள்தாம் வருத்தத்தாற் பட்டினி. மற்று, மனையில் உறையும் குருவிகள், பாணர்களின் வகிர்ந்த யாழ் நரம்புகளைப்போலவும் சிங்கத்தின் பிணைப் புற்ற பிடரிமயிரைப் போலவும் தாம் இழைத்த கூட்டி னுள்ளே அகன்ற கழனிகளின் நெல்லரிசியைக் கவலையின் றிக் கொறித்துத் தின்றுகொண்டு தம் பெண் குருவிக ளுடன் மகிழ்வோடு வதியும். அத்தகைய புதிய வரும்படி மிக்க ஊர்தான்.

இருந்தாலும் தம் உயிரன்ன அரசனுக்கு ஒரு துன் பம் என்றால், அன்பிற் சிறந்த குடிமக்கள் மனம் எவ்வாறு உண்டுடுத்து மகிழ முடியும்! அன்பு இங்ஙனமன்றோ உள்

சிய முதலிய யாவற்றையும் இழந்து மனைவி மக்களோடும் நகர்நீங்கி வனஞ்சென்று ஆண்டுப்போந்த வேளாந்தணன் மூலமாகத் தன்மக்களை வீமராசனிடம் விடுத்தனன்; அதன் பின்னர் ஒரு கடுங்காட்டிடைச் செல்வுழிக் கலிபுருடன் பொன் மயமானதோ ரன்னப்புள்ளின் வடிவினிற் போந்து எதிர்ப் படக்கண்ட நமயந்தி அதனைப் பிடித்துக்கொடுக்குமா றளனைவேண்டலும், அவன் தங்களாடை யிரண்டனுளொன் றைதத்தானுந் தன்மனைவியுமுடித்துக்கொண்டு மற்றொன்றை யவ்வண்ணப்புள்ளின்மேல் வீசிப்பிடிக்க முயன்றவளவில், அம்மாயவன்னம் அவ்வாடையை யெடுத்துக்கொண்டு பறந் துசென்றது; பின்னர் அற்றைநான்றிரவினில் மிக்கவிரு னில் அவ்விருவரும் ஒற்றைத் துகிலினராய் ஒரு பாழ்மண்ட பத்திற் சென்று படுத்துக்கொண்டனர்; 'இப்போழ்தத்தி வளை ஈங்கே தனியின்விட்டுச்சென்றக்கால் இவள் எவ்வாறே னுந் தன்னுதைபாற்சென்று சேர்வள்' என்றேதார் கருத்துக் கொண்ட நளன், அளவயர்ந்துறங்கும் நமயம்பார்த்து அவட் குந் தனக்கு மொன்றுயிருந்த ஆடையை யறுப்பவெண் ணலும் கலிபுருடனொருவாளுருக்கொடு போந்தருகினிருந் தனன்; அதுகொண்டு நளன் ஆடையை யரிந்துவிட்டுப் பிரிந்து சென்றனன்; சென்றபின்னர்த் துயிலொழிந் தெழுந்த நமயந்தி பலவாறு புலம்பி நளனைத்தேடிச் செல் வுழி, ஒரு பெரும் பாம்பின் வாயினகப்பட்டு வாய்விடுத்த ரற்றி ஆங்ஙனம்போந்த வொருவேடனன் எடுத்துவிடப் பெற்றுயிர் பிழைத்து நின்றுள்; உடனே தன்மீதாசைகொ ண்டு தழுவப்போந்த அவ்வேடனைத் தனது கற்புத்தீயினை ரித்துப் பின்னர் வழிப்போகுமொரு வணிகனுதவியாற் சேதிநகர்சென்று அவ்வயின் அரசியின்பாற் சின்னாட்டங்கி யிருந்தனள்; அங்ஙனமிருப்புழி யொருநாள் நளதமயந்தி

(பொ - ரை.) கடல் நீரலைமேற் சுருங்கி ஓடுவனவும், எட்டுத்திசையையும் சூழ்ந்து வருவனவும், உலகத்தைச் சூழ்ந்த சக்கரவாள கிரியைப் போல்வனவும், அசுரர் கூட்டத்தைப் பிளப்பனவும் ஏழ் இனமான மலைகளை முட்டுவனவும், கருமுற்றிய மேகத்தைப் பிளப்பனவும், உருளையைக் கொண்டு சந்திரனைச் சினப்பனவும் ஆகிய பேரொளியுடைய வயிரத்தாற் சமைக்கப் பட்ட தேர்கள் நூறு கோடியும், காற்றின் போரினால் அழிக்கப் படாதனவும், பருவத் தியாற் பற்றப்படாதனவும், கடலுடி சக்கரங்கள் பதியாதனவும், உலகம் அழிய இடிக்கும் இடிபோல முழங்குவனவும், வேகத்தால் எழுகடலுங் கலங்கப் பாயும் பரிமாக்கள் பூணப் பட்டனவும் பிரமனால் முடிதாழ்த்தி வணங்கப் பட்டனவும் ஆகிய பொன்னாற் சமைத்த தேர்கள் நூறுகோடியும், யுக முடிவில் உலகினை யழிக்கும் வடவைத் தீயைப்போல் சூரிய னுக்குக் குளிர்ச்சியைத் தருவனவும், குளிர்ந்த பதினாறு கலையுடைய சந்திரனையும் பற்றிக் கருகும்படி விரிந்த நிலா வுடையனவும், சடைமுடியிற் பாய்ந்த கங்கை நீரையுடைய கடவுள் திருக்கையிலுள்ள வெய்ய கொருப்புடன் பகை கொள்வனவும், ஒலியுடைய சினைகள் நீங்காதனவும் ஆகிய முத்தாற் சமைக்கப் பட்ட தேர்கள் நூறு கோடியும் திருமால் வரவுடன் கூடி வந்தன.

(வி - ம்.) திரை - அலை. தோய்வன எனவே தோய்ந்து செல்வன எனப்பட்டது. நீர்மேலோடுந் தேர் என்க. சூழ்வரு சிலை - சுற்றிய மலை. இது சக்கரவாள மலையை யுணர்த்தும். பூமியைச் சுற்றி (வளைந்து) இருப்பதால். அம் மலையைப்போல் உருவமுடைய தேர் எனக் கொள்க. போழ்வன - பிளப்பன. திருமாலுக்குப் பகைவர் அசுரர் ஆதலால் அவரைத் தொலைக்குந் தேர் எனக் கூறியதாயிற்று. வரையைப் பாய்தல் என்பது பாகர் விரைந்து செலுத்தின் மலையை முட்டித் திரும்பும் தேர். மலையை முட்டினும் குலையாத தேர் எனச் சிறப்புத் தோன்றிற்று. சூல் - கரு. முதிர்மழை - முற்றிய மேகம். கொடு முடியால் மேகத்தைப் பிளக்கும் தேர் என உயர்வைச் சிறப்பித்தது இது. காலி - உருளை. உருளை வட்டம் நிலாவட்டம் போலத் தோன்றுவதால் அந்நிலாவை வருந்தும்படி செய்யும் என்பது. தேர்க்கால் வட்டத்தைப் போல நாம் வட்டமாகத் தோன்றிலமே எனை எண்ணி மதி வருந்தும் என்பது கருத்து. பவனப் போர் - காற்று வந்து மோதுவது. பவனம் - காற்று. காற்று மோதியுடைக்கப்படாதது. பருவத்தி - ஊழிக்காலத்துதி தோன்றும் நெருப்பு. அந் நெருப்பாலும் சுடப்படாதது. பரவை - கடல். கடலிற் கால் குளிராதன என்றது கடல் நீர் மேலும் செல்லும் என்பதாம். பாய் பரிமாவின என்றது; வலிய குதிரைகள் பூட்டிய தேர் என்பதை யுணர்த்தியது. திருமால் ஏறிவரும தேர் ஆதலின் பிரமன் தன் தந்தை யேறுந் தேர் என்று முடிதாழ்த்தி வணங்குவன் என்பது தோன்ற "கமலத்தோன் முடி தாழ்வன" என்றார். கனலி - சூரியன். கனலி - சே குளிர் கூர்வன என்றது முத்தின் குளிர்ச்சியாற் சூரியனும் குளிர் மிகுதி யடைவன் என்பது கருத்து. மதி கருகுவது மாயபூ பனிக்குக் கருகுவது போல வாடுவதைக் குறித்தது. வானவர் என்பது சடையிற் பாய் புனல்' என்ற அடைமொழியாற் சிவபெருமானைக் குறித்தது. அவர்

னை வரவழைக்கத்தக்க தோருபாயமாக அவள் 'தமயந்திக் கிரண்டாஞ் சுயம்வரம் நடக்கின்றது' என்று இருதுபன்ன னிடங் கூறுமாறு புரோகிதற் காணையிட்டனள்; இடப் பெற்ற வேகியணும் அவள்பணித்தாங்கே யரசற்குரைத்த லும், இருதுபன்னன் 'இச்சுயம்வரத்தின்கண்ணுதல் யான் அவளை மணந்துகொள்வல்' என்றவாசை பிடர்பிடித்துந்தப் புறப்பட்டு வாகுகணற் செலுத்தப்பட்ட தேரின்மீதேறிக் குண்டினபுரஞ் சென்றனன்;செல்வுழி யிருதுபன்னன் தான றிந்துள 'அக்ஷயவிருதயம்' என்னும் வித்தையைப் பாகனுக் கறிவித்து அவனறிந்துள 'அசுவவிருதயம்' என்னும் வித் தையைத் தானறிந்துகொண்டனன்; அக்கணமே கலி நளனை விட்டு நீங்கினன்; அப்பாற் குண்டினபுரம்போந்த இரு துபன்னனுடன் வந்த வாகுகனைத் தமயந்தி பல்வகையானு மாராய்ந்து அவனே தன்னருந்தலைவன் நளனென்று தேறி னள்; அப்போழ்தத்து அப்பாகன், முன்னர்க் கார்க்கோடக னளித்த ஆடைகளிரண்டையு முடுத்துக்கோடலும், அவன் றனது மெய்யுருவெய்திமிளிர்ந்து நின்றனன்; தேவர்கள் மலர்மழை பெய்தனர்; உடனே கலிபுருடனும் போந்து நளனுக்கு வேண்டிய வரங்கொடுத்துச் சென்றனன்; அதன் பினர் நளன் மனைவிமக்களொடும் மாவிந்த நகரமடைந்து மீண்டும் புட்கரனெது சூதாடிவென்று தனது இராச்சிய முதலியவற்றைப் பெற்றுச் செங்கோல் செலுத்தி யினிது வாழ்ந்தனனென்பதே யிக்காண்டக் கதையாம். இதன்கண் கடற்கரையருகிற் செல்லுறாவும் நளன் உளமழிந்து கையற் றுப் புள்ளொடும் வெண்டெடாடும் பூவொடுங் கடலொடும் புலம்பும் பாடல்கள் மிகச்சுவை வாய்ந்தனவாமாறுணர்க.

இந்நூல் பெருங்காப்பியத்தினியல்களுட் பெரும்பால னபொருந்தி நிற்றலுணர்க. தெய்வ வணக்க மங்களத்தை

முதற்கட்பெற்று, அறம்பொருளின்பங்களைப்பற்றியாங்காங் குரைத்துத் தன்னகரில்லாத் தலைவனுய நளனையுடைத்தாய், நாடு நகர் கடல் சந்திர சூரியர் உதயாத்தமன வருணனைகள் செறிந்து, தமயந்தி சுயம்வரமாகிய நன்மணம் புணர்தலும் நளன்மீட்டு மிராச்சியம் பெற்றுப் பட்டாபிடேகஞ் செய்து கோடலாற் பொன்முடிகவித்தலு முடைத்தாய்ப், பொழில் விளையாட்டுப்புனல் விளையாட்டுக்களும் மகப்பேறு கல்வியிற் களித்தல் புலவியிற்புலத்தல்களு மாங்காங்கேகொண்டு, தமயந்திபால் நளன்றாது சென்றமையிற் றாதுமுடையதாய்க்காண்டமென்னும் பாகுபாடுபெற்றுச் சிங்காரஞ் சோகஞ் முதலிய சுவைகளும் அவையிற்றை விளக்குறுங் கருத்துக்களும் மேனி வெண்பாவென்னு மொருதிறப்பாட்டினில் யாக்கப்பட்டு நிற்றலிற் பெருங்காப்பியமே யென்பதற்கெட்டினை யும் ஐயப்பாடில்லை யெனினும் சூளாமணி, நீலகேசி, மைடத மாதிய சிறுகாப்பியங்கள் பெருங்காப்பியத்தி னிலக்கணங்க ளுடையனவாகவும் அவற்றைப் பெருங்காப்பியங்க ளென் றது சிறுகாப்பியங்களென்றே யுயர்ந்தோர் வழங்கிவருத லான் அவைபோலவே யிந்நள வெண்பாவினையுஞ் சிறுகாப் பியமென்று கூறுதல் சிறப்புடைத்தாமென்க.

நம் புகழ்ந்திப் புலவர் தமக்குப் பல்வகைச் செல்வ முங் கொடுத்து ஆதரித்தவனும், தாம் நளவெண்பாப் பாடு தற்கு ஏவும் வினைமுதலாய் நின்றவனுமாகிய சந்திரன் சுவர்க்கியென்னுஞ் சிற்றரசனை யிந்நூலின் சுயம்வரகாண் டத்தில் 17, 57 - ஆம் பாடல்களினும், கலிதொடர்காண் டத்தில் 109, 128 - ஆம் பாடல்களினும், கலி நீங்குகாண் டத்தில் 48-ஆம் பாடலினும், புகழ்ந்துளர். 'இவ்வாறு பாலில் விடங்கலப்பதுபோலப் பெரியநூல்களி னிடையிடையே ஒரு மனிதனைத் துதித்தல் தகுமோ! நர சுவனம் நரக வன

மன்மீரு?' என்று ஆட்சேபிப்பாருமுளர். இங்ஙனம் புகழ்ந் துரைத்த றகுதியன்றெனினும் மன்னவன் தமக்குச் செய்த நன்றியை மறவாது பாராட்டுதனிமித்தமாக வுபகார ஸ்மிரு தியாகப் பாடினரென்பதுபற்றிக் கற்றோரெல்லா மேற்றுக் கொள்வாராயினர் ; அதான்றியும் புனைவுளியாகிய பொருண் முகத்தால் அவன் பெயரை யெடுத்துரைத்தலின்றிப் புனை வியாகிய உவமை முகத்தாற் கூறியிருக்கின்றனரென்பது முணர்க. இன்னுமிவ்வாறு தம்மை யாதரித்தவர்களைப் பற்றித் தமிழ்ப்புலவர்கள் தாம் செய்யும் நூல்களிற் புகழ்ந் துரைத்த வியற்கையாமென்பது, கட்பர் தமது இராமா யணத்தின்கண் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப முதலியாரையும, வில்லிபுத்தூராழ்வார் தமது பாரதத்தின் கண் வக்கபாகை நகரத்து வரபதியாட் கொண்டானையும், மண்டல புருடர் தமது சூடாமணி நிகண்டின்கட் கிருஷ்ண தேவராயனையும் புகழ்ந்து கூறியிருக்குமாற்றாற் றெற்றெ னப்புலனும்.

தமயந்தி சுயம்வரங் கருதிப்போந்த அரசர்களையெ டுத்துக் கூறுகின்றுழித் தமிழ்நாட்டு மூவேந்தரையும் முத ற்கணெடுத்துச் சிறப்பித்துரைகதலான் இந்நூலாசிரியர்க் குத் தேசாபிமானமும், கலிதொடர் காண்டத்து 133-ஆஞ் செய்யுளின்கண் "வண்டமிழ்வா ணர்ப்பிழைத்த வான்கு டியோ நீத்தழுன்மீ, மண்டு கொடுஞ்சுரத்து" எனத்தமிழ்ப் புலவர்களது ஆற்றலைக்கூறுதலாற் பாஷாபிமானமு முண் டென்பது பெற்றும்.

நளசரிதங் கேட்டவர்களைக் கலியுகத்தினுங் கலிபுரு டன் சேரமாட்டானென்றுரைக்குப பல்லோர் ; இதனைக் கலிதொடர்காண்டத்து 78-ஆஞ் செய்யுளினும், நைடதத்தி

னும், வியாதாபாத்தினுங்காண்க. நளசமயத்தியர்தஞ் சரித் திரங்கூறு முகத்தான், இல்லறவாழ்க்கைக்குரிய வொழுக்க முடை, பல வைதிகலௌகிக தன்மங்களும், வாய்மையின் மேன்மைபுங் கற்பிற் மகிமையுந் தலைவன்றலைவியரியல் புந் தூதிலக்கணமும் அமைச்சியலும் ஊழ்வினையுருத்து வந்தூட்டுமென்பதூஉந் செலவுந் சகடக்காற்றிடால் வரு மென்பதூஉந் துன்பதீர்த்துழியும் அறிவுடையோருள முடையாமென்பதூஉந் சூதாட்ட தீதபயக்கு மென்ப தூஉம இனைய போல்வன பிறவுங் கூறப்படுமாறு காண்க. இன்றுமீங்ஙனன் கணகண யுருவகபடாலி யெனக்கொண்டு பாரதாட்ட நளன் முத்திக்குரிய சீவனெனவும, அன்னப் புள் காரணமின்றி நிகழுங் கடவுளருளெனவும். சமயந்தி சுத்துவஞான மெனவுப், மக்கள் சுமதமுணங்களெனவுப், சூதாட்டம விடயவாதனைக் கிழுட்டெனவும், அமைச்சர் உறுதிகூறுந் துணைவரெனவும, புட்கரன் அவிவேகமென வும, கலியியமனெனவும, அரசுழவு முத்திய மேற்றிஞரி மையிழ வெனவும், சமயந்தி பிரிவு சுத்துவஞான நீக்க மெனவும், வனத்துறு துன்பம் நிரயத்துறு துன்ப மெனவும், கார்கோடகன் பழவினை யெனவும், சிவடன் குரோத மெனவுப், நளன் வாகுகனெகி இருதுபன்னனிடத்து ஊழியஞ்செய்தல்இழிபிறப்பிறசிறன்றி அப்பிறவித்துயர்நுகர் தலெனவும், தூதுசென்ற அந்தணன் திருவருளாற்சிறன் றிய கல்லாசிரிய னெனவும், சமயந்தியினிரண்டாஞ் சுயம் வரச் செய்தி சுத்துவ ஞானோபதேசமெனவும், குதிரை கள் சிவதங்க ளெனவும், சிதர் பிரணவமெனவும், சமயந்தி யை யடைதல் சுத்துவஞானப் பேறெனவும், இராச்சியப் பேறு முத்திப்பேறெனவு முய்த்துணர்ந்து, முத்தி நிலையை யெய்தற்குரிய சீவன் காரணமின்றி நிகழாதிற்கு மிறை

வன் றிருவருளாற் றத்துவ ஞானத்தினை யடைந்து அத னடியாகத் தோன்றுஞ் சமதம குணங்களைப்பெற்று, பின் னர் விடயவாதனைத் தொடர்பிறற் றூனைடைந்திருந்த தன் னிலையையுந் தத்துவ ஞானத்தைத பிழந்து கூற்றுவற் குடைந்து எரிவாய் நிரயத்திடுக்க ணுகர்ந்து பழவினை வயத் தலையிழிபிறப்புற்றுப் பல்வகைத் துன்பங்களையு மநுப விந்து, திருவருளாற் றோன்றிய நல்லாசிரிய னுபதேச் மொழியாற் பிரணவரதத்தினேறிச் சென்று குரோதங்க வர்ந்து கொண்ட தத்துவஞானத்தை மீட்டு மடைந்து முத்தியெய்திப் பேரின்பத்தை நுகர்கின்றன னென்னுந் தத்துவப்பொருள் கூறுவாரு மூளர்.

இனி நளவெண்பாவின் செய்யுளடைச் சிறப்பினைப் பற்றிச் சிறிது கூறுவாம்.

இழுமெனு மருவியி னெழுகுற மருவிபோற்
செய்யுட்க ளெல்லாஞ் செல்லுறுஉ மியல்புங்
கற்பனைச் செல்வமுஞ் சொற்பொரு ணயங்களும்
பொதுளிய பான்மையு மெதுகை மோனையி
னியமம் பிழையா நேர்மையும் பதின்குண
வியலொடு பலவணி யியைபு மிடக்க
ரடக்கிப் பாடு மழகுமெத் தகையரும்
படிக்க வினிக்கும் பண்பு மவ்வவ
வமய வுசிதமா வமைக்கு மாற்றலு
மூள்ளுறை யுவமமு மொருங்கே தெரிக்குந்
தெள்ளிய தமிழ்ப்பாச் சீர்மை
பண்போத வார்ந்த வெண்பாவி னுண்டே.

இவை பற்றியன்றே,

" கேட்டாலு மின்பங் கிடைக்குங்கண் டீர்கொண்ட கீர்த்தியொடு
பாட்டா லுயர்ந்த புகழேந்தி சொன்னபடி "

யெனப் படிக்காசுப்புலவர் கூறியதூஉ மென்க.

இன்னு மிந்நூற் சுயம்வரகாண்டத்து 41-ஆஞ் செய்யுளின்

"சேவல் குயிற்பெடைக்குப் பேசுந் சிறுகுரல்கேட்
டாவி யுருகி யழிந்திட்டான்"

என்றவடிகள் திருமங்கையாழ்வார் பாடிய திருநெடுந்தாண்டகத்தின் 7-ஆம் பாசுரத்தின்கண்

"செங்கால் மடப்புறவம் பேடைக்குப் பேசுஞ்
சிறுகுரலுக் குடலுருகிச் சிந்தித் தாங்கே"

யென்ற வடியினை யொக்குமாறும், 137-ஆஞ் செய்யுளின் கண் "ஆழி வடிம்பலம்ப நின்றூதும்" என்று கூறுதலா னே யிந்நூலுடையார் புறநானூறு, மதுரைக்காஞ்சி, சிலப்பதி காரமுதலிய நூல்களிற் பயின்றிருக்குமாறும், கலிதொடர் காண்டத்து 114-ஆஞ் செய்யுளின்

"வான்முகிலு மின்னும் வறுநிலத்து வீழ்ந்ததூபோற்
றூணுங் குழலுந் தனிவீழ்ந்தாள்"

என்றவடிகள், மணிமேகலையின்கண் ஒன்பதாவது பிடிகை கண்டு பிறப்புணர்ந்த காதையின்

"கொடிமின் முகிலொடு கிலஞ்சேர்ந்தென்ன
விறுநுசுப் பலச வெறுநிலஞ் சேர்ந்தாங்கு"

என்ற 6-7-ஆம் அடிகளை யியையுமாறும், 115-ஆஞ் செய்யுளாகிய

"தையறுயர்க்குத் தரியாது தற்சிறகாங்
கையான் வயிறலைத்துக் காரிருள்வாய் —வெய்யோனே

வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோற்
கூவினவே கோழிக் குலம்"

என்பது கம்ப. ராமாயண வபோத்திபாகாண்டக் கைகேசி சூழ்வினைப் படலத்து 17-ஆஞ் செய்யுளாகிய

"எண்டருங்சடை கென்றயாம மியம்பகிற் றண வேழடான்
வண்டுதங்கிய தொங்கன்டார்பன் மயங்கிவிம்மிய வாறலாங்
கண்டுநெந்ந கலங்கிய ந்சிறை யாளகாமர் தூணைக்சரங்
கொண்டுதம்வயி றறற்றியெற்றி வின்ப்டபோன்றன கோழியே"

என்பதனை யாகுமாறும், கலிங்கு காண்டத்தின் 33-ஆஞ்செய்புளாங்ய

"போர்வாய் வருவாய் புரண்டி விழுந்திரங்கி
நாவாப் குழற நடுங்குறுவாய்—நீவா
யரவசற்று மென்போல வார்கலியே மாதை
யீரவசற்றி வந்தாய்கொ வின்று"

என்றது சங்கத்துச் ச்செய்யுளு ளொன்றாங்ய

"வருதி பெய்ர்தி வருந்றதி தஞ்சாய்
பொருதி புலம்புதி நீயுங்—கருதுங்காற்
பண்டனை யல்லபாற் பாழித்தோட் கோதையைக்
கண்டனையோ வாழி கடல்"

என்றதனையுறழுபாறு முய்த்துணர்க.

புகழ்ந்திப் புலவரென்னு மிந்நூலாசிரியரது பெயர் இவர்க்குக் கல்விகலன்பற்றி யெய்திய சீர்த்தி குறித்துக் கீர்த்திபெற்றவரென்னும் பொருளிற் போந்த காரணக்குறி பாமாறு காண்க. அற்றாக இவர்தட் இயற்பெயரின்ன தென்றெய்த்தலியலவில்லை.

இவர் பாடிய வேறு நூல்களுள் இரத்தினச்சுருக்கம் என்பது மகளிர்தங் குழன் முதற்றுளீறுகவுள்ள வுறுப்புக் கட்கு உயர்மொழிப் புலவரா னுரைக்கப்படும் பல்வகைய வுவமைகளைத் தனித்தனியெடுத்து விதந்து காட்டுவதனெடு காவியங்களின் அறியத்தக்க வேறு சில விடயங்களையுந் தெரிக்குமொரு சிறு நூலாம். சூடாமணி நிகண்டின் பன்னிரண்டாந் தொகுதியின்கட் காணப்படுஞ் சில விடயங்களிதன்கண்ணுங் காணப்படும். இஃது எழுபது பாடல்களானியன்றது. சிலர் இவர் சிறையினிருந்துழி மகளிர்க்கென்று பாடிய அல்லியரசிமாலை, பவளக்கொடிமாலை, புலந்தரன் களவுமாலை முதலிய நால்கள் இவர் கருநியாங்கீக டாதர்களாற்றலுக்குந் தகுதிக்குமேற்றவாறு மிகவுட் எளிய நடையிலமைந்துள்ளன வென்பதானுமிவர் செய்த நூல்களெனக் கோடலரிதெனலை யுறுதிப்படுகின்றது. இன்னுமீண்டுக்கூறியனவன்றி யிவரொரு கலம்பகமுஞ் செய்துளரென்பது

"காரார் களந்தைப் புகழ்ந்தி சொனன கலம்பகத்தி
னேராது நையும் படியென்ற பாடலி னேரியர்கோன்
சீராகச் செப்பிய நற்பாடல் கொண்டவன் செஞ்சியர்கோன்
மாராபி ராமனங் கொற்றந்தை யூர்தொண்டை மண்டலமே"

யென்றதொண்டைமண்டலசதகச் செய்யுளாற்புலனாகின்றது.

இனி நளவெண்பாவி னிறுதிக்கண் வாழ்த்துச் செய்யுளாக

"வாழ்க மலைநாடு வாழ்கவளச் சோணாடு
வாழ்க வழுதி வளநாடே—வாழ்கவே
முன்னீர்மை யோடு முதனீர்மை காத்தோம்பு
நன்னீர் வயற்றொண்டை நாடு."

என்ற தொன்று எமக்குக் கிடைத்த பிரதிகளு ளொவ் வொன்றினுங் காணப்படாது சிற்சில வேட்டுப் பிரதிகளின் மட்டுமே காணப்பட்டமையின் நூலினுள்ளே சேர்த்து அச்சிடாது விடுத்தனம்.

இந்நூலாசிரியர் வெண்பாப் பாடுதற்கண் மிகவும் வல்லுரென்பதை

"வெண்பாவிற் புகழ்ந்தி பரணிக்கோர்
சயங்கொண்டான் விருத்த மென்னு
மொண்பாவி லுயர்கம்பன் கோவையுலா
வந்தாதிக் கொட்டக் கூத்தன்
கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள்
வசைபாடக் காள மேகம்
பண்பாய பகர்சந்தம் படிக்காச
லாதிதாருவற் பகரொணுதே"

என்ற பலபட்டடைடச் சொக்கநாதப்புலவர் சிறப்புக் கவியினு ணுணர்க.

இதற்கு முன்னர் இந்நூல் பலரானு மச்சிடப்பட்டிருப் பினும் எம்மாற் கல்விபயிலுறாடம் இயற்றமிழ்மாணவர் எம்மை மொன்றச்சிடுமாறு பன்முன்றயும் வேண்டிக் கொண்டமையின், அவர்தம் வேண்டுகோட் கிணங்கிப் பல பிரதி ருபங்கள் தேடிக்கொண்டு கரவிகிதவழுஉக்களைத்து எம்மா லியன்றவளவு மூலபாடத்தை யிருந்தவாறே செப் பஞ்செய்து செய்யுண்முதற்குறிட்பகராதி யொன்றிறுதியிற் சேர்த்து அச்சிட்டிருக்கின்றனம். இத் தன்முயற்சியின்

கண் எம்மைத் தூண்டுபு கடைதோறாகுமட்டுந் தோன்றுத்
துணையா யுதவிபுரிந்துநின்ற எல்லாம் வல்ல முழுமுதற்
கடவுளாய நடராசப் பெருமானே மனமொழி மெய்களினிற்
றொழுகின்றனம்.

வி. தோ. சு

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

நாலாவெண்பா

பாயிரம்

கடவுள் வாழ்த்து

விநாயகக் கடவுள்.

நேரிசை வெண்பா.

நேசரிதங் கூர நிலவலயந் தாங்குநளன்
மாசரிதங் கூற வருந்துணையா— மீசன்
கரியா னனத்தான் கருதுபுகழ் பூண்ட
கரியா னனத்தான் கழல். (க)

[மற்றிரு ருபாடம்.]

சடகோபர்.

நேசரிதங் கூர நிலவலயந் தாங்குளன்
மாசரிதங் கூற வருந்துணையாப் — பேசரிய
மாமகிழ்மா றன்புகழாம் வண்டமிழ்வே தம்விரித்த
மாமகிழ்மா றன்ரூண் மலர். (உ)

திருமால்.

ஆதித் தனிக்கோல மாணை னடியவற்காச்
சோதித் திருத்தாணிற் றோன்றினன்—வேதத்தின்
முன்னின்றான் வேழ முதலே யெனவழைப்ப
வென்னென்று னெங்கட் கிறை. (க)

சிவபெருமான்

கலாப * மயிலிருந்த பாகத்தார் கங்கை
யுலாவு சடைமே லுறையு—மிலாவை
வழியவார்த் தாலன்ன மாநீற்றூர் நாகங்
கழியவார்த் தார்நமக்கே காப்பு. (ச)

சுப்பிரமணியர்

†நீல நெடுங்கொண்மூ நெற்றி நிழுறைக்
காலை யிருள்சீக்குங் காய்கதிர்போற்—சோலை
மணித்தோகை மேற்றோன்றி மாக்கடற்சூர் வென்றோ
ணணிச்சே வடியெம் மரண். (ஞ)

அவையடக்கம்.

வெந்தறுகண் வேழத்தை வேரிக் கமலத்தின்
றந்துவினர் கட்டச் சமைவதொக்கும்—பைந்தொடையிற்
றோன்பாடுந் தார்நளன்றன் றெய்வத் திருக்கதையை
யான்பாட லுற்ற விது. (ஙு)

ஆக்கியோன் பெயர்

பாரார் புகழ்ந்த பதிநளன்சீர் வெண்பாவாற்
போரார் புகழ்ந்து பேசினான்—ரூரார்
செழியனையுஞ் சென்னியையுஞ் சேரத் திறைகொண்
மொழியின் சுவையே முதிர்ந்து. (எ)

பாயிர முற்றிற்று.

---

* "மயிலுகந்த" வென்பதூஉம் பாடம்.

நூல்

முதலாவத்து

சுயம்வர காண்டம்.

பாண்டவரின் முன்றோன்றல் பார்முழுதுந் தோற்றருளா
ளாண்டகையே தூதுவனுப்பச் சென்றவனி—வேண்ட
மறுத்தா னிருந்தாதே மண்ணெடும்போய் மாளப்
பொறுத்தா னிருந்தான் புலர்ந்து. (க)

நாட்டின்கண் வாழ்வைத் துறந்துபோய் நான்மறையோ
ரீட்டங்கள் சூழ விருந்தாணக்—காட்டிற்
பெருந்தகையைக் கண்டார்கள் பேரொழிற்றோள் வேந்தர்
வருந்தகைய ரெல்லாரும் வந்து. (உ)

கோற்றவேற் றூனைக் குருகாடன் பாலணைந்தா
னெற்றுநீர் ஞாலத் திருணீங்க—முற்றும்
வழிமுறையே வந்த மறையெல்லாந் தந்தான்
மொழிமுறையே கோத்த முனி. (ங)

மறைமுதல்வ னீயிங்கே வந்தருளப் பெற்றேன்
பிறவிப் பெருந்துயர மெல்லா—மறவே
பிழைத்தேனன்யா னென்றூனப் போராழி யாண
யழைத்தேதவல் கொண்ட வரசு. (ச)

மெய்த்திருவந் துற்றூலும் வெந்துயர்வந் துற்றூலு
மொத்திருக்கு முள்ளத் துரமேவானே—சித்தம்
வருந்தியவா வென்னென்றூன் மாமறையா லுள்ளந்
திருந்தியவா மெய்த்தவத்தோன் றேர்ந்து. (ஞ)

அம்பொற் கயிலைக்கே யாகத் தரவணிவார்
தம்பொற் படைக்குத் தமியனை—வெம்பிபைமுன்
போக்கினே னென்றுரைத்தான் பூதலத்து மீதலத்தும்
வாக்கினே னில்லாத மன். (கூ)

காண்டா வனத்தீக் கடவுளுணைக் கைக்கணையா
னீண்ட முகிறடுத்து நின்றுற்கு—மீண்டமரர்
தானிரண்டு சீகாவத் தனிக்கனிபோ லோடியகாட்
டோளிரண்டு மன்றே துணை. (எ)

பேராசை மெய்கள் பெருந்திருவுங் கைவிட்டுச்
சீசாரிய லெங்கானஞ் சேர்தற்குக்—காரணந்தான்
யாதீதாவப் பாவென்று ணென்றுந்தன் லெண்குடைக்கீழ்த்
தீதாவப் பார்காத்த சேய். (அ)

கேடில் விழுச்செல்வங் கேடெய்து சூதாட
லேடவிழ்தார் மன்னர்க் கியல்பேகான்—வாடிக்
கலங்கலிநீ யென்றுரைத்தான் காமருவு காடற்
கிலங்கலைநூன் மார்ப னெடுத்து. (கூ)

கண்ணிழந்து மாயக் கவறூடிக் காவலர்தா
மண்ணிழந்து போந்து வனநண்ணி—விண்ணிழந்த
மின்போலு நூன்மார்ப மேதினியில் லேறுண்டோ
வென்போ லுழந்தா ரிடர். (கஎ)

சேமவேன் மன்னனுக்குச் செப்புவான் சென்றனிக்கா
ணைமவேற் காளை நளனென்றான்—யாமத்
தொலியாழி லைவய மொருங்கிழப்பப் பண்டு
கலியான் விளைந்த கதை. (கக)

இ-ள்:—மேற் கூறப்பட்டவற்றுள் வினைவேறுபடும் பல பொருளொருசொல் பொருள் தெரியுங்காலத்து வேறுபட்ட வினையினானும், இனத்தினானும், சார்பினானும் தெளியத் தோன்றும். எ-று.

உ-ம்:—மா காய்த்தது; வேங்கை பூத்தது என்றவழி மரம் என்பது அறியப்பட்டது. மா ஓடிற்று; வேங்கை பாய்ந்தது என்றவழி விலங்கு என்பது அறியப்பட்டது. இவை தனித்தனிப் பொருள் உணர்த்தின. இவ்வூர் மக்களெல்லாம் போர்க்குப் போயினர் என்றவழி ஆண்பால் உணரப்பட்டது. இவ்வூர் மக்களெல்லாம் தைந்நீராடினர் என்றவழிப் பெண்பால் உணரப்பட்டது. இவ்வூர்ப் பெற்றமெல்லாம் அறம் கறக்கும் என்றவழிப் பெண்பால் உணரப்பட்டது. இவ்வூர்ப் பெற்றமெல்லாம் உழவு ஒழிந்தன என்றவழி ஆண்பால் உணரப்பட்டது. இவை பொதுப் பொருள் உணர்த்தின. இவை வினையிற்றோன்றும் பொருள் விளக்கின. மாவும் மருதும் அவை என்றவழி மாமரமென்பது அறியப்பட்டது. மாவும் புள்ளும் என்றவழி விலங்கென்பது அறியப்பட்டது. இவை இனம். இப்பொழிலகத்து நாறுமாவுள என்றவழி மரம் என்பது அறியப்பட்டது. இப்போக்களத்து நாறுமாவுள என்றவழி விலங்கென்பது அறியப்பட்டது. இவை சார்பு. பொதுமைபுணர்த்தும் பலபொருளொருசொல் இனமும் சார்பும்பற்றி வருவன வந்தவழிக்கண்டு கொள்க. (இ.ஏ.)

‡51. ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்.

மேலதற்கோர் புறநடையுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்:—வினைவேறுபடும் பல பொருள் ஒருசொல், வேற்று வினை கொண்டு முடிதலேயன்றி இருபொருட்கும் பொருந்தின ஒருவினை கொண்டு முடியின், பிறிதொரு சொல்லோடு (பொருளொடு இ. ஏ.) ஒன்றிப்பொருள் தோன்றும். எ-று.

பிறிதொரு சொல்லென்பது எஞ்சி நின்றது.

---

‡ 51, 52-ம் சூத்திரங்களைச் சேனாவரையர் ஒன்றாக்குவார்.

ஓடாத தாண ளனென்ண றுளவெருவன்
பீடாருஞ் செல்வப் பெடைவண்மீடா—நீடா
முருகுடைய மாதர் முலைநனைக்குந் தண்டா
ாருதுடையான் வெண்குடையா ளங்கு. (கஅ)

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை யறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாான் றனிக்காத்தான்—மாத
ாருகூட்டும் பைங்கினியு மாடற் பருந்து
மொருகூட்டில் வாழ வுலகு. (கக)

வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினன்—நீறங்குவளைத்
தேனுடி வண்டு சிறகுலர்த்து நீர்நாடன்
பூநாடிச் சோலை புக. (உ0)

வென்றி மதமேவடன் வில்லெடுப்ப வீதியெலாந்
தென்றன் மதுநீர் தெளித்துவா—ன்ற
ளமேவணன் மீதலருந் தர்ழ்வரைசூழ் நாடற்
கிளமேவனில் வந்த தெதிர். (உக)

தேரிற் றுகளைத் திருந்திழையார் பூங்குழலின்
மேரிப் புனனீப்ப வேயடைந்தான்—கார்வண்டு [ங்கிப்
தொக்கிருந்தா லித்துழலுந் தூங்கிருள்வெய் யோற்கொது
புக்கிருந்தா லன்ன பொழில். (உஉ)

நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன்
ணிறத்தாற் பொய்கைத் தலஞ்சிவப்ப—மாணிறத்தான்
முன்னப்புட் டோன்று முளரிக் தலைவகு
மன்னப்புட் டோன்றிற்றே யாங்கு. (உங)

பேதை மடவன்னந் தன்னீனப் பிழையாமன்
மேதிக் குலமேமறி மென்கருப்பைக்—கோதிக்
கடித்துத்தான் முத்துமிழுங் கங்கைநீர் நாடன்
பிடித்துத்தா வென்றான் பெயர்ந்து. (உச)

நாடிமட வன்னத்தை நல்ல மயிற்குழா
மோடி வளைக்கின்ற தெதாப்பவே—நீடியநற்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து. (உஞ)

அன்னந் தனைப்பிடித்தங் காயிழையார் கொண்டுபோய்
மன்னன் றிருமுன்னர் வைத்தலுமே—யன்ன
மலங்கிற்றே றன்னுடைய வான்கினையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு. (உக)

அஞ்சன் மடவனமே யுன்ற னணிநடையும்
வஞ்சி யனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகா ணென்றான் களிவண்டு
மானப் பிடித்ததார் மன். (உஎ)

செய்ய கமலத் திருவை சிகரான
தையல் பிடித்த தனியன்னம்—வெய்ய
வடுமாற்ற மில்லா வரசன்சொற் கேட்டுத்
தடுமாற்றந் தீர்ந்ததே தான். (உஅ)

திசைமுகந்த வெண்கவிகைத தாமேவந்தே யுன்ற
னிசைமுகந்த தோளுக் கிசைவாள்—வசையி
றமையந்தி யென்றேறுஞ் தையலாண் மென்றோ
ளமையந்தி யென்றே றணங்கு. (உக)

அன்ன மொழிந்த மொழிபுகா முன்புக்குக்
கன்னி மனக்கோயில் கைக்கொள்ளச்—சென்னமயி
லார்மடந்தை பென்ற னகங்கன் சிலைவளைப்பப்
பார்மடந்தை கோமான் பணைத்து. (கூ)

எழுவடிக்கான் மன்ற விலக்கிழக்கோர் தூண்டக்
கொழுநற்கிரிப் சாய்க்க குவளை—யுழுநர்
மடைமிதிப்பக் கோபாட மாதே—லிரீர் கடன்
கொடைவிதிர்ப்பன் பெற்றோர் கொம்பு. (கூக)

நாற்குணமு நாற்படையா லைவட்புலனு நலனமைச்சா
லார்க்குஞ் சிலை . தேபயனிழ்சா—லேவற்படையும்
வாளுமே கண்ணு வகலா மதிக்குடைக்கீ
ழாளுமே பென்னை யாசு. (கூஉ)

மோட்டிளங் கொங்கை முடபச் சுடங்கோதற
மாட்டா திடையென்று வாய்விட்டு—நாட்டோட
னலம்புவார் கோதை யடியிணைபின் வீழ்ந்து
புலம்புமா நூபுரங்கள் பூம்பு. (கூங)

என்று நுடங்கு மிடையென்ப வேழுலகு
பின்ற கணிகை நிழல்வேந்த—னொன்றி
பறுகாற் சிறுபறவை யஞ்சிறகால் வீசுஞ்
சிறுகாற்றுக் காற்றா தசைந்து. (கூச)

சேந்தன் மொழியாள் செயிலளக பந்தியின்கீ
ழிந்து முயிலென் றியம்புவார்—வந்தென்றும்
பூவாளி வேந்தன் பொருவிலவஞ் சிலைசார்த்தி
யேவாளி தீட்டு மிடம். (கூஞ)

அன்னமே நீயுரைத்த வன்னத்தை யென்னுயி
யுன்னவே சோரு முனக்கவ ளோ—டென்னை
யடைவென்றான் மற்றந்த வன்னத்தை முன்னே
நடைவென்று டன்பா னயந்து. (கூக)

பூமனைவாய் வாழ்கின்ற புட்குலங்கள் யாமவடன்
மாமனைவாய் வாழு மயிற்குலங்கள்—காமன்
படைகற்பான் வந்தடைந்தான் பைந்தொடியாள் பாத
நடைகற்பான் வந்தடைந்த நாம். (கூள)

நிற்றது நெஞ்சு மெழுந்த திருங்கர்த
லற்றது மான மழிந்ததுநாண்—மற்றினியுண்
வாயுடைய தென்னுடைய வாழ்வென்றான் வெங்காமத்
தீயுடைய நெஞ்சுடையான் றேர்ந்து. (கூஅ)

வீமன் றிருமடந்தை மென்முலையை புன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன்—சேம
நெடுங்குடையா யென்றுரைத்து நீங்கியதே யன்ன
மொடுங்கிடையா டன்பா லுயர்ந்து. (கூக)

இவ்வளவிற் செல்லுங்கொ லிவ்வளவிற் காணுங்கொ
லிவ்வளவிற்காத லியம்புங்கொ—லிவ்வளவின்
மீளுங்கொ லென்றுரையா விம்மினான் மும்மதத்தின்
றூளுங்கொல் யானை யரசு. (சூ0)

சேவல் குயிற்பெடைக்குப் பேசுஞ் சிறுகுரல்கேட்
டாவி யுருகி யழிந்திட்டான்—பூவி
னிடையன்னஞ் செங்கா லிளவன்ன'ஞ் சொன்ன
நடையன்னந் தன்பா னயந்து. (சூக)

கோதை சுமந்த கொடிமேபா வினைநடங்கத்
தாதை திருவடிமேற் ருண்வீழ்ந்தான்—மீதல்லாங்
காந்தாரம் பாடிக் களிவண்டு கின்றாற்றும்
பூந்தாரு மெல்லோதிப் பொன். (நூசு)

போழுகு சோர்கின்ற தென்னைப் பிறைநுதன்மே
னீரரும்பத் தன்பேதை கின்ருளைப்—பாராக்
குலவேந்தன் சிந்திக்தான் கோவேந்தர் கம்மை
மலர்வேய்ந்து கொள்ளு மணம். (நூநு)

மங்கை சுயம்வரர்நா ளெழுன்று வார்முரசு
மெங்கு மறைகென் றியம்பிஞன்—பைங்கழுகின்
கூந்தன்மேற் கங்கைக் கொழுந்தேநு நன்னுடன்
வேந்தர்மேற் ருதேநாட விட்டு. (நூசுர)

மாழுத்த வெண்குடையான் மால்களிற்ருன் வண்டிரைக்குந்
தாமத் தளிச்சந் திரன்சுவர்க்கி—நாமத்தார்
பாவேய்ந்த செந்தமிழா மென்னப் பரந்தசை
கோவேந்தர் செல்வக் குழாம். (நூஎ)

செந்தடையும் வண்டுறைதார்ச் செய்யாள் வளர்மார்பன்
கந்தடையும் வேழக் கடைத்தலைவாய்—வந்தடைந்த
பூவேந்தர் தங்கள்கிளை பொன்னகரி லீண்டிற்றே
கோவேந்தன் மாதைக் குறித்து. (நூஅ)

புள்ளுறையுஞ் சோலைகளும் பூங்கமல வாவிகளு
மூள்ளும் புறமு மினிதுறைந்தார்—தெள்ளரிக்கட்
பூமகளைப் பொன்னைப் பொருவேல் விதர்ப்பன்றன்
கோமகளைத் தம்மனத்தே கொண்டு. (நூகூ)

வழிமேல் விழிவைத்து வாணுதலாணுட
மொழிமேற் செவிவைத்து மோகச்—சுழிமேற்ற
னெஞ்சோட வைத்தயர்வான் கண்டா னெடுவானின்
மஞ்சோட வண்ணம் வர. (சுo)

முகம்பார்த் தருணேக்கி முன்னிரந்து செல்வர்
அகப்பார்க்கு மற்றோரைப் போல—மிகுங்காதல்
கேளா யிருந்திட்டா னன்னத்தைக் கேளாரை
வாளான் விருந்திட்ட மன். (சுக)

அன்னக் குலத்தி னரசே யழிகின்ற
வென்னுயிரை மீள வெனக்களித்தாய்—முன்னுரைத்த
தேதமொழிக்குத் தீதிலதே யென்றன் றிருந்தாரை
யேமொழிக்கும் வேலா னெடுத்து. (சுஉ)

கொற்றவன்ற னேவலிறற் போயக் குலக்கொடிபா
லுற்றதுவு மாங்கவடா னுற்றதுவு—முற்று
மொழிந்தே தியன்ன மொழிகேட் டரசற்
கழிந்தே தியுள்ள வறிவு. (சுங)

கேட்ட செவிவழியே கேளா துணர்வோட
வோட்டை மனத்தா டுயிர்தாங்கி—மீட்டுங்
குழியிற் படுகளிறோற் கோமான் கிடந்தான்
றழலிற் படுதளிர்போற் சாய்ந்து. (சுச)

கோதை சுயம்வரநாள் கொற்றவனுக் குற்றுரைப்ப
வேதமிலாக் காட்சியர்வந் தெய்திணர்—போதிற்
படையோடு வண்டுறங்கும் பேரொலிநீர் நாட
னடையாத வாயி லகம். (சுஞ

காவலன்றன் றாதர் கடைகா வலர்க்கறிவித்
தேவலிற்போ யீதென் றிபம்புகலு—மாவிற்
பொலிந்தசீதர் பூட்டென்றான் பூவாளி பாய
மெலிந்தசீதாள் சீவந்தன் விரைந்து. (சுசு)

கேட்ட சிறுமருங்குற் கீழ்மகளிர் சீள்வரப்பி
லிட்ட பசுங்குவளை யெரடித்த—கட்டி
கரையத்தே னூறுங் கடலுட னூர்க்கு
விரையத்தே நுரென்றான் சீவந்து. (சுஎ)

சடைச்செந்நல் பொன்னினைக்குந் தண்ணடு பின்னைக்
கடற்றுனை முன்னுகக் கண்டா—னடற்கமைந்த
வில்லியரும் பொற்றும வீமன் றிருமகளா
நல்லுயிரும் வாழு நகர். (சுஅ)

நேற்றித் தனிக்கண் ணெருப்பைக் குளிர்விக்குங்
கொற்றத் தனியாழ்க் குலமுனிவ—னூற்றடைந்தான்
றேறுநீர் தெய்வத் தருவுந் திருமணியும்
வானுநீங் காத்தான் மருங்கு. (சுக)

வீரர் விறல்சீவந்தர் விண்ணுடு சேர்கின்று
நாரு மிலராலென் றையுற்று—நாரதனர்
நன்முகசீம சோக்கினு னகஞ் சிறகரிந்த
மின்முகசீவற் கையான் விரைந்து. (எ0)

வீமன் மடந்தை மணத்தின் விரைதொடுத்த
காமம் புனைவான் சுயம்வரத்து—மாமன்னர்
போயினு ரென்றுன் புரந்தரற்குப் பொய்யாத
வாயினுன் மாதவத்தோர் மன். (எக)

அழகு சுமந்திளைத்த வாகத்தாள் வண்டு
பழகு கருங்கூந்தற் பாவை—மழகளிற்று
வீமன் குலத்துக்கோர் மெய்ச்சதீப மற்றவளை
காமன் றிருவுக்கோர் காப்பு. (எஉ)

மால்வரையை வச்சிரத்தா லீர்ந்தாலு மானவருங்
கோல்வளைதன் மாலை குயித்தெழுந்தார்—சால்புடைய
விண்ணுறு நீங்கி விதர்ப்பன் றிருநகர்க்கு
மண்ணுறு சோகக்கி மகிழ்ந்து. (எங)

பைந்தெரியல் வேல்வேந்தன் பாவைபாற் போயினதன்
சிறகை கெடுத்ததனைத் தேடுவான்—முந்தி
வருவான்போற் சீறர்மேல் வருவானைக் கண்டார்
பெருவானிற் றேவர் பெரிது. (எச)

கோவற் குடைவேந்தைக் கண்ணுற்று விண்ணவர்கோ
னேவற் றொழிலுக் கிசையென்று—னேவற்கு
மன்னவனு நேர்ந்தான் மனத்தினன் மற்றதனை
யின்னதென வேவாரா திசைந்து. (எந)

சேங்கண் மதயானைத் தேர்வேந்தே தேமாலை
யெங்களிலே சூட்ட வியல்வீமன்—மங்கைபாற்
றாதாக வென்றனைத் தோகையைத்தன் னகத்தாற்
கோதாக வென்றனைக் கோ. (எசு)

தேவர் பணிதலைமேற் செல்லுந் திரிந்தொருகான்
மேவுமிளங் கன்னிபான் மீண்டேகும்—பாவிற்
குழல்போல நின்றுழலுங் கொள்கைத்தே பூவி
னிழல்போலுந் தண்குடையா யெனஞ்சு. (எள)

ஆவ துரைத்தா யதுவே கலிங்கின்றேன்
றேவர்கோ னேயத் திருகரிற்—காவல்
கடக்குமா றென்னென்றன் காமநீ ராழி
யடக்குமா றுள்ளத் தவன். (எஅ)

வார்வெஞ் சிலையொழிய வச்சிரத்தான் மால்வரையைப்
போர்வெஞ் சிறகறுத்த பொற்றூளான்—யாருமுனைக்
காணர்போய் மற்றவனைக் காணென்றன் கார்வண்டின்
பாணருந் தாராணைப் பார்த்து. (எக)

இசைமுகந்த வாயு மியலறிந்த காவுந்
திசைமுகந்தா லன்ன தெருவும்—வசையிறந்த
பொன்னகர் போந்திருந்தாற் போன்றதே போர்வித்தப்ப
னன்னகர் கோமான னகர். (அ0)

தேங்குவளை தண்ணிலை செந்தா மரைமலரப்
பூங்குவளை தாமணைக்கை பூத்ததே—யாங்கு
மதுமோக்குந் தாராணும் வாணுதலுந் தம்மிற்
பொதுமோக் கெதிர்மோக்கும் போது. (அக)

நீண்ட கமலத்தை நீலக் கடைசென்று
தீண்டு மளவிற் றிறந்ததே—பூண்டதோ
ரற்பின்றூழ் கூந்தலாள் வேட்கை யகத்தடக்கிக்
கற்பின்றூழ் வீழ்த்த சதவு. (அஉ)

உப்புஞ் சுறைபோற வொட்டுங்கொ லொண்டொடியா
ணெஞ்சு தடவு நெடுங்கண்கள்—விஞ்சவே
நீண்டதோ வங்ஙனே யிங்ஙனே நீண்டலரா
லாண்டதோன் பன்ன னழகு. (அங)

மன்னுகத் துள்ளழுந்தி வாணிந்த மென்முலையும்
பொன்னணியும் புக்கொளிப்பப் புல்லுவவெனன்—றுன்னு
வெடுத்தமீ பானபை யிடைமீய புகுந்து
தடுத்தமீத நாணுந் தறி. (அச)

காவல் கடந்திதங்கள் கன்னிமா டம்புகுந்தாய்
யாவமீனு விருந்தைசக் கிறைவமீனு—மீதவமீனு
வள்ளவா சொல்லென்று ளுசற் குழைமீது
வெள்ளவா ணீர்சோர விட்டு. (அரு)

தீராத காமத் தழலீத்தன் செம்மையெனு
நீரா லவித்துக் கொடுகின்று—வாராத
பொன்னுட மீரவலுடன் மீபாந்தவா சொல்லித்த
னன்னுடுஞ் சொன்னு னளன். (அசு)

என்னுரையை யாதென் றிகழா திணையவர்வாழ்
பொன்னுலகங் காக்கும் புரவலனீ— மென்மாலை
சூட்டுவா யென்றுன் றுடையிற்றீறன் றுப்பிக்கே
யூட்டுவா னெல்லா முரைத்து. (அஎ)

இயமா.தின் றுர்ப்ப வினவனீாதின் றீறங்க
வயமருதீதாண் மன்று வகுத்த—சுயம்வரந்தா
னின்பொருட்டா லென்று நினீனகென்று ணீள்குடையான்
றன்பொருட்டா னீனவா டளர்ந்து. (அஅ)

போதரிக்கண் மாகரான் பொன்மாலை சூட்டதத்தா
னெதரித்தார் தம்மீமா டனையகத்தீத—சாதிச்
செழுந்தரள வெண்குடையாய் மீகவர்களு நீயு
மெழுந்தருள்க வென்று ளெடுத்து. (அக)

அவர்களைப் பூதங்கள் தம்முடைய காலினும் கையினும் கட்டிக்கொண்டன கட்டியிழுத்து வந்தன எனக் குறிப்புக் கொள்க. படர்ந்த பாரம் - உடற் பாரத்தை. கிடப்ப கவர்ந்து தின்று பாழ்படுத்தின எனக் கூட்டுக. நரம்பும் எலும்பும் கீழ்க் கிடப்பத் தசையைக் கவர்ந்து தின்று உடலை வறிதாக்கின என்று கொள்க. ஏறும் - உயர்ந்த; நாலுதிக்கு - நான்கு திசை. ஆறு நால் அமண் பிணம் என்றது இருபத்து நான்கு தீர்த்தங் கரரைக் குறித்தது. அவர்கள் விருஷபவர், அஜிதர், சம்பவர் முதலியோர் இவர் பெயர்களைச் சமணமத நூலிற் காண்க. தாழியிற் பிணங் களும் என்றது மிக முதிர்ந்தவரைச் சாடியில் இட்டுவைக்கும் வழக்கத் தைக் குறித்ததாம். பாழி - அமணர் தவஞ் செய்யும் இடம். வெறும் தவப்பாழி - பயனில்லாத தவஞ் செய்யும் இடம். தவத்திற்குத் தக்க பயனில்லை. வெறுந் தவம் என்பது கருத்து. ''ஓடிமறலி யொளிப்ப முதுமக்கட், சாடி வகுத்த தராபதியும்'' ''பதுமக் கடவுள் படைப் படையக் காத்த முதுமக்கட் சாடி முதலோன்'' என மூவருலாவில் வருவன காண்க. துளப்பு - வயிறு. எழ - எழுந்து புக. அமணப் பிணங் கள் எழுந்து வயிற்றுட் புக.

தேரர்தே அடங்க - புத்த தேவர் எல்லாரையும் அடங்க வெட்டின பூதங்கள் என்பது கூறப்பட்டது. ''பண்டுபோல பால் எழுங்கொல்'' என்று மாற்றுக. இது முற்காலத்திற் புத்த தேவருடம்பிற் பால் சுரந்த தைக் குறித்தது. புலிக்குடம்பைக் கொடுத்தபோது புலி கடிக்கக் குருதி வடியாமற் பால் பெருகியது; பகைவர் வாளால் வெட்டியபோதும் குருதி வடியாமற் பால்வழிந்தது. இதனை யுட்கொண்டு 'பண்டுபோலப் பால் எழுங் கொல்'' என்றார். பூதகணங்கள் புத்தருடம்பினை வெட்டும்போது பால் வருமோ குருதி வருமோ பார்ப்போம் என்றெண்ணி வெட்டின என்பது கருத்து. பசும் புணீர் - புதிய குருதி. கொல் ஐயப் பொருளில் வந்த இடைச் சொல்லாம். தீந்தண்டு - மூன்று தண்டம். இம்ஃது ஆல், அரசு, புரசு என்ற மூன்று மரங்களின் தண்டம். இவற்றைக் கையிற்றூற் கட்டித் துறவியர் கையில் வைத்திருப்பர். மூன்று தேவரும் ஒருவர் என்ற மறைக் கொள்கையை விளக்குவது அது. ஏகம் - ஒன்று. ஒரு தண்டு வைத்திருப்பது. அது கடவுள் ஒருவர் என்பதை விளக்குவது. சோரர் - கள்ளர்; கள்ளத் துறவியர். ஒரு சமயமும் ஒரு மதமும் இல்லா மற் பல மதத்தினரிடத்தும் சென்று பொருள் வாங்கியுண்டு மடத்திற் கிடப்பவரைச் சுட்டியது ''சோரர்'' என்றது. கொத்து - கூட்டம். அக் கூட்டத்தாரை வாரிக்கொண்டு சென்றன பூதகணங்கள் என்று சொற் பெய்து விரித்துக்கொள்க. வேலைவாய் - கடலிடத்தில். மேருவில்லி - சிவபெருமான்; இமயமலையை வில்லாக எடுத்தவர் என்பது காரணம். மஞ்சனச்சாலை சிவனுக்கு நீராடுஞ் சாலையாவது வடவைத்தியுள்ள இடம், யுக முடிவில் வடவைத்தியுட் குளித்து நெருப்பாகவே நின்று உலகத்தை யழிப்பர் என்பது கருத்து: அரக்கர்களை வடவைத்தீயிற் சுட்டுப் பற்களிற் கடித்து மென்று குதட்டின பல பூதங்கள் என்க. மஞ்சனம் - நீராடல். வாள் எயிறு - வாள்போன்ற பல். சவட்டி - கொன்று.

காவிவண்ணன் நீலமலர்போன்ற நிறமுடையவன்: கரியவன். அவன் ஊர்தி - கருடன். வேத போக காரணன்-வேதத்திற்கும் போகத்திற்கும் காரணமா யிருப்பவன் என்பது பொருள். இது பிரமனைச் சுட்டியதாம். வேதம் மறை. போகம்-அறிவு (ஞானம்) இவை பிரமனுற் கூறப்பட்டன முதலில். தூவி - சிறகு. கருடனையும் அன்னத்தையும் கலந்து சுட்டுதி

பண்புகொள வருதலாவது, அப்பெயர்ப் பொருண்மை பண்பு கொள்ளுமாறு வருஞ் சொல்.

உ-ம்:—சாத்தன் கரியன், நெடியன் என்பன.

பெயர்கொள வருதலாவது, அப்பெயர்ப் பொருண்மை யுணராய் பிறிதோர் காரணத்தான் வந்து முற்பெயரோடு ஒட்டுப் படாது நிற்பது.

உ-ம்:—சாத்தன் வணிகன், முடவன் என்பன.

என்று அன்றி யனைத்தும் பெயர்ப் பயனிலையே என்பது, என்று சொல்லப்பட்ட அவ்வனைத்தும் பெயர்க்குப் பயனிலையாம்.

எ-று.

பயனிலை என்பது:—பெயர் வாளாது நிற்குமாயின், செப்பின்கட்பயனின்றும் ஆதலான், அதனை முடிக்கும் சொல் பயனிலை என்றுயிற்று. அஃதேல், இவை யெல்லாம் பெயர்ப் பொருண்மை யைச் சுட்டி நிற்றலின், பொருண்மை சுட்டல் என அடங்கும் எனின், அடங்குமாயினும், பொருண்மை சுட்டல் பொருண்மை யாத்திரத்தைக் குறித்தலானும், வியங்கோள வருகல் அப் பொருண்மை புடை பெயர்தற்கு நிமித்தம் ஆகி வருதலானும், வினைநிலை யுரைத்தல் அப்பொருளின் புடைபெயர்ச்சி யாகலானும், விரவுச் சேற்றல் அவ்வாறன்றி விரவப்படும் நிலைமையதாகி நிற்றலானும், பண்புகொள வருதல் அப்பொருட்கண் உள்ளதோர் குணத்தைக் குறித்து நிற்றலானும், பெயர்கொள வருதல் அப் பொருண்மை முழுதும் உணரப் பிறிதோர் வாய்பாடாக வருதலானும், வகுத்துக் கூறினர் என்க.

சாத்தன் கரியன் ஆயினான், இருப்பு பொன் ஆயிற்று என்பன எவ்வாறு வந்தன எனின், அவையும் பொருளின் புடை பெயர்ச்சி யாகலானும், ஒன்றாகி நின்றலாகிய வினையான் வருதலானும், வினைநிலை யுரைத்தலுள் அடங்கும். அஃதேல், கரியன் பொன் என்னும் பெயரை எழுவாய் என்றுபோ பயனிலை என்றுபோ எனின், இரண்டும் அல்ல: கரியவன் ஆதல், பொன் ஆதல் எனத் திரிபு குறித்து நின்றன, பெயர் குறித்து நின்றன வல்லவாதலின் என்க.

கூட்டுமை போற்சிறந்த கூரிருளைக் கூன்கோட்டாற்
கோட்டுமரம் கொண்ட குளிர்திங்க—ளீட்டுமணிப்
பூணிலா மென்முலைமேற் போதச் சொரிந்தசெத்
தீணிலா வெண்ணை நெருப்பு. (கூ)

அன்னங்கா ணீங்களுபவ் வாதித்தன் ரூணும்போய்
மனனும் படியகலா வல்லிரவின்—மின்னு
மழைத்தாரை வல்லிருட்கும் வாடைக்கு நாங்கள்
பிழைத்தால்வச் தேதனென்னும் பேர். (கூ)

செப்பிளங் கொங்கைமீர் திங்கட் சுடர்பட்டுக்
கொப்புளங் கொண்ட குளிர்வாணை—யிப்பொழுது
மீன்பொதிந்து நின்ற விசும்பென்ப தென்கொலா
தேன்பொதிந்த வாயாற் றெரிந்து. (கூ)

காணுங் கடைங்காவுக் காமன் படைவீடு
வாணுந்தேர் வீதி மறிகடலு—மீனக்
கொடியாடை வையமெலாங் கோதண்ட சாலை
பொடியாடி கொன்றதெல்லாம் பொய் (கூ)

கோள்ளேபோ லுன்ற துயிரென்னுங் கோளரவின்
முள்ளெயிறே மூரி நிலாவென்னு—முள்ளங்
கொடிதிரா வெண்ணுங் குழையுந் தழல்போல
நெடிதிரா வாய்புலரா நின்று. (கூ)

வெங்கதிரோன் றன்னை விழுங்கிப் புழுங்கியோ
கொங்கை யனலிற் கொளுந்தியோ—திங்கள்
மிரிகின்ற வெண்ணிலவால் வேகின்ற தீயோ
வெரிகின்ற தென்றே விரா. (கூ)

ஊழி பலதேவா நிரவாயிற் சீறுவெண் ணுங்
கோழி குரலடைத்த தேதாவெண் ணு—மாழி
துயிலாதே தா வெண் ணுஞ் சுடர்மதியங் கான்ற
வெயிலா லுடலுருகா வீழ்ந்து. (கஅ)

ஆடி வரிவண் டருதேக பறக்கரவ
வாடி மெலிவாள் வனமுலைமே—லோடிப்
பொறையாகச் சோர்வாள் பொறுக்குமோ மோகத்
துறைவ யடங்காத் துயர. (கஆ)

ஈர மதியே யிளஞ்சிலவே யிங்கனே
சோர்குழலின் மீதே சொரிவதுகவண்—மாரன்
பொரவளித்தான் கண்ணி யுனக்குப் புலரா
விரவளித்தா னல்லதூ ஷின்று. (கக)

தூங்கு நிலவினை றழல்போய்த் தலைகொள்ளத்
தேங்குழல்சோர் வண்டு சிறைவெதும்ப—வோங்குயிர்ப்பிற்
றூமங் கரியாத் தனிமெ ழளர்கின்றுள்
யாமங் கரியாக வின்று. (கஎ)

மையிட்ட கண்ணருவி வார வளைசோரக்
கையிற் கபோலத் தலம்வைத்து—மெய்வருந்தித்
தேனிருந்த பூங்கணையே தியாகத் தேமொழியர்
டானிருந்து செய்வா டவம். (கஉ)

ஆள்ளிக் கொளலா யடையத் திரண்டொன்றுய்க்
கொள்ளிக்கும் வில்லாத கூரிருளா—யுள்ளம்
புதையவே வைத்த பொதுமகளிர் தங்க
ளிதையமே போன்ற திரா. (கஊ)

ஊக்கிய சொல்ல ரொலிக்குந் துடிக்குரலர்
வீக்கிய கச்சையர் வேல்வாளர்—காக்க
விடையாமங் காவலர்கள் போந்தா ரிருளின்
புடையவா யிருள்புடைத்தற் போன்று. (ககச)

சேமங் களிறுபுகத் தீப்பாலின் செவ்வழியாழ்
தாழுள் ளுறைபுகுதத் தார்வண்டு—காமன்ற
பூவாளி யைந்திற் புகத்துயில் புக்கதே
யோவாது முந்நீ ருலகு. (ககஞ)

ஊன்றின் றுவகையா லுள்ள வுயிர்புறம்பே
தோன்றுங் கழுதுந் துயின்றதே—தான்ற
னுரைசோராச் சோர வுடல்சோர வாயி
னிரைசோரக் கைசோர நின்று. (ககசு)

அன்றி லொருகண் டுயின்மறுக ணுர்வத்தா.
வின்றுணைமேல் வைத்துறங்கு மென்னுஞ்சொ—லின்று
தளிர்ந்ததே போலாற்றிச் சாம்புகின்ற போதே
யழிந்ததே கண்ணீ ரவட்கு. (ககள)

ஏழுலகுஞ் சூழிருளா யென்பொருட்டால் வேகின்ற
வாழ்துயர மேதென் றறிகிலேன்—பாழி
வரையோ வெணுகிநடுங்கிதாண் மன்னுமே வாதின்னு
மிரையோ விரவுக் கியான். (ககஅ)

கருஷிக்கு நீங்காத காரிருள்வாய்க் கங்கு
லுருவிப் புகுந்ததா லோதை—பருகிக்கார்
வண்டுமேபோ கட்ட மலர்மேபான் மருண்மாலை
யுண்டுமேபோ கட்ட வுயிர்க்கு. (ககக)

எழுந்திருக்கு மேமமாந்து பூமமாந் தணிசின்
விழுந்திருக்குந் தன்னுடம்பை மீளச்—செழுந்தரளத்
தூணேறு சேர்க்குந் துணையேது மில்லாத
நாணேறு கின்றழியு ணைந்து. (கஉ0)

விரிகின்ற மெல்லமளி வெண்ணிலவின் மீத
சொரிகின்ற காரிருள்போற் சோருஞ்—புரிகுழலைத்
தாங்குந் தளருந் தழலில நெடிதுயிர்க்கு
மேங்குந் துயரோ டிருந்து. (கஉக)

உடைய மிடுக்கெல்லா மென்மேலே யோச்சி
விடைய மிடுக்கின்மை யாலே—கொடியன்மேன்
மாகாதல் வைத்தே தா மன்னவர்த மின்னருளோ
வேகாத தென்னே விரான். (கஉஉ)

மயங்குந் தெளியு மனநடுங்கும் வெய்துற்
றுயங்குமு வற்றே யுலாவும்—வயங்கிழைபோய்ச்
சோருந் துயிலுந் துயிலாக் கருநெடுக்க
ணீருங் கடைசோர நின்று. (கஉங)

விழுது படத்திணிந்த வீங்கிருள்வாய்ப் பட்டுக்
கழுதுட வழிதேடுங் கங்குற்— பொழுதிடையே
நீருயிர்க்குங் கண்ணீரு நெஞ்சுருகி வீழ்வார்த
மாருயிர்க்கு முண்டோ வரண். (கஉச)

பூசுரர்தங் கைம்மலரும் பூங்குழுத முப்முகிழ்ப்பக்
காசினியுந் தாமரையுங் கண்விழிப்ப—வாச
மலர்ந்தேதங் கோதையா ளாழ்துயரத் தேதோ
புலர்ந்தே தயற்றைப் பொழுது. (கஉந)

வில்லி கணையிழப்ப வெண்மதியஞ் சீரிழப்பத்
தொல்லை யிருள்கிழியத் தோன்றினான்---வல்லி
மணமாலை சூட்டிடுதோள் வாளரசர் முன்னே
குணவாயிற் செங்கதிரோன் குன்று. (கஉச)

முரைசெறிந்த நாளழு முற்றியபின். கொற்ற
வரைசெறிந்த தோண்மன்னர் வந்தார்—வரைசெறிந்த
மாலை துவள முடித்தங்க வால்வளையுங்
காலை முரசுங் கலந்து. (கஉள)

மன்றலந்தார் மன்னர் நடுவணைய வந்திருந்தான்
கன்று குதட்டிய கார்நீல—முன்றிற்
குறுவிழிக்கு நேர்நாடன் றோகைதபெருங் கண்ணின்
சிறுவிழிக்கு நேரிருந்த தேசய். (கஉஅ)

நித்திலத்திற் பொற்சூடு நீலமணித் தோடாக
மைத்தடங்கண் செல்ல வயவேந்தர்—சித்த
மருங்கே வரவண்டின் பந்தர்க்கீழ் வந்தா
ளருங்கேழ் மணிப்பூ ணணங்கு. (கஉக)

பேதை மடமயிலைச் சூழும் பிணைமான்போற்
கோதை மடமானைக் கொண்டணைந்த—மாதர்
மருங்கின் வெளிவழியே மன்னவர்கண் புக்கு
நெருங்கினவே மேன்மே னிறைந்து. (கஉO)

மன்னர் விழித்தா மறைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னஞ் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று. (கஉக)

வடங்கொள் வனமுலையாள் வார்குழைதீ மேலோடு
நெடுங்கட் கடைபார்த்து நின்று—னிடுங்கண்டு
பூவாளி வேந்தன்றன் பொன்னுலகம் பின்னேயிட்
டோவாளி காணின்மே லிட்டு. (கஉஉ)

மன்னர் குலமும் பெயரும் வளநாடு
மின்ன பரிசென் றியலணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டிணை
டோர்வேந்தர் தம்மைத் தெரிந்து. (கஉஊ)

பொன்னி யழுதப் புதுக்கொழுந்து பூங்கமுகின்
சென்னி தடவுந் திருநாடன்—பொன்னிற்
சுணங்கவிழ்ந்த பூண்முலையாய் சூழுமரிற் றுன்னர்
கணங்கவிழ்ந்த வேலனிவன் கான். (கஉச)

போர்வாய் வடிவேலாற் போதப் படாதோருஞ்
சூர்வாய் மதரரிக்கட் டோகாய்கேள்—பார்வாய்ப்
பருத்தோதார் மால்வரையைப் பண்டொருகாற் செண்டாற்
றிரித்தகோ விங்கிருந்த சேய். (கஉஎ)

வென்றி நிலமடந்தை மென்முலைமேல் வெண்டுகில்போற்
குன்றருவி பாயுங் குடநாட—னின்றபுகழ்
மாதே யிவன்கண்டாய் மானத் தனிக்கொடியின்
மீதே சிலையுயர்த்த வேந்து. (கஉஏ)

ஆழி வடிம்பலம்ப நின்றனு மன்றிருகா
லேழிசைநூற் சங்கத் திருந்தானு—நீள்விசும்பி
னற்றேவர் தூது நடந்தானும் பாரதப்போர்
செற்றனுங் கண்டாயிச் சேய். (கஉஐ)

தெரியி லிவன்கண்டாய் செங்கழுநீர் மொட்டை
யரவின் பசுங்கலெ யென்ற றஞ்சி—யிரவெல்லாம்
பிள்ளைக் குருகிரங்கப் பேதைப்புட் டாலாட்டும்
வள்ளைக் குருகாடர் மன். (கஉஅ)

தேமருதார்க் காளை யிவன்கண்டாய் செம்மலர்மேற்
காமருசங் கீன்ற கதிர்முத்தைத்—தாமரைதன்
பத்திரத்தா லேற்கும் படுகர்ப் பழனஞ்சூழ்
மத்திரத்தார் கோமான் மகன். (கஉக)

அஞ்சாயன் மாரி யிவன்கண்டா யாலிவாய்
வெஞ்சாறு பாய வினைந்தெழுந்த—செஞ்சாலிப்
பச்சைத்தாண் மேதிக் கடைவாயிற் பாலொழுகும்
மச்சைத்தார் கோமான் மகன். (கஉ0)

வண்ணக் குவளை மலர்விளரி வண்டெடுத்த
பண்ணிற் செவிவைத்துப் பைங்குவளை—யுண்ணா
தருங்கடா கிற்கு மவந்திரா டாளு
மிருங்கடா யாணை யிவன். (கஉச)

விடக்கதிர்வேற் காளை யிவன்கண்டாய் மீனின்
றொடக்கொழியப் போய்மிதிர்ந்த தண்டிடன்—மடற்கமுகின்
செந்தோடு பீறித்தேன் செந்நெற் பசுந்தோட்டில்
வந்தோடு பாஞ்சாலர் மன். (கஉஉ)

அன்னந் துயிலெழுப்ப வந்தா மரைவயலிற்
செந்நெ லரிவார் சினையாமை—வன்முதுகிற்
கூனிரும்பு தீட்டுங் குலக்கோ சலநாடன்
றேனிருந்த சொல்லாயிச் சேய் (கஉங)

புண்டரிகந் தீயெரிவ தோல்விரியப் பூம்புகைபோல்
வண்டரியுந் தெண்ணீர் மகதர்கோ—னெண்டிசையிற்
போர்வேந்தர் கண்டறியாப் பொன்னவம் பின்னுடைய
தேர்வேந்தன் கண்டாயிச் சேய். (கசச)

கூன்சங்கின் பிளவே கொடிப்பவளக் கோடிடறித்
தேன்கழியில் வீழத் திரைக்கரத்தால்—வான்கடல்வந்
தந்தோவெனவெடுக்கு மங்கரா டாளுடையான்
செந்தேன் மொழியாயிச் சேய். (கசரு)

வெள்வாளைக் காளைமீன் மேதிக் குலமெழுப்பக்
கள்வார்ந்த தாமரையின் காடுழக்கிப்—புள்ளோடு
வண்டரியச் செல்லு மணிநீர்க் கலிங்கர்கோன்
றண்டெரியற் றேர்வேந்தன் ரூன். (கசகூ)

அங்கை வரிவளையா யாழித் திரைகொணர்ந்த
செங்கண் மகரத்தைத் தீண்டிப்போய்க்—கங்கையினைடச்
சேல்குளிக்குங் கேகயர்கோன் றெவ்வாடற் கைவளைமேல்
வேல்குளிக்க கின்ரூனிவ் வேந்து. (கசஎ)

மாநீர் நெடுங்கயத்து வள்ளைக் கொடிமீது
தாமனை மன்னந் தனிக்கயிற்றிற்—போநீள்
கழைக்கோ கையசேய்க்குங் காந்தா நாடன்
மழைக்கோதை மானேயிம் மன். (கசஅ)

அங்கை நெடுவேற்க ணுயிழையாய் வாவியின்வாய்ச்
சங்கம் புடைபெயரத் தான்கலங்கிச்—செங்கமலப்
பூச்சிந்து நாட்டேறல் பொன்னிளைக்குந் தன்பணைசூழ்
மாச்சிந்து நாட்டானிம் மன். (கசக)

காவலரைத் தன்சிடி காட்டக்கண் மூரிருவர்
சேவர் ளனுருவாச் சென்றிருந்தார்— பூவரைந்த
மாசிலாப் பூங்குழலான் மற்றவரைக் காணுசின்
றாசலா டெற்ரு ளுளம். (கநo)

பூணுக் கழுகளிக்கும் பொற்ரூடியைக் கண்டக்கா
ணுணுக்கு நெஞ்சுடைய நல்லீவந்தர்—நீணிலத்து
மற்றேறவர் வாராதார் வானவரும் வந்திருந்தார்
பொற்றேர் ளனுருவாய்ப் போந்து. (கநக)

மின்னுந்தார் வீமன்றன் மெய்ம்மாபிற் செம்மைசேர்
கன்னியா னுகிற் கடிமாலை—யன்னந்தான்
சொன்னவினைச் சூட்ட வருளென்ரூள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து. (கநஉ)

கண்ணிணைமத்த லானடிகள் காசினியிற் ரேய்த்தலான்
வண்ண மலர்மாலை வாடுதலா—லெண்ணி
நநுந்தா மரைவிருப்பு நன்னுதலே யன்னு
ளநிந்தா ணளன்றன்னை யாங்கு. (கநங)

விண்ணரசு ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகன் ஞாலங் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினுள் பொன். (கநச)

திண்டோள் வயவேந்தர் செந்தா மரைமுகம்போய்
வெண்டா மரையாய் வெளுத்தவே—யொண்டாரைக்
கோமாலை வேலான் குலமாலை வேற்கண்ணுள்
தூமாலை பெற்றிருந்தபோது. (கநந)

மல்லன் மறுகின் மடநடை குடனைகச்
செல்லு மழவிடைபோற் செம்மாந்து—மெல்லியலாள்
பொன்மாலை பெற்றதோ ளோடும் புறப்பட்டா
னன்மாலை வேலா னளன். (கருசு)

வேலை பெருவழுதம் வீமன் றிருமடந்தை
மாலை பெருதகலும் வாடாள்—வேலை
பொருங்கலிநீர் ஞாலத்தைப் புன்னெறியி லாக்கு
மிருங்கலியைக் கண்டா ரெதிர். (கருள)

ஈங்குவா வென்னென் றிமையவர்தங் கோன்வினவத்
தீங்கு கருகலியுஞ் செப்பினை—னீங்கள்
விருப்பான வீமன் றிருமடந்தை யோடு
மிருப்பான் வருகின்றா றன் யான். (கருஅ)

மன்னவரில் வைவே னளனே மதிவதனக்
கன்னி மணமாலை கைக்கொண்டா—னுன்னுடைய
வுள்ளக் கருத்தை யொழித்தே குதியென்றான்
வெள்ளைத் தனியாணை வேந்து. (கருக)

விண்ணரசர் சிற்க வெறித்தேன் மணமாலை
மண்ணரசர்க் கீந்த மடமாதி—னெண்ணங்
கெடுக்கின்றா றன்றவடன் கேள்வனுக்குங் கீழ்மை
கொடுக்கின்றா றென்றான் கொதித்து. (கூகூ)

வாய்மையுஞ் செங்கோல் வளனு மனத்தின்கட்
டூய்மையு மற்றவன் றூள்வலியும்—பூமா
னெடுங்கற்பு மற்றவற்கு நின்றுரைத்துப் போனு
னெடுங்கொற்ற வச்சிரத்தா னுங்கு. (ககூக)

செருக்கதிர்வேற் கண்ணியுடன் றேர்வேந்தன்கூட
விருக்கத் தரியே னிவளைப்—பிரிக்க
வுடனை வென்று னுடனே பிறந்த
விடாகாக மன்னன் வெகுண்டு. (கசுஉ)

வெங்கதிரோன் றூணும் விதர்ப்பன் றிருமடந்தை
மங்கலநாட் காண வருவான்போற்—செங்குமுதம்
வாயடங்க மன்னற்கும் வஞ்சிக்கு நன்னெஞ்சிற்
றீயடங்க வேறினன் றேர். (கசுக)

இன்னுயிர்க்கு நேரே யிளமுறுவ லென்கின்ற
பொன்னழகைத் தாமே புனைதப்பார்ப்போன்-மென்மலருஞ்
சூட்டினர் சூட்டித் துடிசே ரிடையாளைப்
பூட்டினர் மின்னிமைக்கும் பூண். (கசுச)

கணிமொழிந்த நாளிற் கடிமணமுஞ் செய்தா
ரணிமொழிக்கு மண்ண லவற்கும்—பணிமொழியார்
குற்றேவல் செய்யக் கொழும்பொன் னறைபுக்கார்
மற்றவரு மொவ்வார் மகிழ்ந்து. (கசுஞ)

சேந்திருவின் கொங்கையினுந் தேர்வேந்த னகத்தும்
வந்துருவ வார்சிலையைக் கால்வளைத்து—வெந்தீயு
நஞ்சுந் தொடுத்தனைய காம மலர்வாளி
யஞ்சுந் தொடுத்தா னவன். (கசுசு)

ஒருவ ருடலி லொருவ ரொதுங்கி
யிருவ ரெனுந்தோற்ற மின்றிப்—பொருவெங்
கனற்கேயும் வேலானுங் காரிகையுஞ் சேர்ந்தார்
புனற்கே புனல்கலந்தாற் போன்று. (கசுள)

குழைமேலுங் கோமா னுயிர்மேலுங் கூந்தன்
மழைமேலும் வாளொடி மீள—விழைமேலே
யல்லோடும் வேலா னகலத் தொடும்பொருதாள்
வல்லோடுங் கொங்கை மடித்து. (கசுஅ)

வீரனக லச்செறுவின் மீதோடிக் குங்குமத்தி
னீர விளவண்ட விட்ட தே—னோர்பொருத
காராரு மெல்லோதிக் கன்னியவள் காதலெனு
மோராறு பாய வுடைந்து. (கசுக)

கொங்கை முகங்குழையக் கூந்தன் மழைகுலையச்
செங்கயற்க ணீடிச் செவிதடவ—வங்கை
வளைபூச லாட மடந்தையுடன் சேர்ந்தான்
விளைபூசற் கொல்யானை வேந்து. (கஎ0)

தைய றளிர்க்கரங்க டன்றடக்கை யாற்பற்றி
வைய முழுது மகிழ்தூங்கத்— தூய்ய
மணந்தான் முடித்ததற்பின் வாணுதலுந் தானும்
புணர்ந்தார் நெடுங்காலம் புக்கு. (கஎக)

சுயம்வரகாண்டம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் - சஎஅ.

இரண்டாவது

கலிதொடர்காண்டம்.

முந்தை மறைதான் முடியெனலாந் தண்குருகூர்ச்
செந்தமிழ் வேத சிரமெனலா—நந்தும்
புனைழக்கைக்கு நேயப் பொதுவர் மகளிர்க்கு
மனைழக்கைக்கு முன்செல் லடி. (க)

செக்கர் நெடுவானிற் றிங்க ணிலாத்துளும்பி
யுக்க தெனச்சடைமே லும்பர்நீர்—மிக்கொழுகும்
வெள்ளத்தான் வெள்ளி நெடுங்கிரியான் மெய்யன்ப
ருள்ளத்தா னெங்கட் குளன். (உ)

தவளத் தனிக்குடையின் வெண்ணிழலுந் தையல்
குவளைக் கருங்குழலுங் கொள்ளப்—பவளக்
கொழுந்தேதறிச் செந்நெற் குலைசாய்க்கு நாடன்
செழுந்தேரி லேறினான் சென்று. (ங)

மங்கையர்கள் வாச மலர்கொய்வான் வந்தடையப்
பொங்கி யெழுந்த பொறிவண்டு—கொங்கோ
டெதிர்கொண் டீனவனம் போ லெங்குவன முத்தின்
கதிர்கொண்ட தூண்முலையாய் கான். (ச)

பாவையர்கை தீண்டப் பணியாதார் யாவரே
பூவையர்கை தீண்டலுமப் பூங்கொம்பு—மேவியவர்
பொன்னடியிற் றாழ்ந்தனவே பூங்குழலாய் காணென்றான்
மின்னெடுவேற் கையான் விரைந்து. (ஞ)

மங்கை யொருத்தி மலர்கொய்வாள் வாண்முகத்தைப்
பங்கயமென் றெண்ணிப் படிவண்டைடச்—செங்கையாற்
காத்தானக் கைம்மலரைக் காந்தளனைப் பாய்தலுமே
லேர்த்தானைக் காணென்றான் லேந்து. (சு)

புல்லும் வரிவண்டைடக் கண்டு புனமயில்போற்
செல்லு மடந்தை சிலம்பவித்து—மெல்லப்போ
யம்மலைக் கொய்யா தருந்தளிரைக் கொய்வானைச்
செம்மலிற் றேனே தெளி. (எ)

கொய்த மலரைக் கொடுங்கையி னலணைத்து
மொய்குழலிற் சூட்டுவான் முன்வந்து—தையலாள்
பாதார விந்தத்தே சூட்டினன் பாவையிடைக்
காதார மின்மை யுரைத்து. (அ)

ஏற்ற முலையார்க் கினனு நிடம்புலவித்
தேற்ற வமளியெனத் தேற்றுமாற்—காற்றசைப்ப
வுக்க மலரோ டுகுத்தவனை முத்தமே
யெக்கர் மணன்மே லினைசந்து. (கூ)

அலர்ந்த மலர்சிந்தி யம்மலர்மேற் கொம்பு
புலர்ந்தசைந்து பூவணமேற் புல்லிக்—கலந்தசிந்த
புல்லென்ற கோலத்துப் பூவையைப்போன் றேதி
யல்லென்ற சோலை யழகு (கo)

கொங்கை முகத்தணையக் கூட்டிக் கொடுங்கையா
லங்கணைத்த வாய்நெகிழ்ந்த வாம்பற்பூக்—கொக்கஷிழ்
வார்க்கின்ற கூந்தன் முகத்தை மதியென்று [தேன்
பார்க்கின்ற தென்னலாம் பார். (கக)

மெய்த குவளை கிழித்துக் குறுநகதன்மே
லெய்தத் தனிவைத்த வேற்றிழையாள் —வையத்தா
ருண்ணுக் கடுவிடத்தை யுண்ட வொருமூன்று
கண்ணுனைப் போன்றனவே காண். (கஉ)

கொழுநன் கொழுந்தாரை நீர்வீசக் கூசிச்
செழுமுகத்தைதத் தாமரைக்கே சேர்த்தாள்—கெழுமியவக்
கோமகற்குத் தானினைந்த குற்றங்க ளத்தனையும்
பூமகட்குச் சொல்லுவாள் போல். (கஊ)

பொய்தற் கமலத்தின் போதிரண்டைக் காதிரண்டிற்
பெய்து முகமூன்று பெற்றுள்போ—லெய்த
வ்ருவாளைப் பாரென்றன் மாற்ருரை வென்று
செருவாளைப் பார்த்துவக்குஞ் சேய். (கக)

பொன்னுடைய வாசப் பொகுட்டு மலரேலயத்
தன்னுடனே மூழ்கித் தனித்தெழுந்த—பின்னுடைய
தூணை டிருமுகத்தைப் புண்டரிக மென்றயிர்த்துக்
காணை தயர்வாளைக் காண். (கஙு)

சிறுக்கின்ற வாண்முகமுஞ் செங்காந்தட் கையான்
முறுக்குமிகு மூரிக் குழலும்—குறிக்கிற்
கரும்பாம்பு வெண்மதியைக் கைக்கொண்ட காட்சி
யரும்பாம் பணைமூலையா யாம். (கசு)

சோர்புனலின் மூழ்கி யெழுவாள் சுடர்நுதன்மேல்
வார்குழலை நீக்கி வருந்தோற்றம்—பாராய்
விரைகொண் டெழுந்தபிறை மேகத் திடையே
புரைகின்ற தென்னலாம் பொற்பு. (கஎ)

செழுநீல நோக்கெறிப்பச் செங்குவளை கொய்வாண்
முழுநீல மென்றயிர்த்து முன்னர்க்—கழுநீரைக்
கொய்யாது போவாளைக் கோல்வளைக்குக் காட்டிஞன்
வையாரும் வேற்றடக்கை மன். (கஅ)

காவி பொருநெடுங்கட் காதலியுங் காதலனும்
வாவியு மாறுங் குடைந்தாடித்—தேவிற்
கழியாத சிந்தையுடன் கங்கைநதி யாடி
யொழியா துறைந்தா ருவந்த. (கக)

நறையொழுக வண்டுறையு ணன்னகர்வாய் நாங்க
ளுறையு மிளமரக்கா வொக்கு—மிறைவளைக்கைச்
சிற்றிடையாய் போல்குற் றேமொழியாய் மென்முறுவற்
பொற்றொடியாய் மற்றிப் பொழில். (உ0)

கன்னியர்தம் வேட்கையே போலுங் களிமழலை
கன்மணிவா யுள்ளே தடுமாற—மன்னவனே
யிக்கடிகா நீங்க ளுறையு மிளமரக்கா
வொக்குமதே கா வென்ற ளுயிர்த்து. (உக)

தொண்டைக் கனிவாய் துடிப்பச் சுடர்நுதன்மேல்
வெண்டரள மென்ன வியர்வரும்பக்—கெண்டைக்
கடைசிவப்ப நின்றுள் கழுன்மன்னர் வெள்ளைக்
குடைசிவப்ப நின்றுன் கொடி. (உஉ)

தங்கள் புலவித் தலையிற் றணித்திருந்த
மங்கை வதன மணியரங்கி—லங்கண்
வடிவாண்மேற் கால்வளைத்து வார்புருவ மென்னுங்
கொடியாடக் கண்டாரேர் கூத்து. (உங)

சில்லரிக் கிண்கிணிமென் றெய்வமலர்ச் சீறடியைத்
தொல்லை மணிமுடிமேற் சூட்டி னுண்—வல்லி
முழுநீலக் கோதை முகத்தே மலர்ந்த
செழுநீல மாறுச் சிவப்பு. (உச)

அங்கைவேன் மன்ன னகல மெனுஞ்சுறவிற்
கொங்கைவேர் பூட்டிக் குறுவியர்நீ—ரங்கடைத்துக்
காதல் வரம்பொழுக்கிக் காமப் பயிர்வினைத்தாள்
கோதையரின் மேலான கொம்பு. (உஞ)

வேரி மழைதுளிக்கு மேகக் கருங்கூந்தற்
காரிகையுந் தானும்போய்க் கண்ணுற்றான்— மூரித்
திரைமேற மென்கிடங்கிற் சேலேற வாளை
கரைமேயுங் கங்கைக் கரை. (உக)

சூதக் கனியூற லேற்ற சுருள்வாழை
கோதி னறவேற்குங் குப்பியென—மாதரார்
கையுற்று கோக்கு மகன்பொழில்சென் றெய்திணன்
வையுற்ற வேற்றரசே மன். (உன)

வான்மேய நீண்டுயர்ந்த மாடக் கொடிநுடங்கத்
தான்மேன்று மற்றித் தடம்பதிதான்—வான்மேன்றி
வில்விளக்கே தூக்கும யுதர்ப்பனு டாளுடையா
னல்விளக்கே யெங்க ணகர். (உஅ)

பொய்கையும் வாசப் பொழிலு மெழிலருவிச்
செய்குன்று மாறுந் திரிந்தாடித்—தையலுட
னுரிரண்டாண் டெல்லை கழித்தா னடையலரைக்
கூரிரண்டாக் கொல்யானைக் கோ. (உக)

கோல நிறப்வினர்ப்பக் கொங்கை முகங்கருக
நீல நிறமயிர்க்கா னின்றெறிப்ப—நூலென்னத்
தோன்றுத நுண்மருங்கு றேன்றச் சுரிகுழலா
ளீன்றுள் குழவி யிரண்டு. (ஈ0)

ஆண்டிரண்டா றில்லை யளவுந் திரிந்தேதயுங்
காண்டகைய வெங்கலியுங் காண்கிலா—னீண்டபுகழ்ச்
செருநெறியாற் பார்காத்த செங்கோ னிலவேந்தன்
றன்னெறியால் வேறூர் தவறு. (ஈக)

சந்திசெயத் தாள்விளக்கத் தாளின்மறுத் தான்கண்டு
புந்தி மகிழப் புகுந்துகலி—சிந்தையிலாற்
றன்வயமே யாக்கித் தமைய னுடனிருந்தான்
பொன்னசல மார்பற் புகைந்து. (ஈஉ)

நாராய ணைய நமிவன் றவனடியிற்
சேராரை வெந்துயரஞ் சேர்ந்தாற்சேபாற்—பாராளுங்
கொற்றவனைப் பார்மடந்தை சேகாமானை வாய்மைநெறி
கற்றவனைச் சேர்ந்தான் கலி. (ஈங)

நன்னெறியில் சூதா னளனைக் களஷியற்றித்
தன்னரசு வாங்கித் தருகின்றேறன்—மன்னவனே
போதுவா யென்னுடனே யென்றான் புலைநரகுக்
கேதுவாய் நின்று னெடுத்து. (ஈச)

புன்னை நறுமலரின் பூந்தா திடையொதுங்குங்
கன்னி யிளமேதிக் காற்குளம்பு—பொன்னுரைத்த
கல்லேலைக்கு நாடன் கவறுடப் போயினன்
கொல்லேலற்றின் மேலேறிக் கொண்டு. (ஈசு)

வெங்கட் சினவிடையின் மேலேறிக் காலேறிக்
கங்கைத் திரைநீர் கரையேறிச்—செங்கதிர்ப்பைம்
பொன்னெழியப் போதரும் புறம்பணைசூழ் நன்னாடு
பின்னெழியப் போந்தான் பெயர்ந்து. (கூக)

அடற்கதிர்வேல் மன்ன னவனேனற்றின் முன்போ
யெடுத்தகொடி யென்ன கொடியென்—மிடற்சூது
வெல்லுங் கொடியென்றன் வெங்கவியா லங்கவன்மேற்
செல்லுங் கொடியோன் றெரிந்து. (கூஎ)

வென்றீறு மிதுவாயின் மெய்ம்மையே யெம்மோடு
வான்றீறுய் மடற்றெங்கின் வாண்றோற—ரூன்றோக்கி
மீதாடி வாளைவயல் வீழ்ந்துழக்கு நன்னாடன்
சூதாட வென்றூன் றுணிந்து. (கூஅ)

காதல் கவறூடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிந
ஓதன் மறுத்த லிவைகண்டாய்—போதிற்
சினையாமை வைகுந் திருநாடா செம்மை
சினையாமம் பூண்டார் நெறி (கூக)

அறத்தைவர் கல்லு மருநரகிற் சேர்க்குந்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கு—மறத்தையே
பூண்டுவிரோ தஞ்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்க
ளூண்டுவரோ வென்றூர் தெரிந்து. (கo)

உருவழிக்கு முண்மை யுயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கு மானஞ் சிதைக்கு—மருவு
மொருவரோ டன்பழிக்கு மொன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து. (கக)

ஆயம் பிடித்தாரு மல்லற் பொதுமகளிர்
நேயம் பிடித்தாரு நெஞ்சிடையே—மாயம்
பிடித்தாரின் வேறல்ல ரென்றுரைப்ப தன்றே
வடித்தாரின் னூலோர் வழக்கு. (உ)

தீது வருக நலம்வருக சிந்தையாற்
சூது பொரவிசைந்து சொல்லினேம்—யாதும்
விலக்கலிர்நீ ரென்றன் வராமேலறை மேதி
கலக்கலநீர் நாடன் கனன்று. (ஊ)

நிறையில் கவருட னீங்கினந்தை யாகிற்
றிறையிற் கதிர்முத்தங் சிந்தும்—துறையிற்
கருங்பொடியா மள்ளர் கடாவடிக்கு நாடா
பொருங்படியா தென்றுனிப் போது. (ஈ)

விட்டொளிர்வில் வீசி விளங்குமணிப் பூணரா
மொட்டினே னுன்பணைய மோதென்ன—மட்டவிழ்தார்
மல்லேற்ற தோளானும் வான்பணைய மாகத்தன்
கொல்லேற்றை வைத்தான் குறித்து. (ஊ)

காரையுங் கூந்தலார் காரிகைமேற் காதலித்த
தாரையுந் தோளான் றனிமனம்போ—னேர
தவறுப்ப் புரண்ட தமையமெறிந் கூடிக்
கவறுப்ப் புரண்டான் கலி. (ஊஉ)

வைத்த மணியாரம் வென்றோறன் மறுபலகைக்
கொத்த பணைய முறையென்ன—வைத்தரிதி
நூறு யிரத்திரட்டி நூறுநூ றுயிரமும்
வேறுகத் தோற்றுனவ் வேந்து. (ஊஊ)

பல்லா யிரப்பரியும் பத்துநூ றாயிரத்துச்
சொல்லார் மணித்தேருந் தோற்றதற்பின்—வில்லாட்கண்
முன்றேற்று வானின் முகிறேற்கு மால்யானை
பின்றேற்றுத் தோற்றான் பிடி. (சஅ)

சாதுரங்கம் வென்றேன் றருப்பணைய மேதென்ன
டாதுரங்கம் தூணு மணித்தேரான்—சூதரங்கிற் [குழற்
பாவையரைச் செவ்வழியாழ்ப் பண்ணின்மொழிப் பின்னு
தூவையரைத் தோற்றான் பொருது. (சக)

கற்பின் மகளிர்பா னின்றுந் தமைக்கவட்டின்
விற்கு மகளிர்பான் மீண்டாற்போ—னிற்கு
நெறியாண மெய்ம்மைவாய்ப் பின்றூன மீங்கிச்
சிறியாணைச் சேர்ந்தா டிரு. (ஙo)

மணைக்குரியா ரன்றே வருந்துயரந் தீர்ப்பார்
சினைச்சங்கின் வெண்டலையைத் தேறு—னனைக்குங்
குவளைப் பணைப்பைந்தாட் குண்டுநீர் நாடா
விவளைப் பணையந்தா வின்று. (ஙக)

இனிச்சூ தொழிந்தே தா மினவண்டு கிண்டிக்
கனிச்சூத வார்பொழிலின் கண்ணே—பனிச்சூதப்
பூம்போ தவிழ்க்கும் புனலுடன் பொன்மகளே
காம்போது மென்றூ னளன். (ஙஉ)

மென்காற் சிறையன்னம் வீற்றிருந்த மென்மலைமேற்
புன்சாகங் கொள்ளத்தான் போறற்போற்—றண்கால்
பொடியாடத் தேவியோடும் போயீறு னன்றே
கொடியாணுக் கப்பார் கொடுத்து. (ஙஊ)

இ-ள் :—இருபொருட்கண் ஒருதலை பற்றிவரும் ஒருசொல் அவ்விரு பொருளினும் உயர்ந்த பொருளின் வழியை உடைத்து எ-று.

வழி என்றது அப் பொருளின் வழியாகிய பொருள் என்று கொள்க. உயர்வு என்பதைச் சிறப்பென்று கொள்க. கொள்ளவே, அஃதொழிற்குச் சிறவாத பொருட்கண் வரும் என்றவாறும்.

உ-ம்.—அமைச்சரோடு இருந்தான் அரசன். இருந்தான் என்னும் தொழிற்குச் சிறந்தான் அரசன் ஆதலின், சிறவாத அமைச்சர் மேல் ஏடு வந்தது. அரசனொடு இருந்தார் அமைச்சர் என்ற வழி இருந்தார் என்னும் தொழிற்குச் சிறந்தார் அமைச்சர் ஆதலின் ஏடு அரசர்மேல் வந்தது. இவ்வாறு உடனிகழ்ச்சி ஆகலான் அத்தொழிற்கு இருவரும் சிறந்தார் எனிற் குற்றம் என்னையெனின், அரசரோடு இருந்தார் அமைச்சர், அவரை மந்திரம் இருமின் என்றூர் என்றவழி, அச்சுட்டு நிரடத்தும் செல்லாமையாலும், தொழில் முடியும் பெயரே சிறப்புடைய தெனவுங் கொள்க. இனிச்சிறப்புடைய பொருண்மேல் ஏடு வரு மெனப் பெருள் உரைத்தார் உளர் * ஆயினும், இப்பொருள் பாணினியார்க்கும் ஒக்கும். [எ]

88. மூன்றனும் ஐந்தனும் தோன்றக் கூறிய
ஆக்கமொடு புணர்ந்த வதுக் கிளவி
நோக்கோ ரனைய என்மனர் புலவர்.

மூன்றுவதற்கும் ஐந்தாவதற்கும் உரியதோர் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள் :—மூன்றுவதன்கண்ணும் ஐந்தாவதன்கண்ணும் விளங்க எடுத்தோதப்பட்ட ஆக்கம் என்னும் சொல்லோடு தொடர்புபட்ட அதுக்கிளவி, இருவகை வேற்றுமைக்கும் நோக்கு ஒரு தன்மைய. எ-று.

உ-ம் :—வாணிகத்தான் ஆயினன்; வாணிகத்தின் ஆயினன் என இருவாற்றானும் வரும்.

---

* இளம் பூரணர்.

அறையும் பறையரவங் கேட்டழிந்து நைந்து
பிறைநுதலாள் பேதைமையை நோக்கி—முறுவலியா
னிங்ஙகர்க்கீ தென்பொருட்டா வந்த தெனவுரைத்தான்
மன்னகற்றுங் கூரிலைவேன் மன். (சுயி)

தன்வாயின் மென்மொழியே தாங்கிணை னேங்குநகர்ப்
பொன்வாயில் பின்னைகப் போயினன்—முன்னுளிற்
பூமகளைப் பாரிணைடும் புல்லினன் றன்மகளைக்
கோமகளைத் தேவியொடுங் கொண்டு. (சுக)

கொற்றவன்பாற் செல்வாரைக் கொல்வான் முரசுறைந்து
வெற்றியொடு புட்காணும் வீற்றிருப்ப—முற்று
மிழவு படுமாபோ லில்லங்க டோறுங்
குழவிபா லுண்டிலவே கொண்டு. (சுஉ)

சந்தக் கழற்றூ மரையுஞ் சதங்கையணி
பைந்தளிரு நோவப் பதைத்துருகி—யெந்தாய்
வடந்தாய் களிற்றுய் வழியான வெல்லாங்
கடந்தேகாமோ வென்றூர் கலுழ்ந்து. (சுங)

தூயதன் மக்க டுயர்நோக்கிச் சூழ்கின்ற
மாய விதியின் வலிநோக்கி—யாதுந்
தெரியாது சித்திரம்போ னின்றிட்டான் செம்மை
புரிவான் றுயராற் புலர்ந்து. (சுச)

காத லிருவரையுங் கொண்டு கடுஞ்சுரம்போக்
கேத முடைத்திவரைக் கொண்டுநீ—மாதராய்
வீமன் றிருநகர்க்கே மீளென்றூன் விண்ணவர்முன்
ரூபம் புனைந்தானைத் தான். (சுடு)

குற்றமில் காட்சிக் குதலிலவாய் மைக்தரையும்
பெற்றுக் கொளலாம் பெறலாமோ—கொற்றவனே
கோக்கா தலனைக் குலமகளுக் கென்றுரைத்தா
ணேக்கான் மழைபொழியா னொந்து. (சுசு)

கைதவந்தா னீக்கிக் கருத்திற் கறையகற்றிச்
செய்தவந்தா மெத்தனையுஞ் செய்தாலு—மைதீர்
மகப்பெறு மாநுடர்கள் வானவர்த மூர்க்குப்
புகப்பெறுர் மாதராய் போந்து. (சுள)

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—வின்னடிசிற்
புக்கனையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லாத வர். (சுஅ)

சொன்ன கலையின் றுறையனைத்துந் தோய்ந்தாலு
மென்ன பயனுடைத்தா மின்முகத்து—முன்னங்
குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி. (சுக)

போற்றரிய செல்வம் புனைட் டொடும்போகத்
தோற்றமையும் யாவர்க்குந் தோறுந்த—யாற்றலா
யெம்பதிக்கே போந்தருளு கென்று ளெழிற்கமலச்
செம்பதிக்கே வீற்றிருந்த தேன். (எ)

தினக்கதிர்வேற் கண்மடவாய் செல்வர்பாற் சென்றீ
யெனக்கென்னு மிம்மாற்றங் கண்டாய்—தனக்குரிய
தானந் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து
மானந் துடைப்பதோர் வாள். (எக)

மன்னராய் மன்னர் தமையடைந்து வாழ்வெய்தி
யின்னமுதக் தேக்கி யிருப்பாரோர்—சொன்ன
பெரும்பே டிகளலோர் பித்தரோ யன்றே
வரும்பேபடை மானே யவர். (எஉ)

செங்கோலா யுன்றன் றிருவுள்ள மீதாயி
னெங்கோன் விதர்ப்ப னெழினகர்க்கே—நங்கோலக்
காதலரைப் போக்கி யருளென்றுள் காதலருக்
கேதிலரைப் போல வெடுத்து. (எங)

பேதை பிரியப் பிரியாத பேரன்பின்
காதலரைக் கொண்டுபோய்க் காதலிதன்—றூதைக்குக்
காட்டுநீ யென்றுன் கலங்காத வுள்ளத்தை
வாட்டுநீர் கண்ணிலே வைத்து. (எச)

தந்தை திருமுகத்தை நோக்கித் தமைப்பயந்தா
ளிந்து முகத்தை யெதிர்நோக்கி—யெந்தம்மை
வேறுகப் போக்குதிரோ வென்றூர் விழிவழியே
யாறுகக் கண்ணீ ரழுது. (எந)

அஞ்சனந்தோய் கண்ணி லருவிநீ ராங்கவர்க்கு
மஞ்சனநீ ராக வழிந்தோட—நெஞ்சுருகி
வல்லிவிடா மெல்லிடையாண் மக்களைத்தன் மார்போடும்
புல்லிவிடா தின்றுள் புலர்ந்து. (எசு)

இருவ ருயிரு மிருகையான் வாங்கி
யொருவன் கொண்டேகுவா னெத்து—வருமறையோன்
கோமைந்த னெடியனைய கோதையைக்கொண் டேகின்றன்
மீம னகர்க்கே விரைந்து. (எள)

காத லவர்மேலே கண்ணேடை விண்ணேடு
மூதை யெனதின் றுயிர்ப்போட—யாது
முரையாடா துள்ள மொடுங்கினேன் வண்டு
விரையாடுந் தாரான் மெலிந்து. (எஎ)

சேலுற்ற வாவித் திருநாடு பின்னெழியக்
காலிற்போய்த் தேவியொடுங் கண்ணுற்றான்—நூலஞ்சேர்
கள்ளிவே கத்தரவின் கண்மணிக டாம்பொடியாத்
துள்ளிவே கின்ற சுரம். (எக)

கன்னிறத்த சிந்தைக் கலியுமவன் முன்பாகப் [றிக்கே
பொன்னிறத்த புள்வடிவாய்ப் போந்திருந்தான்—நன்னெ
யஞ்சிப்பா ரீந்த வரசனையுந் தேவியையும்
வஞ்சிப்பான் வேண்டி வனத்து. (அ)

தேன்பிடிக்குந் தண்டுழாய்ச் செங்கட் கருமுகிலை
மான்பிடிக்கச் சொன்ன மயிலேபோற்—றான்பிடிக்கப்
பொற்புள்ளைப் பற்றித்தா வென்றுள் புதுமழலைச்
சொற்கிள்ளை வாயா டொழுது. (அக)

பொற்புள் ளதனைப் பிடிப்பா னளன்புகுதக்
கைக்குள்வரு மாபோற் கழன்றோடி—யெய்க்கு
மினைக்குமா போல விருந்ததுகண் டன்றே
வினைக்குமா றெண்ணினான் மன். (அஉ)

கொற்றக் கயற்கட் கொடியே யிருவேமு
மொற்றைத் துகிலா லுடைபுனைந்து—மற்றிதப் [ன்
பொற்றுகிலாற் புள்வினைக்கப் போதுவோ மென்றுரைத்தா
பற்றகலா வுள்ளம் பரிந்து. (அங)

எற்றித் திரைபொரகொங் தேறி யிளமணலிற்
பற்றிப் பவளம் படர்கிழற்கீழ்—முத்தீன்று
வெள்வளைத்தா யோடுகீர் வேலைத் திருநாடன்
புள்வளைத்தா ணடையாற் போந்து. (அச)

கூந்த லிளங்குயிலுங் கோமாணுங் கொண்டணைத்த
பூந்துகில்கொண் டந்தரத்தே போய்கின்று—வேந்தனை
நன்னுதே தோற்பித்தே ணேனகா ணென்றதே
பொன்னேடு மானிறத்த புள். (அந)

காவிபோற் கண்ணிக்குங் கண்ணியந்தோட் காளைக்கு
மாவிபோ லாடையுமொன் ரூனதே—பூவிரியக்
கள்வேட்டு வண்டுழலுங் கானத் திடைக்கனகப்
புள்வேட்டை யாதரித்த போது. (அசு)

அறம்பிழைத்தார் பொய்த்தா ரருள்சிதைத்தார் மானத்
திறம்பிழைத்தார் தெய்வ மிகழ்ந்தார்—புறங்கடையிற்
சென்றூர் புகுநரகஞ் சேர்வாய்கொ லென்றழியா
னின்றுள் விதியை நினைந்து. (அஎ)

வையந் துயருழப்ப மாயம் பலசூழ்ந்து
தெய்வங் கெடுத்தாற் செயலுண்டோ—மெய்வகையே
சேர்ந்தருளி னின்றதனிச் செங்கோலா யிங்கொழியப்
போந்தருளு கென்றுள் புலர்ந்து. (அஅ)

அந்த நெடுஞ்சுரத்தின் மீதக வாங்கழலும்
வெந்தழலே யாற்றுவான் மேற்கடற்கே—யெந்தை
குளிப்பான்போற் சென்றடைந்தான் கூரிருளாற் பாரை
யொளிப்பான்போற் பொற்றே ருடன். (அக)

பானு நெடுந்தேர் படுகடலிற் பாய்ந்ததற்பின்
கான வடம்பின் கவட்டிலைகண்—மானின்
குளம்பேபய்க்கு நன்னுடன் கோதையொடுந் சென்று
னிளம்பேபய்க்குந் தோன்று விருள். (கூ)

எங்காம் புகலிடமென் றெண்ணி யிருள்வழிபோய்
வெங்கா னகந்திரியும் வேலைதனி—லங்கேயோர்
பாழ்மண் டபங்கண்டான் பால்வெண் குடைநிழற்கீழ்
வாழ்மண் டபங்கண்டான் வந்து. (கூக)

மூரி யிரவும்போய் முற்றிருளாய் மூண்டதாற்
சாரு மிடமற்றுத் தானில்லை—சோர்கூந்தன்
மாதராய் நாமிந்த மண்டபத்தே கண்டுயிலப்
போதரா யென்றான் புலர்ந்து. (கூஉ)

வையமுடையான் மகரயாழ் கேட்டருளுந்
தெய்வச் செவிகொதுகின் சில்பாட—லிவ்விரவிற்
கேட்டவா வென்றழுதாள் கெண்டையங்க ணீர்சோரத்
தோட்டவார் கோதையாள் சோர்ந்து. (கூங)

பண்டை வினைப்பயனைப் பாரிடத்தி லார்கடப்பார்
கொண்ட னிழலிற் குழைதடவுங்—கெண்டை
வழியனீ யென்றான் மனங்கடுங்கி வெய்துற்
றழியனீ யென்று னரசு. (கூச)

விரைமலர்ப்பூ மெல்லணையு மெய்காவல் பூண்ட
பரிசனமும் பள்ளி யறையு—மரைசேசான்
காணினிங் கென்னுக் கலங்கினாள் கண்பனிப்பப்
பூணார் முலையாள் புலர்ந்து. (கூரு)

தீய வனமுந் துயின்று திசைதுயின்று
பேயுந் துயின்றதாற் பேர்யாம—நீயுமினிக்
கண்மேற் றுயில்கை கடனென்றான் கைகொடுத்து
மண்மேற் றிருமேனி வைத்து. (கசு)

புன்கண்கூர் யாமத்துப் பூமிமேற் றான்படுத்துத்
தன்கண் டுயில்வானைத் தான்கண்டு—மென்கண்
பொடியாதா வுள்ளாவி போகாதா னெஞ்சம்
வெடியாதா வென்றான் விழுந்து. (கூஎ)

மூன்றிறனின் மேற்படுக்க மூன்று னையுமின்றி
யின்று துயில விறைவனுக்கே—யென்றனது
கைபுகுந்த தென்னுடைய கால்புகுந்த தென்றழுதாள்
மைபுகுந்த கண்ணீர் வர. (கூஅ)

வீமன் றிருமடந்தை விண்ணவரும் பெற்றிலாத்
தாம மெனக்களித்த தையலால்—யாமத்துப்
பாரே யணையாப் படைக்கண் டுயின்றுண்மற்
றூரே துயரடையா ராங்கு. (கூக)

பெய்ம்மலர்ப்பூங் கோதை பிரியப் பிரியாத
செம்மை யுடைமனத்தன் செங்கோலான்—பொய்ம்மை
விளக்கிற னெஞ்சத்தை வேறுக்கி நின்று
கலக்கினான் வஞ்சக் கலி. (க00)

வஞ்சக் கலிவலியான் மாகத் தராவளைக்குஞ்
செஞ்சுடரின் வந்த கருஞ்சுடர்போல்—விஞ்ச
மதித்ததேர்த் தானை வயவேந்த னெஞ்சத்
துதித்ததே வேறோ ருணர்வு. (கoக)

காரிகைதன் வெந்துயரங் காணுமு னீத்தந்தக்
கூரிருளிற் போவான் குறித்தெழுந்து—ஓரோ
யிருவர்க்கு மோருயிர்போ மலய்தியதோ ராடை
யிதற் கவனினைந்தா னுங்கு. (கஅ)

எண்ணிய வெண்ணை முடிப்ப விகல்வேந்தன்
கண்ணி யதையறிந்து காய்கலியும்—பண்ணினுக்குக்
கேளான தேமொழியை நீக்கக் கிளர்ஒளிசேர்
வாளாய் மருங்கிருந்தான் வந்து (கஆ)

ஒற்றைத் துகிலு முயிரு மிரண்டாக
முற்றுந்த னன்பை முதலோடும்—பற்றி
யிந்தா னிருந்திட் டவணிலைமை நெஞ்சிற்
றெரிந்தா னிருந்தான் றினைகத்து. (கக)

போயொருகான் மீளும் புகுந்தொருகான் மீண்டேகு
மாயர் கொணர்ந்த வடுபோலின்—சீரியல்
கடைவார்தங் கைபோல வாயிற்றே காலன்
வடிவாய வேலான் மனம். (கஎ)

சிந்துரத்தாட் டெய்வ முனிவன் றெரிந்துரைத்த
மந்திரத்தாற் றம்பித்த மாதீர்போன்—முந்த
வொலித்தமேதர்த் தானை யுயர்வேந்த னெஞ்சம்
வலித்தமே தீக்கலியான் வந்து. (கஅ)

தீக்கா னகத்துறையுந் தெய்வங்காள் வீமன்றன்
கோக்கா தலியைக் குறிக்கொண்மி—னீக்காத
காதலன்பு மிக்காளைக் காரிருளிற் கைவிட்டின்
றேதிலன்போற் போகின்றேன் யான். (கஏ)

வந்து மிளமுலையா ளின்னுயிருந் தன்னருளும்
பந்துகிலும் வேழுகப் போயினன்—நீந்தே தன்
றுடைவிரவு நாண்மாலை சூட்டிணை டன்னை
யிடையிருளிற் கானகத்தே யிட்டு. (கo அ)

தாருவெனப் பார்மேற் றருசந் திரன்சுவர்க்கி
மேருவரைத் தேளான் விரவார்போற்—கூரிருளிற்
செங்கா னகஞ்சிதையத் தேவியைவிட் டேகினன்
வெங்கா னகந்தனிலே வேந்து. (கoசு)

நீல மளவே நெகிழ நிரைமுத்தின்
சோல மலரின் கொடியிடையாள்—மேல்வேங்தே
யெங்குற்று யென்ன வினவலோக்கை நீட்டிணை
ளங்குத்தான் காணு தயர்ந்து. (கசo)

உடுத்த துகிலிரந்த தொண்டொடியாள் கண்டு
மடுத்த துயிலான் மறுகி—யடுத்தடுத்து
மன்னே யெனவழைப்பான் மற்றுமவ னைக்காணு
தென்னேயிஃ தென்னென் றெழுந்து. (கசக)

வெய்ய தரைபென்னு மெல்லமளி யைத்தடவிக்
கையரிக்கொண் டவ்விடத்துங் காணுமை—யோகோ
வென்னப்போய் வீழ்ந்தா னினமேதி மென்கரும்பைத்
தின்னப்போ நாடன் றிரு. (கசஉ)

அழல்வெஞ் சிலைவேட னம்புருவ வாற்று
முழலுங் களிமயில்போ லோடிக்—குழல்வண்
டெழுந்தோட வீழ்ந்தா னிருகுழைமேற் கண்ணீர்க்
கொழுந்தோட வீமன் கொடி. (கசஙு)

வான்முகிலு மின்னும் வறுநிலத்து வீழ்ந்ததுபோற்
றூனுங் குழலுந் தனிவிழ்ந்தா—ளேனங்
குளம்பான் மணிகிளைக்குங் குண்டுநீர் காட
னிளம்பாவை கைதலைமே லிட்டு. (ககச)

தைய றுயர்க்குத் தரியாது தஞ்சிறகாங்
கையான் வயிறலைத்துக் காரிருள்வாய்—வெய்யோனை
வாவுபரித் தேரோறி வாவென் றழைப்பனபோற்
கூவினவே கோழிக் குலம். (ககடு)

வான நெடுவீதி செல்லு மணித்தேரோன்
றூன மடந்தைக்குத் தார்வேந்தன்—போனநெறி
காட்டுவான் போலிருள்போய்க் கைவாங்கக் காணுமே
நீட்டுவான் செங்கரத்தை நின்று. (ககசு)

செய்தபிழை யேதென்னுந் தேர்வேந்தே யென்றழைக்கு
மெய்த்துய ரக்கரைகா ணேனென்னும்—பையவே
யென்னென்னு தென்னென்னு மிக்கானின் விட்டேகு
மன்னென்னு வாடு மயர்ந்து. (ககள)

அல்லியந்தார் மார்ப னடித்தா மரையவட
னல்லுயிரு மாசையும்போ றுறுதலு—மல்லுருகி
வேந்தனே யென்னு விழுந்தாள் விழிவேலை
சாய்ந்தநீர் வெள்ளத்தே தான். (ககஎ)

வெறித்த விளமான்காண் மென்மயில்கா ளிந்த
நெறிக்க ணெடிதூழி வாழ்வீர்—பிறித்தெம்மைப்
போனரைக் காட்டுதிரோ வென்னுப் புலம்பிளுள்
வானுடர் பெற்றிலா மான். (ககஅ)

வேட்ட கரியை விழுங்கிப் பெரும்பசியான்
மோட்டு வயிற்றரவு முன்சீறுன்ற—மீட்டதனை
யோரா தருகணைந்தா லுண்டே னறற்கூந்தற்
போரார் விழியாள் புலர்ந்து. (கஉ0)

அங்கண் விசும்பி னவிர்மதிமேற் சென்றடையும்
வெங்க ணரவுபோன் மெல்லியலைக்—கொங்கைக்கு
மேலெல்லாந் தோன்ற விழுங்கியதே வெங்கானின்
பாலெல்லாந் தீயுமிழும் பாம்பு. (கஉக)

வாளரவின் வாய்ப்பட்டு மாயாமுன் மன்னவனின்
றாளடைந்து வாழுந் தமியேனைத்—தோளான்
விலக்காயோ வென்றழுதாள் வெவ்வரவின் வாய்க்கிங்
கிலக்காகி நின்று ளெடுத்து. (கஉஉ)

வென்றிச் சினவரவின் வெவ்வா யிடைப்பட்டு
வன்றுயராற் போயாவி மாள்கின்றே—னின்றுன்
றிருமுகநான் காண்கிலேன் றேர்வேந்தே யென்றாள்
பொருமுகவேற் கண்ணாள் புலர்ந்து. (கஉங)

மற்றெடுத்த தோள்பிரிந்து மாயாத வல்வினையேன்
பெற்றெடுத்த மக்காள் பிரிந்தேதகுங்—கொற்றவனீ
தீதோலுங் காண்குதிரோ வென்றழுதா ணீள்குழற்குக்
காதோலு மொவ்வாள் கலுழ்ந்து. (கஉச)

அடையுங் கடுங்கானி லாடரவின் வாய்ப்பட்
டுடையுமுயிர் நாயகனே யோகோ—விடையெனக்குத்
தந்தருள்வா யென்னுதற்கன் றுமரைக்கை கூப்பிளுள்
செந்துவர்வாய் மென்மொழியா டேர்ந்து. (கஉஞ)

உண்டோ ராழுகுரலென் றெற்றி வருகின்ற
வெண்டோடன் செம்பங்கி வில்வேடன்—கண்டான்
கழுகுவாழ் கானகத்துக் காரரவின் வாயின்
முழுகுவா டெய்வ முகம். (கஉசு)

வெய்ய வரவின் விடவாயி னுட்பட்டே
ணயன்மீ ருங்கட் கபயம்யா—னுய்ய
வருளீரோ வெண்ணை வாற்றினை ளஞ்சி
யிருளீரும் பூணை ளெடுத்து. (கஉள)

சங்க நிதிபோற் றருசந் திரன்சுவர்க்கி
வெங்கலிவாய் நின்றுலக மீட்டாற்போன்—மங்கையைவெம்
பாம்பின்வாய் நின்று பறித்தான் பகைகடிந்த
காம்பின்வாய் வில்வேடன் கண்டு. (கஉஅ)

ஆருயிரு நானு மழியாம லேயாவிப்
போரரவின் வாயிற் பிழைப்பித்தாய்—தேரி
னிதற்குண்டோ கைம்மா றெனவுரைத்தாள் வென்றி
விதர்ப்பன்றான் பெற்ற விளக்கு. (கஉக)

நிந்து நுதலி யெழிலேணைக்கி யேதாதன்
சிந்தை கருதிச் சிலவேட—னைந்தொடிநீ
போதுவா யென்னுடனே யென்றான் புலைநரகுக்
கேதுவாய் நின்று னெடுத்து. (கஉ0)

வேட னணைழப்ப விழிபதைத்து வெய்துயிரா
வாடன் மயில்போ லலமரா—மேவாடிறு
மெறலா மாகச் சுரிகுழல்வேற் கண்ணினீர்
ஆறலா மாக வழுது. (கஉக)

தீக்கட் புலிதொடரச் செல்லுஞ் சிறுமான்போ
லாக்கை தளர வலமந்து—போக்கற்றுச்
சீறு விழித்தான் சிலேவட னவ்வளவி
னீறுய் விழுந்தா னிலத்து. (கஉ)

வண்டமிழ்வா ணர்ப்பிழைத்த வான்குடிபோ றீத்தழன்மீ
மண்டு கொடுஞ்சுரத்தோர் மாட்டிருந்து—பண்டையுள
வாழ்வெல்லாந் தானினைந்து மற்றழுதாண் மன்னிழைத்த
தாழ்வெல்லாந் தன்றலைமேற் றந்து. (கஉஉ)

அவ்வளவி லாதிப் பெருவழியி லாய்வணிக
னிவ்வளவு தீவினையே னென்பாடன்—மெய்வடிவைக்
கண்டாணை யுற்றான் கமலமயி லேயென்று
ணண்டாய வெல்லா முணர்ந்து. (கஉச)

எக்குலத்தா யார்மடந்தை யாதுன்னூர் யாதுன்பேர்
நெக்குருகி நீயழுதற் கென்னிமித்த—மைக்குழலாய்
கட்டுரைத்துக் காணென்றான் கார்வண்டு காந்தாரம்
விட்டுரைக்குந் தார்வணிகர் வேந்து. (கஉரு)

முன்னை வினையின் வலியான் முடிமன்ன
னென்னைப் பிரிய விருங்கானி—லன்னவனைக்
காண தழுகின்றே னென்றுள் கதிரிமைக்கும்
பூணாரம் பூண்டாள் புலர்ந்து. (கஉசு)

சேதி நகர்க்கே திருவைச் செலவிட்டப்
போதிற் கொடைவணிகன் போயினை—னீதி
கிடத்துவான் மன்னவர்தங் கீர்த்தியினைப் பார்மே
னடத்துவான் வட்டை நடந்து. (கஉஎ)

அற்ற துயிலு மறுதொழுகு கண்ணீரு
முற்ற துயரு முடையளாய்— மற்றிருந்தி
னின்றுளைக் கண்டே நிலவேந்தன் பொற்றேவி
யென்றூர் மடவா ரெடுத்து. (கஉஎ)

போயகலா முன்னம் புனையிழையாய் பூங்குயிலு
யாப மயிலு யறியவே— நீயேகிக்
கொண்டுவா வென்றுடன் கொவ்வைக் கனிதிறந்து
வண்டுவாழ் கூந்தன் மயில். (கஉக)

ஆங்கவளு மேக வரசன் பெருந்தேவி
பூங்கழலின் மீதே புரண்டழுதா— டாங்கு
மினவளையா யுற்றது ரெல்லா மெனது
வினவழிகா ணென்றுண் மெலிந்து. (கஉ0)

அந்தா மறையி லவளெயென் றையுற்றுச்
சிந்தா குலமெனக்குத் தீராதாற்— பைந்தொடியே
யுள்ளவா றெல்லா முரையென்று ளொண்மலரின்
கள்ளவார் கூந்தலாள் கண்டு. (கஉக)

என்னைத் தனிடனத்திட் டெங்கோன் பிரிந்தேக
வன்னவனைக் காணு தலமருவே— னிங்ஙகர்க்கே
வந்தே னிதுவென் வரவென்றுள் வாய்புலராச்
செந்தேன் மொழிபதறுச் சோர்த்து. (கஉஉ)

உன்றலைவன் றன்னை யொருவகையா னுடியே
தந்து விடுமளவுந் தாழ்குழலா— யென்றனுட
னிங்கே யிருக்க வினிதென்று ளேந்திழையைக்
கொங்கேயுந் தாராள் குறித்து. (கஉங)

சங்கிவளிவ் வாறிருப்ப வின்னலுழந் தேயெகிப்
பூங்குயிலும் போர்வேற் புரவலனும்—யாங்குற்றூர்
சென்றுணர்தி யென்று செலவிட்டான் வேதியனைக்
குன்றுறழ்தோள் வீமன் குறித்து. (கசச)

ஓடும் புரவித்தேர் வெய்யோ னெளிசென்று
காடு மிடமெல்லா நாடிப்போய்க்—கூடினன்
போதிற் றிருநாடும் பொய்கைத் திருநாடாஞ்
சேதித் திருநாடு சென்று. (கசரு)

தாமஞ்சே ரோதித் தமயந்தி னின்றூலை
யாமென் றறியா வருமறையோன்—வீமன்
கொடிமேல் விழுந்தழுதான் கொம்புமவன் செம்பொ
னடிமேல் விழுந்தழுதா ளழுது. (கசசு)

மங்கை விழிநீர் மறையோன் கழல்கழுவ
வங்கவன்றன் கண்ணீ ரவளுடன்மேற்—பொங்கக்
கடல்போலுங் காதலார் கையற்றூர் தங்க
ளுடல்போலு மொத்தா ருயிர். (கசள)

மாரி பொருகூந்தன் மாதராய் நீபயந்த
காரிகைதான் பட்டதுயர் கண்டாயோ—சோர்குழலும்
வேணியாய் வெண்டுகிலும் பாதியாய் வெந்துயருக்
காணியாய் நின்றூ ளயர்ந்து. (கசஅ)

தன்மக ளாவ தறியாத் தடுமாறுப் [ரைக்
பொன்வடிவின் மேலழுது போய்வீழ்ந்தாள்—மென்மல
கோதிப்போய் மேதி குருகெழுப்புந் தண்பணைசூழ்
சேதிக்கோன் றேவி திகைத்து. (கசக)

களிப்பு மீக்கூர்ந்து செருக்கு மேற்கொண்டு புல்லறிவாளர் இருப்பராதலால் நல்ல உறுதிகளை நல்லோர் கயந்து சொல்லினும் அவர் உணர்ந்து கொள்ளார். இவ்வுண்மை இரணியன், இராவணன், சூரபன்மன் முதலாயினர்கட் காணலாம். தன் அண்ணன் அல்வழியில் பிரிந்ததை யறிந்து சிங்கமுகன் அகம் மிக வருந்தி எம்பெருமான் பெருமையை எவ்வளவோ எடுத்துக்காட்டி எதிர் வோடு அறிவுறுத்தியும அவன் அறியமாட்டாமையை இவனை அவமதித்து அறிவில்லாதவனே யென்று இழித்துப் பெரிதும் வைதான்; அறிவுகாட்டப்புகுந்த இவன் மிகவும் நொந்து புலவறிவின் தீமையை யுரைத்தனன். அதன்பின்பு இவன் உரைத்த வற்றுள் சில இதனடியில் வருகின்றன.

உறுதியை உரைத்தனன் உணர் விலாதவன்
வறிதென இகழ்ந்தனன் வருவதோர்கிலன்
இறும்வகை நாடினன் யாதோ புந்தியை
அறிவிலார்கரு உரைப்பவர் அவரிற் பேதையோர். (க)

உய்த்தனர் தேன்மழை உதவிப் போற்றினும்
கைத்திடல் தவிருமோ காஞ்சிரங்கனி
அத்தகவல்லமிவர அறிவிலாதவன்
சித்தம தினர்வகை தெருட்டுகின்றதே. (உ)

தொலைகருங் திருவுடைச் சூரன் புந்தியைக்
கலக்கினும் உய்வகை கருதுகின்றிலன்
அலகணுற்றிருந்து காம் இரங்கி யாவதென்
விலக்கரும் விதியையாம் வெல்ல வல்லமோ. (கந்தம்.) (ங)

உய்த்துணராத்தினுய புல்லறிவினர உணர்ந்து கொள்ளாராய் இகழ்ந்து விடுவர் என்பதும், காணுகார்க் காட்டுவார் தாமே காணுராய்க்கலங்கி நிற்பர் என்பதும் இவற்றுள் விளங்குதல் காண்க.

அன்றின்று அகன்றசருக்கி நிற்கும் புல்லார்க்கு நல்லறிவு சொல்லல் அல்லலாகுமாதலால் அங்ஙனம் சொல்லலாகா தென்பது கருத்து.

யென்றதற்குப் பொருள் இங்கே தக்க னென்பது; அக்கினிதேவ னென் போருமுளர்'' என்பது பழைய குறிப்புரை. ஆய்ந்து நல்லன கொள்க. யூப தண்டு - யாகத்தூண் தண்டினைப் பிடுங்கியடித்துத் துரத்தினர் என்பது. விவிதம் - வேறுபாடு முத்தழல் - ஆகவநீயம், காருகபத்தியம், தெற் கிலங்கி என்ற மூன்று தீவகைகள். நீர்பெய்து என்பதை மறைத்த சொல் என்பாரும் உளர். பொய்ப்பருந்து - யாகத்திற்குப் பருந்து வடிவமாகச் செய்த ஒன்று. மடா - பெரும்பானை. அடா என்பது அடாத, அடுக்காத என்ற பொருள் தரும். சமைக்காத, உண்ணத் தகாத என்று இரு பொருள் களையும் தரும். அற என்ற - ஒன்றும் இல்லாமல் முழுவதையும். மாலை - வரிசை. நாகம் - பாம்புகள். பாம்புகளை மாலையாகப் போட்ட மார் புடையவர் மேகம்போல நின்று என விரித்துப் பூத கணங்கள் என வரு வித்துக் கொள்க. படைகள் இத்தனையும் செய்து நின்றன. 502 பாட வேறுபாடு. ''நாமகள் நாசியுதிர்த்து ரோகணி ரோமராசி யளகம் சுலா வியே'' என்றபாடம் நன்று. (உ0-உசுட)

சிவபெருமான் இறந்தவர்களை எழுப்பி மீண்டும் போர்செய்வித்தல்

511. விழுந்தார ணுதிகட்கு மீளவாழ் நாள்கொடுத்
தெழுந்துபோர் தொடங்குகென்று குன்றவில்லி யேவவே.

உசுள

வேறு

512. சிரமுஞ் சிரமுஞ் செறிந்தன
சரமுஞ் சரமுந் தறிப்பவே. உசுஷ

513. கனமுங் கனமுங் கனைத்தன
சினமுஞ் சினமுஞ் சிறக்கவே. உசுக

514. கடையுங் கடையுங் கலித்தன
தொடையுந் தொடையுந் துரப்பவே. உஎ0

515. தாருந் தாருந் தழைத்தன
தேருந் தேருந் தீளப்பவே. உஎக

516 தோலுந் தோலுந் துவைத்தன
கோலுங் கோலுங் குளிப்பவே. உஎஉ

517. தோளுந் தோளுந் தொடங்கின
தாளுந் தாளுந் தரிப்பவே. உஎங

518. கிரியுங் கிரியுங் கிடைத்தன
கரியுங் கரியுங் கடுப்பவே. உஎச

செல்வர், தணமையிற் படர்க்கை வந்த இடவழுவமைதி; செல் உழி - செல்லுழி, 'மெய்யீற் றுடம்படுமெய்' என்பர் நச். உடம்படு மெய்யல்லாத மெய். (நன். உயிர். 13 உரை)

9. ஒளி நிரூன் - தன்னிடத்துப் பிறர்க்குள்ள மதிப்பை நிலைக்கச் செய்யாமலும், துன் அரும் கேளிர் - பெறுதற்கரிய சுற்றத்தார், கொன்னே - வீணாக.

ஒளியாவது ஒருவன் 'தான் உளனெய காலத்து மிக்குத் தோன்றுதலுடைமை' (குறள் 971 உரை) புகழாவது இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப்பயனாகி, இவ்வுலகின்கண் நிகழ்ந்து இறவாதுநிற்குங் கீர்த்தி. அஆ!, அருளின்கட் குறிப்பு, இது விட்டிசைத்துத் தீளக்கியைய முதற்கண் தனிக்குறில் நேரசையாக வந்தது. இழந்தான் - துணிவுபற்றி எதிர்காலம் இறந்த காலமாக வந்தது. துன்னியகேளிர், அருங்கேளிர் என்க.

10. வான் - மேகங்கள், தோய் - தவழப்பெற்ற, செற்றும் - வருத்தியும், வைத்து ஈட்டினர் - பொருளை வைத்துக் குவித்தவர், உய்த்து - பற்பல மலர்களினின்றுந் தேனை எடுத்துக் கொண்டு வந்து, ஈட்டும் - பின்பு இழக்கின்றதற்குச் சேர்க்கும், கரி - சாட்சியாகும்.

'வான்தோய் மலைநாட' எனவே, அம்மலை தான் ஓரிடத்திலும் நிலைத்திராது காற்றுச் செலுத்தும் வழிச் செல்லுதல்போற் செல்வமும் ஊழினால் அலைக்கப் பெற்று அது செலுத்தும் வழிச் செல்லும் என்று தொனித்தல் காண்க.

(2) 'இளமை நிலையாமை'யாவது இளமைப்பருவத்து நிலையாமை யுணர்த்துவதாம். இங்கே இளமை என்றது பதினாறு வயது தொடங்கி முப்பத்திரண்டு வரையு முள்ளதாய் விடயங்களில் மயங்குதற்கேற்ற யௌவனத்தை என்க. செல்வ மனுபவித்தற்குரிய காலம் இளமையாகலின் இது செல்வ நிலையாமையின் பின் வைக்கப்பட்டது.

11. குழவி இடத்தே - இன்பநுகர்தற்குரிய இளமைப் பருவத்திலேயே, புரைதீர - குற்றம் நீங்காத, மன்ற - நிலை பெறுத லில்லாத, இன்னுங்கு - துன்பத்தோடு.

இன்னுங்கு ஒரு சொன்னீர்மைத்து. பதிறைளவும் கலை நிரம்பாவாதலின் குழவி என்று பெயர் என்பது பதுமனூர் விருத்தி. என்று, வினைப்பொருண்மை குறித்து வந்தது என்றூர் நச்சினார்க்கினியர் (தொல். சொல். 261). நரை என்பது சண்டு முதுமைப் பருவத்தை உணர்த்திற்று.

12. நட்பு நார் - நட்பினர்வைத்த பாசம், நல்லாரும் அஃகினர் - மகளிரும் அன்பு குறைந்தார்கள்; அற்பு தளையும் அவிழ்ந்தன - புத்திரர் முதலாயினோர் உன்பால் வைத்த அன் பாகிய கட்டும் தளர்ந்து போயின; ஆழ்கலத்து அன்ன கலி - கடலில் மூழ்கா நிற்கும் மரக்கலத்திலுள்ளார் கதறும் பேரொலி போலும் கூக்குரல், உள்காணுய் - இவை யனைத்தையும் உன் னுள்ளே ஆராய்ந்து பார்; ஊதியம் - பயன்.

வாழ்தலின் - இன் ஐந்தனுருபு எதுப் பொருட்டு. 'ஆழ்கலத் தன்ன கலுழ்' என்றும் பாடம். கலுழ் - துன்பம்.

13. சோர்ந்த - தம்மை யறியாமல் சரீரத்திருந்து வடி கின்ற, நடையினராய் - சலமலங்களை யுடையராய், பண்டம் - இச் சரீரமாகிய பொருள், பழிகாறும் - பிறராற் பழிக்கப்படு மளவும், இல் செறிந்து - இல்வாழ்க்கையிற் பொருந்தி, படரும் கண்ணினர்க்கு - ஒழுகும் கருத்துடையார்க்கு, எமநெறி - தமக்கு அரணுகிய தவநெறியில், படரும் ஆறு - துறந்து செல்லும் வகை, இல்லை என்பதாம்.

நடை - சலமலங்கள் என்பது ஓர் பழையவுரை; அவற்றுக்கு இயக்கம் என்றும் பெயர் வழங்குதல் ஒப்பிடத்தக்கது; "இயக்கம் இரண்டு" என்றூர் ஆசாரக் கோவையினும் (7). தளர்ந்த நடை யினராய் என்னவுமாம். பழிகாறும் - செயப்பாட்டு வினைப் பொருளில் வந்த செய்வினை, ஏ - தேற்றம்.

14. மம்மர் கொள் - காம மயக்கங்கொண்ட. அடமனை - தாய், அணங்கு ஆகும் - காம நோயுண்டாக்குகின்ற தெய்வப் பெண்ணுய் இருப்பள்காண்.

இப் பாடல், கையில் ஊன்றுகோற் கொண்டு நடக்கின்ற கூனற் கிழவி ஒருத்தியைக் காட்டி, 'இவள் இப்போது பிடித்

534 மாக்கணங்கொள்படை வானநாடனைத்
தாக்கணங்குக டொடைப்படுப்பவே. உகo

535. அடப்படப்பொரு தமர்தம்படை
படப்படப்ரசா பதிபடைக்கவே. உகக

(பொ - ரை) இனமான மலைகள் எல்லாம் இடிந்தன. பூமி வட்டம் அழிந்தன. மேகமும் இடியும் நீர் அற்றன; முழக்கம் நீங்கின. எழுகடலும் வற்றின; மேகங்களும் விண்மீன்களும் உதிர்ந்தன. புவிகள் முழுவதும் நடுங்கின. மாசுபடியும்படி வானத்துச் சிதெரிந்தன. பெரும்பாம்புகள் எலவையும் ஓடியொளிந்தன. குலமலைகள் எல்லாம் பூமிக்குட் புதைந்தன. பூதங்களின் கால் மிதித்தலால் திசைகள் விழுந்தன பூமியைச் சூழ்ந்துநின்ற சக்கரவாளமலை சிதைந்தது. பூமியுட்புக்கழுந்திப போயின மலைகள் மட்டுமோ? பல பொருப்புக்களுமே புதைந்தன. காடுகள் பல அழிந்தன. பல குலமலைகளும் விழுந்தன. தேவர் பிணங்கள் மிகுந்தன. அப் பிணங்களைத் தின்று பூதபைசாசங்கள் உடல் பருத்தன. கழுகுகளும் பேய்களும் ஆங்குக் கிடந்த பிணங்கள் பலவற்றையும் உண்டன. மேகம்போல முரசு முழங்கின. சங்குகளும் எதிர் எதிராக முழங்கின. குதிரைகளும் யானைகளும் ஒன்றுசேர்ந்து எதிர்க்க யானைகட்குப் பகையாகிய பாகலகோய் போன்ற பசாசுகள் கொன்று தின்றன. வெள்ளிமலையில் சந்திரன் போன்ற குடை கவித்து வந்தவர் இறந்தனர்; ஒரு கொள்ளிவாயுடைய கீண்ட பசாசு ஒன்று தினையக் கொறுத்தியதால். வெள்ளிமலையைப் போன்ற கந்தருவர் உலகத் துளள குதிரைக் கூட்ட முழுவதையும் புரட்டின பேய்கள். குதிரை யானை முதலிய கூட்டத்தைக் கொண்ட படையுடைய வான காட்டினரை (தேவரை) த் தின்று வருத்தும் பேய்கள் கொன்றன. இவ்வாறு கொல்லத் தேவர் படை இறப்பதைக் கண்டு மனம் பொறுமல் இறக்க இறக்கப் பிரமன் படைத்துப் படைத்து விட்டான்.

(வி - ம்.) குவலயம் - பூமி. வலயம் - வட்டம். எழிலி - மேகம். அசனி - இடி அற்றன என்பது மேகங்களின் நீர் அற்றன எனவும் அசனியில் முழக்கம் அற்றன எனவும் கொள்க. பெருவாரி - பெருங் கடல். உடு - விண்மீன், (நட்சத்திரம்). புடவி - பூமி. மாசு + உண = மாசுண - துசிபடிய. உண்ண என்பது உண எனத் தொகுத்தலாயிற்று. மாசுணம் - பெரும்பாம்புகள் நெற்றி என்பது வானமுகட்டைக் குறித்தது. அண்டமுகடு நெரிந்தன எனக. மிதியிலே - பேய்பூதங்கள் கால்களால் மிதித்தலால். சூழ்வருதிகிரி - பூமியைச் சுற்றிய சக்கரவாளமலை. சிலை கொல் - சிலைமட்டுமோ? கொல் ஐயப்பொருளில் வந்த இடைச்சொல். சிலையைச் சிறு குன்று எனவும், பொருப்பைப் பெரிய மலை எனவும் கொள்க. அடவிகள் - காடுகள். மறிந்தன - மடங்கி விழுந்தன. அமரர் -

மூன்னீர் மடவார் முறுவற் றிரள்குவிப்ப
நன்னீ ரமோதத்தி நகரடைந்தான்—பொன்னீர்
முருகுகுடைக்குந் தாமரையின் மொய்ம்மலரைத் தும்பி
யருகுடைக்கு நண்ணட் டரசு. (உச)

மான்மேறர்த் தொழிற்கு மடைத்தொழிற்கு மிக்கோனென்
றான்மேறய்க்கும் வேலா னுயர்ந்றவத்—தேன்மேறுய்க்குந்
தார்வேந்தற் கென்வரவு தானுரைமி னென்றுரைத்தான்
மேறர்வேந்தன் வாகுகனுய்ச் சென்று. (உஙி)

அம்மொழியைத் தூத ராசற் கறிவிக்கச்
செம்மொழியாத் தேர்ந்ததனைச் சிந்தித்தே—யிம்மொழிக்
தக்காணை யிங்கே தருமி னெனவுரைப்ப [குத்
மிக்கானுஞ் சென்றான் விரைந்து. (உசு)

போய்யடையாச் சிந்தைப் புரவலனை நோக்கித்தான்
செய்ய முகமலர்ந்து தேர்வேந்த—னையாநீ
யெத்தொழிலின் மிக்கனைகொல் யாதுன் பெயரென்றான்
கைத்தொழிலின் மிக்கானைக் கண்டு. (உஎ)

அன்ன மிதிப்ப வலர்வழியுந் தேறல்போய்ச்
செந்நெல் வினைக்குந் திருநாடர்—மன்ன [ருன்
மடைத்தொழிலுந் தேர்த்தொழிலும் வல்லென்யா னென்
கொடைத்தொழிலின் மிக்கான் குறித்து. (உஅ)

என்னை யிருங்கானி னீத்த விகல்வேந்தன்
றன்னைநீ நாடுகெனத் தண்டோகாதை—மின்னுப்
புரைகதிர்வேல் வேந்தன் புரோகிதனுக் கிந்த
வுரைபகர்வ தானு ளுணர்ந்து. (உக)

காரிருளிற் பாழ்மண்ட பத்தேதன் காதலியைச்
சோர்துயிலி னீத்த றுணிவன்றே—தேர்வேந்தற்
கென்றறைந்தா னேர்நின் றெதிர்மாற்றந் தந்தாரைச்
சென்றறிந்து வாவென்று டேர்ந்து. (நூ0)

மின்னுமி மால்வரையும் வேலையும் வேலைசூழ்
நன்னுடங் கானகமு நாடினன்—மன்னு
கடந்தாழ் களியானைக் காவலனைத் தேடி
யடைந்தா னயோத்தி நகர். (நூக)

கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
போனதூஉம் வேந்தற்குப் போதுமோ—தானென்று
சாற்றினனந் தவுரை தார்வேந்தன் றன்செவியி
லேற்றினன் வந்தா னெதிர். (நூஉ)

ஒண்டொடியை தன்னை யுறக்கத்தே நீத்ததூஉம்
பண்டை விதியின் பயனேகாண்—டண்டரளப்
பூத்தாம வெண்குடையான் பொன்மகளை வெவ்வனத்தே
நீத்தானென் றையுறே னீ. (நூங)

எங்க ணுறைந்தனைகொ லெத்திசைபோய் நாடினைகொல்
கங்கைவள நாட்டார்தங் காவலனே—யங்குத்
தலைப்பட்ட வாறுண்டோ சாற்றென்றுள் கண்ணீ
ரலைப்பட்ட கொங்கையா ளாங்கு. (நூச)

யாக்கினன் மன்னவனை யொப்பான் மறித்தொருகா
லாக்கையே நோக்கி னவனல்லன்—பூக்கமழுங்
கூந்தலாய் மற்றக் குலப்பாக னென்றுரைத்தா
னேந்துநூன் மார்ப னெடுத்து. (நூஞ)

மீண்டோர் சுயம்வரத்தை ஸீமன் றிருமடந்தை
பூண்டாளென் றந்தணரீ போயுரைத்தா—னீண்ட
கொடைவேந்தற் கித்தூரந் தேர்க்தீகாலங் கொள்வான்
படைவேந்த னென்றுள் பரிந்து. (கூசு)

எங்கோன் மகளுக் கிரண்டாஞ் சுயம்வரமென்
றங்கோர் மூரசு மறைவித்தான்—செங்கோலா
யங்ஙாளு ஙாளை யளவென்று னந்தணன்போய்த்
தென்னளுஞ் தாராணைச் சேர்ந்து. (கூஎ)

வேத மொழிவாணன் மீண்டு சுயம்வரத்தைக்
காதலித்தாள் ஸீமன்றன் காதலியென்—றோதி
னென்செய்கோ மற்றிதனுக் கென்று னிகல்சிறு
மின்செய்த வேலான் விளைந்து. (கூஅ)

குறையாத கற்பினுள் கொண்டானுக் கல்லா
லிறவாத வேந்திழையா ளின்று—பறிபீறி
நெல்லிற் பருவரா வோடு நெடுஙாடா
சொல்லப் படுமோவிச் சொல். (கூகூ)

என்மே லெறிகின்ற மாலை யெழினளன்றன்
முன்னே விழுந்ததுகாண் முன்னுளி—னன்னதற்குக்
காரணந்தா னீதன்றே வென்றுன் கடாஞ்சாரியுமை
வாரணந்தா னன்னுன் மதித்து. (சஂ)

முன்னை வினையான் முடிந்தமோ தா மொய்குழலா
ளென்னைத்தான் காண விஞ்சைந்தமோ தா—தன்மரபுக்
கொவ்வாத வார்த்தை யுலகத் துரைப்பட்ட
தெவ்வாறு கொல்லோ விது. (சக)

நுகர்விக்கும் உயிராகிய கூத்தாடி, வெளிப்பட்டுச் சென்று விட்டால், அவன் வாழ்ந்திருந்த நடன சாலையாகிய உடலை நாரினாற்கட்டி இழுத்தாலென்ன? நன்முக ஆடையாபரணங்களை ஆராய்ந்தணிந்து குழிகளில் புதைத்து வைத்தாலென்ன? அவ்வாறன்றிக் கண்டகண்ட இடங்களில் எறிந்து விட்டாற்முனென்ன? கண்ட பலரும் பழித்தாற்முனென்ன?

கூத்தாட வேண்டிப் பலவகையாகிய வேடங்களை மேற்கொண்டுவந்து நாடகமாடி அந்நாடக முடிந்த பிறகு தாம் மேற்கொண்டிருந்த வேடத்தை ஒழித்துச் செல்லுங் கூத்தரைப்போல் வினைப்பயனை அனுபவிப்பது காரணமாக இருவினைக்கு ஈடாகிய பலவகைப்பட்ட உடல்களைத் தாங்கி அந்த அனுபவம் நீங்கியவுடன் தான் மேற்கொண்ட உடலைவிட்டுச் செல்லுகின்ற உயிர் இங்குக் கூத்தனென்று உவமிக்கப்பட்டமை காண்க. பார்த்த உழி என்பது பார்த்துழி என்று தொகுத்தல் விகாரம் பெற்றது. பிணத்தை ஈர்த்தல், அடக்கல், பெய்தல் முதலியன சிற்சில சமயத்தாரின் ஆசாரம். மணிமேகலை, சக்கரவாளக்கோட்டம் முரைத்த காதையைப் பார்க்க.

27. மழைநீரில் தோன்றி யழிகின்ற சுமிழியைப்போல் பலமுறையும் உண்டாகி அழியும் தன்மையுடையது இவ்வுடம்பென்று நினைத்து, பிறவியாலுண்டாகும் மயக்கத்தினை, யாம் தீர்ப்போம், என்று உணரும் கலக்கமில்லாத நல்லறிவையுடையாரை இப்பெரிய வுலகத்தில், ஒப்பவர் யாவருளர்?

28. உடம்பானது மலைமேல் அசைந்துகொண்டிருக்கிற மேகத்தைப் போலக் காணப்பட்டு, தோன்றிய அப்பொழுதே, நிலைபெறுதலின்றி நீங்கிவிடும்; ஆதலால், உடம்பை நல்வினை காரணமாக உறுதிப்பாடுள்ளதாக அடைந்தவர்கள் தாம் அடைந்துள்ள உடம்பிலை பெறுதற்குரிய பயனாகிய அறத்தைச் செய்துகொள்ளக் கடவர்.

உறுதிப்பாடாவது தேகத்தை நோயின்மை முதலிய குறைகளின்றிப் பெற்றிருத்தல். அதனை எய்தல் அரிதென்பார் யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவரென்முர். யாக்கையால் பயனுவது, அறம் செய்தல். மற்று - வினைமாற்றுப் பொருளில் வந்தது.

வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட் டெங்கோமான்
றண்டார் புனைசந் திரன்சுவர்க்கி—கொண்டாடும்
பாவலன்பா னின்ற பசிதீபால நீங்கிற்றே
காவலன்பா னின்ற கலி. (சஎ)

ஆமை முதுகி லலவன் றுயில்கொள்ளுங்
காமர் நெடுநாடு கைவிட்டு—வீமன்றன்
பொன்னகரி சென்றடைந்தான் போர்வேட் டெழுங்கூற்ற
மன்னகரி யொன்றுடையா னுங்கு. (சகூ)

வெற்றித் தனித்தேரை வீமன் பெருந்தேசின்
முற்றத் திருத்தி முறைசெய்யுங்—கொற்றவற்குத்
தன்வரவு கூறப் பணித்துத் தனிப்புக்கான்
மன்னிரவு தாரான் மகிழ்ந்து. (நo)

கன்னி ந்றுந்தேறன் மாந்திக் கமலத்தின்
மன்னித் துயின்ற வரிவண்டு—பின்னையும்போய்
நெய்தற் கவாவு நெடுநாட நீயென்பா
லெய்தற் கவாவியவா றென். (நக)

இன்றுன்னைக் காண்பதோ ராதரவால் யானிங்ஙன்
மன்றன் மலர்த்தாராய் வந்தடைந்தே தனென்று
ளெளியார்வேற் கண்ணெண்மே லுள்ளந் துரப்பத்
தெளியாது முன்போந்த தேசய். (நஉ)

ஆதி நெடுந்தேர்ப் பரிவிட் டலைவயாற்றிக்
கோதி லடிசிற் குறைமுடிப்பான்—மேதிக்
கடைவாயிற் கார்நீலங் கண்விழிக்கு நாடன்
மடைவாயிற் புக்கான் மதித்து. (நஎ)

ஆதி மறைநூ லனைத்துந் தெரிந்துணர்ந்த
நீதி நெறியாளர் நெஞ்சம்போல்—யாது
நிரப்பாம லெல்லா நிரம்பிற்றே பொற்றேர்
வரப்பாகன் புக்க மனை. (நச)

இடைச்சுரத்திற் றன்னை யிடையிருளி னீக்த [தொழில்கள்
கொடைத்தொழிலா னென்றயிர்த்த கோமான்—மடைத்
செய்கின்ற வெல்லாந் தெரிந்துணர்ந்து வாவென்ரு
ணைகின்ற நெஞ்சா ணையந்து. (நந)

கோதை நெடுவேற் குமரனையுந் தங்கையையு
மாதி யரச னருகாகப்—போத
விளையாட விட்டவன்றன் மேற்செயலை டென்ரூள்
வளையாடுங் கையான் மதித்து. (நசு)

மக்களைமூன் காணு மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—மக்காணீ
ரென்மக்கள் போல்கின்றீர் யார்மக்க ளென்றுரைத்தான்
வன்மக் கனியாணை மன். (நஎ)

மன்ன னிடதத்தார் வாழ்வேவந்தன் மக்கள்யா
மன்னைதனைக் கான்விட் டவனெக—விங்ககர்க்கே
வாழ்கின்ரு மெங்கள் வளநாடு மற்றுருவ
ளுள்கின்று னென்று ரழுது. (நஅ)

ஆங்கவர் சொன்ன வுரைகேட் டழிவெய்தி
நீங்கா வுயிரோடு நின்றிட்டான்—பூங்காவின்
வள்ளம்போற் கோங்கு மலருந் திருநாட
வுள்ளம்போற் கண்ணீ ருகுத்து. (நகூ).

உங்க ளரசொருவ ளுளதீ ரோடிப்போந்
திங்க ணுறைதக லிழுக்கண்டீ ரு—செங்கை
வளவரசே யென்றுரைத்தான் மாதவத்தாற் பெற்ற
விளவரசை சோக்கி யெடுத்து. (கூ0)

நெஞ்சாலிம் மாற்ற நினைந்துரைக்க நீயல்லா
தஞ்சாரோ மன்ன ரடுமடையா—வெஞ்சாது
தீமையே கொண்ட சிறுதொழிலா யெங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி (கூக)

எந்தை கழலிணையி னெம்மருங்குங் காணலாங்
கந்து சுளியுங் கடாக்களிற்றின்—வந்து
பணிமுடியிற் பார்காக்கும் பார்வேந்தர் தங்கண்
மணிமுடியிற் சோய்ந்த வடு. (கூஉ)

மன்னர் பெருமை மடைய ரறிவரோ
வுன்னை யறியா துரைசெய்த—வென்னை
முனிந்தருள லென்று முடிசாய்த்து நின்றான்
கனிந்துருகி நீர்வாரக் கண். (கூங)

கோற்றக் குமரனையுங் கோதையையுந் தான்கண்டு
மற்றவன்சொ னுங்குரைத்த வாசகத்தை—மூற்று
மொழிந்தாரம் மாற்ற மொழியாத முன்னை
யழிந்தாள் விழுந்தா ளழுது. (கூச)

கொங்கை யளைந்து குழறிருத்திக் கோலஞ்செ
யங்கை யிரண்டு மடுபுகையா—லிங்ஙன்
கருகியவோ வென்றழுதாள் காதலனை முன்னைட்
பருகியவேற் கண்ணுள் பதைத்து. (கூடு)